மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ., பத்திராதிபர்

G. A. VaidyaRaman, B. A. EDITOR.

புஸ்தகம் 4. Vol. 4. | பரீதாபி௵ வைகாசி௴, MAY, 1912. | ஸஞ்சிகை 5. No. 5.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		Foreign. Rs. A. P.
Per annum ...	4 0 0	... ...	6 0 0
Single copy ...	0 6 0	... ...	0 8 0
Sample copy ...	0 2 0	... ...	0 3 0

RATES OF ADVERTISEMENT.

1 Page	... 5 0 0	per month.
½ do	... 2 8 0	do
¼ do	... 1 4 0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்நிய நாடு.
வருஷம் 1 க்கு ...	4 0 0	...	6 0 0
தனிப்பிரதி ...	0 6 0	...	0 8 0
மாதிரி காபி ...	0 2 0	...	0 3 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம்	ஒன்றுக்கு	5 0 0
½ பக்கத்திற்கு	,,	,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,,	,,	1 4 0

வியாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். எவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ்டவுன், மதராஸ்,

EDITORIAL NOTES.
பத்திராதிபர் குறிப்புகள்.

Britain's Gain From India.

இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குக் கிடைக்கும் லாபம்.—இந்த விஷயமாக கர்னல் ஸர். எப். எச். ஹோல்டிச் என்பவர் இங்கிலாந்தில் "வீக்லி க்ரானிக்கிள்" என்னும் ஒரு பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். அதின் ஸாராம்சம் பின்வருமாறு:—முதலாவது, வியாபாரத்தில் ஸம்பாதிக்கும் பணத்தைத் தவிர அநேக இங்கிலீஷ் ப்ரஜைகள் இந்தியாவில் உத்தியோகம் செய்தும் பென்ஷன்பெற்றும் ஸம்பாதித்த பணத்தை இங்கிலாந்தில் செலவு செய்கிறார்கள். இதனால் இங்கிலாந்துக்கு உண்டாகும் பணப்பெருக்கைச் சொல்லிமுடியாது. வியாபார விஷயமாகக் கிடைக்கும் லாபத்தைப்பற்றிப் பேசும்பொழுது இந்தியாவிற்குப் போகும் மார்க்கம் யார்வசத்தில் இருக்கிறதோ அவர்களுக்கே உலகத்திலுள்ள எல்லா தேசத்தவர்களைப் பார்க்கிலும் உன்னத பதவி யென்று கடவுள் ஏற்படுத்தியிருக்கிறார்போலும். மேற்கு தேசங்களிலிருந்து கப்பல் மூலமாய் இந்தியாவிற்கு வருவது ஏற்பட்டவுடனே, டச்சுக்காரர்களும், போர்ச்சுகல் தேசத்தாரும், ப்ரெஞ்சுக்காரரும், இங்லீஷ்காரரும் எல்லாரும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டு கடைசியாக இங்கிலீஷ்க்காரர்கள் வெற்றிபெற்று இந்தியா வியாபாரத்தைக் கைப்பற்றினார்கள். அதனால் இங்கிலாந்து உன்னத பதவி அடைந்து வெள்ளியும் தங்கமுமாக வாரிக் கொட்டிக்கொண்டுவருகிறது. மேற்சொன்ன வகைகளில் இங்கிலாந்துக்குக் கிடைக்கும் லாபங்களெல்லாம் ஸர்க்கார்க் கணக்குகள் மூலமாய் வெளிப்படாது. அவைகளிலிருந்து கொஞ்சந்தான் தெரியும். இன்னொருவித நன்மை இங்கிலாந்துக்குண்டு. இந்தியா இங்கிலாந்துக்கு உட்பட்டிருப்பதால் அதை ஆளுவதற்காக அநேக கவர்னர், கலெக்டர்போன்ற தேச நிர்வாஹிகளும், ராணுவ வீரர்களும், இந்தியாவில் வேலைசெய்து புகழ்பெற இடமுண்டாகிறது.

The Fertility of Indian Soil.

இந்தியா நிலங்களின் செழுமை.—இந்தியாவில் விவஸாய இலாகாவில் தலைவராகிய பர்னார்டு கவென்ட்ரி என்பவர் மேற்சொன்ன விஷயமாக ஸமீபத்தில் ஒரு ஆராய்ச்சி செய்தார். நிலம் முன்காலத்தைப்போல் விளைவதில்லையென்றும், வரவர விளைவு குறைந்து வருகிறதென்றும், அநேகம்பேர்கள் சொல்லி வருகிறார்கள். இது வாஸ்தவந்தானா வென்று அந்தந்த மகாணத்து விவஸாய டைரெக்டர்களை ரிபோர்ட்டு செய்யும்படி மிஸ்டர் கவென்ட்ரி கேட்டுவிட்டார். கிடைத்த பதில்களைக்கொண்டு ஸ்திரமாக ஒன்றும் சொல்லக் கூடவில்லை. ஆனாலும் அடியிற்கண்ட விஷயங்கள் தெளிவாய் ஏற்பட்டதாக மிஸ்டர் கவென்ட்ரி எழுதுகிறார். அவைகளாவன:—இந்தியாவில் கொழுத்த பூமிகளை ஸாகுபடிக்குக் கொண்டுவந்த சிலகாலத்திற்குப் பிற்பாடு அவைகளின் வளம் குறைந்து கொண்டே போவதில்லை. அது ஒரேவிதமாகவே இருந்துகொண்டுவருகிறது. இன்னும் சொல்லப்போனால் ஸரியாகப் பராமரிப்பு இருக்கும் பக்ஷத்தில் வளம் அதிகமாகக்கூடும்.

2. ஸராஸரியில் நிலத்தின் விளைவு குறைந்திருப்பதற்குக் காரணம் அநேக சப்பையான நிலங்கள் ஸாகுபடிக்கு வந்திருப்பதால் இருக்கலாம். ஸராஸரி குறைந்திருப்பதைக் கொண்டு நிலத்தின்வளம் குறைந்து விட்டதென்று சொல்லக்கூடாது.

3. மேல்நாட்டு விளைச்சல் விகிதங்களையும் இந்தியாவில் விளைச்சல் விகிதங்களையும் ஒத்துப் பார்க்கும்பொழுது இந்தியாவின் விளைச்சல் விகிதங்கள் குறைவாகவே இருக்கின்றன. அதற்கு முக்கிய காரணம் ஸ்வல்பமுதல் மட்டும் போட்டு விவஸாயத்தை நடத்துவதே. ஜாஸ்தி முதல் போடும் பக்ஷத்தில் விளைச்சல் விகிதம் அதிகமாகுமென்று மிஸ்டர் கவென்ட்ரி சொல்லுகிறார்.

The Late Diwan Bahadur R. Raghunatha Rao.

காலஞ்சென்ற திவான்பகதூர் ஆர் ரெகுநாத ராவ் அவர்கள்.—நாளது மேமீ 3-ந்தேதியன்று திவான்பகதூர் ரெகுநாதராவ் அவர்கள் இறந்து போனாரென்று கேட்டு ரோம்

பவும் விஸனிக்கிறோம். இவர் தென் இந்தியாவில் நல்ல பேரும் புகழும் மதிப்பும் பெற்றவர். பெரிய குலத்தில் பிறந்தவர். அற்பகுணம் என்பது அவரிடத்தில் கிடையாது. பொது ஜனங்களுக்கு உழைப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார். முக்கியமாய் விவசாயிகளுக்குத் தம்மாலான மட்டும் உழைத்து அவர்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்று பலவிதத்திலும் பாடுபட்டு வந்தார். கும்பகோணத்தில் ஒரு விவசாய சங்கத்தை ஏற்படுத்தி அதன் ஸம்பந்தமாய் ஒரு பத்திரிகையையும் வெளியிட்டு, இவை போதாமல் ஜமாபந்தி காலங்களிலும் உத்ஸவாதிகளிலும் ஊர் ஊராய்ப் போய் ப்ரஸங்கங்கள் செய்தும்வந்தார். இவ்வளவெல்லாம் செய்தும் விவசாயிகளைக் கிளப்புவது ரொம்பவும் கஷ்டமாயிருக்கிறதென்று பலதடவை முறையிட்டிருக்கிறார். திண்ணையில் உட்கார்ந்து கொண்டு சீட்டாடுகிறார்களே யொழிய இனாமாக அனுப்பினாலும் பத்திரிகை என்பதைப் பிரித்தே பார்ப்பதில்லையே என்று மனவருத்தப் பட்டிருக்கிறார். நாம் முதலில் 'பிழைக்கும் வழி'யை ஆரம்பித்தபோது, ரொம்பவும் அனுக்ரகம் செய்துவிட்டு பத்திரிகை மிகவும் நன்றாயும் உபயோகமுள்ளதாயு மிருக்கிறதென்றும், ஆனால் விவசாயிகளை நம்பி சந்தா வருமென்று எண்ணவேண்டா மென்றும், நஷ்டத்துக்குத் தயாரா யிருக்கும்படிக்கும், நமக்கு எழுதினார். ராயரவர்களை நாம் ஒரு தடவை நேரில் பார்க்கப்போனபோது 'பிழைக்கும் வழி'யைத்தாம் தவராமல் படிப்பதாயும், அதற்கு ருஜுவாக முன் ஸஞ்சிகைகளை யெல்லாம் தம் லைப்ரேரியிலிருந்து கொண்டுவரச்சொல்லி, முக்கியமான விஷயங்களை மார்க்கு செய்திருப்பதை நமக்குக் காண்பித்து, விவஸாய ஸம்பந்தமான விஷயங்களைத் தம்முடைய பத்திரிகையில் தவறாமல் அச்சிடுவதாயும் சொன்னார். ராயரவர்களுக்கு ஒற்றைநாற்றில் நம்பிக்கை இல்லை. இரண்டு மூன்றாக நடவேண்டுமென்பது அவர் அபிப்பிராயம். கனம் ரெகுநாதராவ் அவர்களின் ஜீவிய சரித்திரத்தை இன்னொரு பகுதியில் பார்க்கலாம். அவர் மரணத்தால் தென்னிந்தியா விவஸாயிகளுக்கு நேரிட்ட நஷ்டத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது.

SPECIAL ARTICLES.
விசேஷ வியாஸங்கள்.

THE CONDITION OF THE RYOT.
விவஸாயியின் நிலைமை.

சென்னை மாகாணத்தின் கைத்தொழில் ஸபையின் கூட்டம் ஒன்று நாளது மீ 11௳ கும்பகோணத்தில் கூடிற்று. அதற்கு அக்ராஸனாதிபதியாயிருந்த கனம். பி. தியாகராஜ செட்டியார் விவஸாயிகளின் நிலைமை, நெசவுத் தொழில், துணிகளுக்கு சாயம்போடும் தொழில், இவைகளைப்பற்றி விஸ்தாரமாகப்பேசிவிட்டு, பொதுவாக விவஸாயம், கைத்தொழில் இவைகள் விஷயத்தில் கவர்ன்மெண்டாரும் பொதுஜனங்களும் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி தமது அபிப்பிராயத்தைச் சொன்னார்.

விவஸாயிகளின் நிலைமையைப்பற்றிப் பேசும்பொழுது அவர் சொன்னதாவது;—சென்ற 100 வருஷங்களாக இந்த தேசத்தில் விவஸாய முறைகள் விருத்தியாயிருக்கின்றனவென்று ஒருவரும் சொல்லத் துணியமாட்டார்கள். ஏதோ சில இடங்களைத்தவிர மற்ற இடங்களிலெல்லாம் விவஸாயிகள் அவர்கள் முன்னோர்கள் செய்து வந்தபடியே, பெரியவர்கள் உழுது வந்த கலப்பைகளையும், அவர்கள்போட்ட எருக்களையும், அவர்கள் இறைத்து வந்த ஏற்றங்களையுமே உபயோகித்து வருகிறார்கள். வெகுகால அனுபோகத்தால் எப்படிசெய்தால் எவ்வளவு லாபம் வருமென்று அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஸ்வல்ப ஐவேஜி உள்ளவர்களானதாலும், ஒரே நிதானமாய் மழை பெய்யாததாலும், புது விவஸாய முறைகளில் ஞானமும் பயிற்சியும் இல்லாததாலும், அந்தப் புதிய முறைகளை நேரில் பார்க்காததாலும்,

வழக்கமான வழியைவிட்டுவிட்டு புதுமுறையாக விவஸாயம் செய்யச்சொன்னால் எங்கே நஷ்டம் வந்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். ஆகையால் வருஷா வருஷம் வண்டல் அடித்து நிலம் வளம்பெறும் காவிரி, பெண்ணையாறு, கிருஷ்ணா, கோதாவரி ஆகிய இந்த ஆறுகள் பாசனமுள்ள நீராரம்பங்களைத் தவிர மற்ற இடங்களில் விவஸாயிகளின் நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. மேற்சொன்ன நீராரம்பங்கள் ராஜதானி மெத்த விஸ்தீரணத்தில் 100 ல் 15 பங்குகளாகின்றன. பாக்கியுள்ள 170 லக்ஷம் ஏக்கராக்கள் அடங்கிய நிலங்களில் வருஷா வருஷம் ஸாகுபடியாகி அறுவடையாவதால் அவைகளின் வளம் குறைந்து மாஸூலும் குறைந்துபோயிருக்கிறது. இப்படி வளம் குறைவதைத் தடுக்க, வேறு நாகரிகமுள்ள தேசங்களில் ஆழ உழுதல், அதிக உரம் போடுதல் முதலியயுக்திகளை அநுஸரிக்கிறார்கள். அப்படி இந்த தேசத்தில் செய்வதற்கு ஸௌகரியங்கள் இல்லை. முதலாவது, விவஸாயிகள் பண்டைகாலம் முதல் காடுகளில் மாடுகளை இனமாய் மேய்த்தும், வயலுக்கு வேண்டிய தழை எருவையும்,வீட்டுக்கு வேண்டிய விறகையும் மரத்தையும் இனமாகப் பெற்றும், வந்தார்கள். அவைகளுக்கு இப்போது ரொம்பவும் விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. விவஸாயிகளுக்கு மூலதனமான கால்நடைகள் குறைந்திருப்பதற்கு காட்டிலாகா தொந்திரவே முக்கிய காரணம்.

இரண்டாவது 1877-78-வது பஞ்சங்களுக்குப் பிற்பாடு காலா காலங்களில் மழை பெய்வதில்லை. காலா காலங்களில் வேண்டிய அளவு மழை பெய்யாததால் விளைவும் குறைவாகிவிடுகிறது.

மூன்றாவது, நிலத் தீர்வையை குறித்த காலங்களில் மறு ஸெட்டில்மெண்டு செய்து, விலை விகிதங்கள் ஜாஸ்தியாய்விட்டன வென்றும், முந்திய ஸெட்டில்மெண்டுகளில் ஏற்பட்ட பிசகுகளைத் திருத்தவேண்டுமென்று தரங்களை மாற்றியும், சிலவேளைகளில் இவ்விரண்டு காரணங்களைக் கொண்டும் நிலவரியை உயர்த்தி விடுகிறார்கள்.

மொத்தத்தில் இந்திய விவஸாயியின் நிலைமை ஒருவரும் பார்த்து ஸந்தோஷிக்கத் தக்கதல்ல. விவஸாயிகள் தமக்கு மிகுத்து வைத்துக்கொள்ளாமல் தம் கையிலுள்ள பால் தயிர் நெய் எல்லாவற்றையும் விற்றுங்கூட, பொழுது விடிந்தால் சோற்றுக்கு என்னவழியென்று அதுவே விசாரமாக இருக்கிறார்கள்.

போன ஜனகணிதப்படிக்கு முன் 10 வருஷங்களில் இருந்ததைவிட ஜனங்கள் 100க்கு 8·3 பேர்கள் அதிகமாயிருக்கிறார்கள். இதற்கு முன் 10 வருஷங்களை விட 100-க்கு 4-பங்கு நிலங்கள்தான் அதிகமாக ஸாகுபடிக்கு வந்திருக்கின்றன. இப்படி அதிகமாக ஸாகுபடிக்கு வந்திருப்பதாகத் தோன்றும் நிலங்கள் சில கணக்குக்கு வராமல் ஏற்கனவே நிலக்காரர்களுடைய அநுபோகத்திலிருந்தவைகள். தவிர, அதிகமாக ஸாகுபடிக்கு வந்திருக்கும் நிலங்கள் சப்பை நிலங்களுங்கூட. மேற்சொன்னவைகளை யெல்லாம் யோசித்துப் பார்க்கும்பொழுது விவஸாயிகளின் நிலைமை முன்காலத்தி லிருந்ததைவிட சீர்கெட்டிருக்கிறதென்று தோன்றுகிறது.

இன்னொரு விஷயம் என்னவென்றால் ஆகாரப் பொருள்களாக உபயோகப்படும் பயிர்கள் வரவரக் குறைந்து கைத்தொழில்களுக்கு உபயோகப்படும் விளைபொருள்கள் அதிகமாக ஸாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இப்படி அதிக ஸாகுபடி செய்யப்பட்டு வரும் விளை பொருள்கள் இந்தியாவிலேயே உபயோகப்பட்டு வரும்பக்ஷத்தில் அதினால் விவஸாயிகளுக்கு ஸாதகமே யொழிய பாதக மொன்றுமில்லை. ஆனால் அப்படி யில்லாமல் கைத்

தொழில்களுக்கு உபயோகிக்கக்கூடிய விளைபொருள்களெல்லாம் இதர தேசங்களுக்கு ஏற்றுமதியாகிவிடுகின்றன. உதாரணமாக, கொட்டைமுத்து, மணிலாக்கொட்டை, பருத்திக்கொட்டை, இன்னும் இவைகளைப் போன்ற எண்ணெய் வித்துக்களை எடுத்துக்கொள்வோம். இவைகளில் வருஷாவருஷம் 293 லக்ஷம் ரூபாய் பெறுமான 37,47,000 அந்தர் விதைகள் அந்நிய தேசங்களுக்கு ஏற்றுமதியாகி விடுகின்றன. அங்கே இவைகளிலிருந்து எண்ணெயை எடுத்துப் பல கைத்தொழில்களுக்கு உபயோகப்படுத்திக் கொண்டு, பிண்ணுக்குகளை மாடுகளுக்குத் தீனியாகவும், நிலங்களுக்கு எருவாகவும் போடுகிறார்கள். அந்நிய தேசத்தார்கள் செய்வதுபோல் நாமும் செய்தால் இந்தியா தேசம் எவ்வளவு செழித்தோங்கும்? மில் கம்பெனிகளும் பாக்டரிகளும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு பிழைப்புண்டாக்கும். விவஸாயிகளுக்கு மூலதனமான கால்நடைகள் விருத்தியுண்டாகும். நிலங்களுக்கு எருச்சேரும். மொத்தத்தில் விவஸாயிகள் ரொம்பவும் ஸுகமடைவார்கள்.

REMISSION OF ASSESSMENT

By

THE EDITOR.

தீர்வை வஜா.

நாளது மேமீ 24௳ யன்று உதகமண்டலத்தில் கூடிய சட்ட நிர்மாண ஸபையில் பல விஷயங்களைப்பற்றி விவாதங்கள் நடந்தன. விவஸாயிகளைப்பற்றிய மட்டில் முக்கியமான விஷயம் என்னவென்றால், கனம் ஜி. ராகவராவ் பந்துலுகாரு தீர்வை வஜாவைப்பற்றிக் கொண்டுவந்த தீர்மானமேயாகும். அவர் ப்ரேரேபித்த தீர்மானம் பின்வருமாறு:—

"கவர்ன்மெண்டு ரயட்வாரி நன்செய் நிலங்களில் ரூபாயில் 5⅓ அணுவுக்கு மாஸூல் குறையும் பக்ஷத்தில் அவைகளுக்காக கவர்ன்மெண்டுக்குச் செலுத்தவேண்டிய தீர்வையை வஜா செய்துவிட வேண்டுமென்று இந்த ஸபை சென்னை ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னருக்கு சிபார்ஸு செய்கிறது."

(மாஸூல்களை புள்ளிபோடும் பொழுது நல்ல மாஸூலை 16 அணு அதாவது 1-ரூ என்றும், ஸாதாரண வருஷங்களில் கிடைக்கும் ஸாதாரண மாஸூலை 12 அணு என்றும், அதற்குக் குறைந்த மாஸூல்களை ரூபாயில் இத்தனை அணு என்றும் சுட்டிக்காட்டுவது வழக்கம்.)

இப்படி பிரேரேபித்ததில் கனம் ராகவராவுக்குள்ள அபிப்பிராயம் என்னவென்றால்:—

1. மாஸூல் முழுவதும் நஷ்டமாகிவிடும் பக்ஷத்தில் ஸெட்டில்மெண்டு நிபந்தனைகளின்படிக்கும் அப்போதைக்கப்போது தகுந்த உத்தியோகஸ்தர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஒழுங்குகளின்படிக்கும் வெகுகால வழக்கப்படி, தயையாயில்லாமல், தீர்வையை வஜா செய்ய கவர்ன்மெண்டார் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காண்பிப்பதும்,

2. இப்பொழுது கவர்ன்மெண்டார் தீர்வை வஜா செய்வது தயையாய்ச் செய்வதே யொழிய தாங்கள் வஜா செய்யக் கடமைப்பட்டவர்கள் அல்லவென்று சொல்லுகிறார்கள். இந்த அபிப்பிராயத்தை அஸ்திவாரமாகக் கொண்டே தீர்வை வஜாவைப்பற்றிய ரூல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த அபிப்பிராயத்திற்கு ஏற்றபடியே கலெக்டர்கள் தீர்வை வஜா ரூல்களை அமுலில் நடத்திவருகிறார்கள். அப்படிக்கல்லாமல், மாஸூல் முழுமையும் நஷ்டமாகிவிட்டதென்றால் என்ன அர்த்தமென்பதை கலெக்டர்கள் மனஸுப்படி அர்த்தம்செய்து கொள்ளாமல் கண்டிப்பாய் எடுத்து சொல்லிவிடவேண்டியது அவசியம் என்பதை

கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக் காண்பிக்கவும்,

3. ஸாகுபடிச் செலவுகளைத் தள்ளிவிட்டால் லாபமில்லாதபோது மாஸூல் முழுமையும் நஷ்டமாகிவிட்டதென்று அங்கீகரிக்க கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளவும்,

4. நல்ல மாஸூலில் 3 ல் ஒன்று ஸாகுபடிச் செலவு என்று ஏற்படுத்தவும்.

மேற்சொல்லியவைகளைக் கொண்டு கனம் ராகவராவ் கொண்டுவந்த தீர்மானமானது நன் செய் நிலங்களின் முழுமாஸூலும் நஷ்டமாகும் கேஸ்களுக்குமட்டும் பொருந்துமே யொழிய, மாஸூல் குறைவாகக்காணும் கேஸ்களுக்கு, பொருந்திய தல்லவென்று வியக்தமாக ஏற்படுகிறது. ஆனால் ப்ரேரேபணையின் வசனப் போக்கைப் பார்த்தால் ஒரே அர்த்தந்தான் பண்ணலாம். அதாவது, கனம் ராகவராவின் ப்ரேரேபணையானது மாஸூல் குறைச்சலான கேஸ்களுக்கு மட்டும் பொருந்துமே யொழிய, மாஸூல் முழுநஷ்டமாகும் கேஸ்களுக்குபொருந்தவே பொருந்தாது. ஆயினும், பின் சொன்ன கேஸ்களைப்பற்றி மட்டுந்தான் கனம் ராகவராவ் ப்ரேரேபிக்க உத்தேசித்தார். ஆகவே ப்ரேரேபணையின் வசனப்போக்கில் ஏற்பட்டதவறுதலால் கவர்ன்மெண்டு தரப்பில் கனம் அட்கின்ஸன் கவர்ன்மெண்டார் ஏற்கனவே செய்திருக்கும் அநேகவித வஜாக்களைத் தவிர இன்னொருவித வஜா கனம் ராகவராவ் செய்யச் சொல்லுகிறார் என்று எண்ணி, நிலங்களை ஸெட்டில்மெண்டு செய்யும் காலத்தில் கவர்ன்மெண்டார் செய்யும் பலவித வஜாக்களை எடுத்துக்காட்டி, அவைகளைத்தவிர கனம் ராகவராவ் கேட்கும் வஜாவைக்கொடுக்க நியாயமே இல்லை யென்று சொல்லிவிட்டார்.

கவர்ன்மெண்டாருக்கு நிலத்திற்காகக் கொடுக்கவேண்டிய தீர்வையை ஸெட்டில்மெண்டு செய்யும் விதத்தை அறிந்தவர்கள் ஒரு வருஷத்தில் நன்செய் நிலங்களில் ஸாதாரணமாஸூல் போலல்லாமல் குறைந்த மாசூல் கிடைத்ததென்று சொல்லி தீர்வை வஜா செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்க மாட்டார்கள். ஏனென்றால் ஸெட்டில்மெண்டில் ஸர்க்கார் கிஸ்து நிர்தாரணம் செய்வதற்குமுன் எந்த வருஷத்திலும் ஒரேமாதிரியாக மாஸூல் கிடைக்காதென்றெண்ணி ஏற்றம் குறைச்சலுக்காக விளைவில் 100 க்கு இவ்வள என்பதாகத் தள்ளி ஸர்க்கார் தீர்வையைக் கணிக்கிறார்கள். ஆகையால் ஸெட்டில்மெண்டான ப்ரதேசங்களில் வழக்கம்போல் மாஸூல் கிடைக்கவில்லை யென்பதாக தீர்வை வஜா கேட்க நியாயமில்லை.

ஆனால், இப்படி இல்லை முழுமாஸூலும் நஷ்டமாகும் பக்ஷத்தில். ஸெட்டில்மெண்டு செய்யும்போது முழுமாஸூலும் நஷ்டமாய்ப் போய்விடுமென்று எண்ணி அதற்காக ஸர்க்கார் தீர்வையை நிர்தாரணம் செய்வதற்கு முன் ஒருவிதமான தள்ளுபடியும் செய்வதில்லை. ஆகையினாலே தான் போர்டாருடைய 13 வது ஸ்டாண்டிங் ஆர்டரில் முழு மாஸூலும் நஷ்டமாகும் பக்ஷத்தில் முழுத்தீர்வையையும் வஜா செய்வதற்கு ஒழுங்குகள் ஏற்படுத்தபப்ட்டிருக்கின்றன. இதை கனம் அட்கின்ஸனும் ஒப்புக்கொள்ளுகிறார். அவர் சொல்லுகிறார்:—

கனம் ராகவராவ் மாஸூல் குறைவு என்பதற்கும் மாஸூல் முழு நஷ்டமாகி விட்டதென்பதற்கும் வித்தியாஸத்தை அறியாமல் கலங்கிப்போய்விட்டாரென்று நினைக்கிறேன். ஸெட்டில்மெண்டு செய்யும்போது முழு மாஸூலும் நஷ்டமாகும் பக்ஷத்தில் ஒருவித ஏற்பாடும் செய்யவில்லை என்றார். செய்யவில்லைதான். முழுமாஸூலும் நஷ்டமாகும் கேஸ்களுக்காக ஸ்டாண்டிங் ஆர்டர்களில் ஏற்பாடு செய்திருக்கிறோம். முழு மாஸூலும் நஷ்டமாகும் பக்ஷத்தில் முழுத்தீர்வையையும் வஜாசெய்து

கொடுக்கிறோம். ஸெட்டில்மெண்டு நடத்தும் போது செய்துகொடுக்கும் வஜாக்கள், நான் ஏற்கனவே சொல்லியபடி, கெடுதலான வருஷங்களுக்காகவே (அதாவது மாஸூல் குறைச்சலான வருஷங்களுக்காகவே).

ஆகையால் நன்செய் நிலங்களில் முழு மாஸூலும் நஷ்டமாகும் பக்ஷத்தில் தீர்வையை வஜாசெய்து கொடுக்கக் கடமைப்பட்டிருப்பதாக கவர்ன்மெண்டாரே ஒப்புக்கொள்கிறார்கள். விவாதத்திற்கு ஏற்படும் விஷயமெல்லாம் கவர்ன்மெண்டின் கடமையானது தயையாய்ச் செய்வதா அல்லது நிலக்காரர்களுக்கு பாத்திய மிருந்து அதற்காகச் செய்வதா என்பதுதான். அதாவது கவர்ன்மெண்டார் தீர்வை வஜா செய்யவேண்டியது நியாயமட்டுந்தானு அல்லது அவர்களை அப்படிச்செய்யும்படி கோர்ட்டு மூலமாய்க் கட்டாயப்படுத்தலாமா?

ரயத்தினுடைய தரப்பில் அவன் தீர்வை வஜாப்பெற பாத்திய முண்டென்பது விவாதம். ஆனல் கவர்ன்மெண்டார் நிலக்காரனுக்கு தீர்வை வஜாப்பெற சட்டப்படி பாத்தியமில்லையென்றும், தங்கள் தீர்வையை வஜா செய்வது தயாவிஷயம் என்றும் சொல்லுகிறார்கள்.

போர்டாருடைய 13 வது ஸ்டாண்டிங் ஆர்டருக்குத் தலையில் ஒரு குறிப்பு அச்சிடப்பட்டிருக்கிறது. அதாவாது "இந்த ஒழுங்குகளும் (13 வது ஸ்டாண்டிங் ஆர்டர் ஒழுங்குகள்) 14 வது ஸ்டாண்டிங் ஆர்டர் ஒழுங்குகளும் தயா மூலமாய்க் கொடுக்கும் விஷயங்களுக்கு ஏற்பட்டவையென்றும், அவைகளை கவர்ன்மெண்டார் அப்போதைக்கப்போது இஷ்டம்போல் திருத்திக் கொள்வார்களென்றும் கண்டிப்பாய் அறியவும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குறிப்பை ஸர்க்காருக்கு ஆதாரமாக எண்ண கொஞ்சங்கூட நியாயமில்லை. ஏனென்றால் 10 வருஷங்களுக்கு முன் ரயத்துக்கள் தீர்வை வஜாவிற்கு பாத்தியமுண்டென்று சொன்னதை மறுப்பதாக கவர்ன்மெண்டார் அந்தக் குறிப்பைச்சேர்த்துக்கொண்டார்கள். இரண்டு கக்ஷிக்காரர்களுக்கு விவாதமிருக்கும் போது ஒரு கக்ஷிக்காரர் மற்றொரு கக்ஷிக்காரருக்கு பாத்தியமே இல்லையென்று தம் தஸ்தாவேஜில் எழுதிக்கொண்டு விட்டால், அது ஸாக்ஷிபமாய் விடுமா? அப்படி கவர்ன்மெண்டார் செய்துகொண்டதானது அவர்களுக்கு அனுகூலமான ஸாக்ஷிபமாகாது. ஆகையால் கவர்ன்மெண்டார் கொடுக்கும் தீர்வை வஜாவைப்பற்றி முழுவதையும் அறிய வெகுகாலத்திற்குமுன் நடந்த விஷயங்களை ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியமாகிறது.

ஸுமார் 1857ஹு வாக்கில் ஸர்வே ஸெட்டில்மெண்டு ஆரம்பமாயிற்று. அவைகளைப்பற்றிய தஸ்தாவேஜுகளையும் நாளது மாஸத்தில் சட்ட நிர்மாண ஸபையில் நடந்த விவாதங்களையும் படித்துப்பார்த்தால் முன்காலத்தில் தீர்வை ரொம்ப பளுவாயிருந்ததென்றும், அதனல் வருஷாவருஷம் வஜாசெய்யவேண்டியிருந்ததென்றும், இப்படி வருஷாவருஷம் தீர்வை வஜாவை ஒழிப்பதற்கு ஸெட்டில்மெண்டு செய்யப்பட்டதென்றும், தெரியவருகிறது. இது 1859ஹு ஜனவரீ 18உ 806 நெம்பர் கவர்ன்மெண்டு உத்தரவால் நன்றாய்த் தெரிகிறது. அதில் "வருஷாவருஷம் தீர்வை வஜா செய்யும் வாடிக்கையை கவர்ன்மெண்டார் ஒழித்து விடுவதாக தீர்மானித்திருக்கிறார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை கனம் அட்கின்ஸனும் ஒப்புக்கொள்ளுகிறார். "1857ஹுத்துக்கு முன்னல் வருஷாவருஷம் கொடுத்த தீர்வை வஜாக்கள் சென்னை ரிவினியூ ஒழுங்குகளை விகாரப்படுத்தி வந்தன" வென்று கனம் அட்கின்ஸன் சொல்லியிருக்கிறார். ஸெட்டில்மெண்டு வேலை ஆரம்பமான கொஞ்ச காலத்திற்கெல்லாம்

1865-ம் ௵த்தில் தீர்வை வஜா ரூல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. அவைகளில், நிலக்காரனுடைய காரியத் தாழ்ச்சியினாலாவது அசட்டையினாலாவது அல்லாமல் நிலம் தரிசாய்க் கிடந்தாலாவது அல்லது அதிவிருஷ்டி அநாவிருஷ்டி இவைகளால் மாஸூல் முழுமையும் நஷ்டமானாலாவது முழுத்தீர்வையும் வஜா செய்யப்படும்'' என்று ஏற்படுத்தப்பட்டது. இதுதான் இன்றைக்குமுள்ள ஒழுங்கு. ஆகவே ஸுமார் 100 ௵ங்களாக, நிச்சயமாக 50 ௵ங்களுக்கு, மாஸூல் முழுமையும் நஷ்டமாகும் பக்ஷத்தில் நிலக்காரர்கள் தீர்வை வஜா அடைந்துவந்திருக்கிறார்கள். ஆகையால் நிலக்காரர்களுக்கு தீர்வை வஜா பெறுவது வெகு நாள் வழக்கத்தால் ஏற்பட்ட பாத்தியமல்லவா? நிலத்தில் விளைந்ததில் செலவுகள் போக மீதியுள்ளதில் ஸர்க்காருக்கு பாதி பாத்தியமுண்டென்று சொல்கிறார்களே, அது கோர்ட்டுகளில் தீர்மானமாயிருப்பது தவிர, வேறு எங்கேயாவது சட்ட பூர்வமாய் ஏற்பட்ட பாத்தியமா? அது வழக்கத்தால் ஏற்பட்டபாத்தியம். அதேமாதிரியாக வழக்கத்தால் ஏற்பட்ட நிலத்தை யொட்டிய பாத்தியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. சட்டத்தால் ஏற்படாதவைகள் என்பதினால் அவைகள் பாத்தியங்கள் அல்லவென்று சொல்லலாமா? இப்படிப்பட்ட பாத்தியங்களைப் பற்றிய தொந்திரவு என்னவென்றால் “பலோராஜா ப்ருத்வி” என்பதுபோல பலத்த கக்ஷிக்காரன் இளைத்தவனுடைய பாத்தியதையை இல்லையென்று சொல்லி உண்டானால் கோர்ட்டுக்குப்போ வென்று சொல்வதே.

ஹைகோர்டில் ஒரு கேஸில் கவர்ன்மெண்டார் தீர்வை வஜா செய்யக் கடமைப்பட்டவர்கள் அல்லவென்று தீர்மானித்திருக்கிறார்கள். இதை ஆதாரமாக கனம் அட்கின்ஸன் கொண்டாடுகிறார். இப்படி ஹைக்கோர்ட்டுத் தீர்மானமிருந்தபோதிலும் தற்காலம் வழங்கிவரும் நிலத்தீர்வையைப்பற்றிய கோட்பாட்டிலிருந்து முழு மாஸூலும் நஷ்டமாகிவிடும் பக்ஷத்தில் கவர்ன்மெண்டார் தீர்வை வஜா செய்து கொடுக்கக் கடமைப்பட்டவர்களென்றே அநுமானிக்கவேண்டியிருக்கிறது. அந்தக் கோட்பாட்டின்படி ஸர்க்கார் தீர்வையானது, நன்செய் நிலத்திற்கு ஸாகுபடிச் செலவுகள் போக பாக்கியுள்ள நன்செய் மாஸூலின் கவர்ன்மெண்டார் பாகத்திற் கேற்படுத்திய விலை யென்பது. முழுமாஸூலும் நஷ்டமாகிவிட்டாலாவது அல்லது மாஸூல் ஸாகுபடிச் செலவுக்கு ஸரியாய்ப் போய்விட்டாலாவது பாக்கியிருந்தாலல்லவோ ஸர்க்காருக்குப் பங்குண்டு?. இல்லாவிட்டால் எங்கிருந்து பங்கு கிடைக்கும்? 30 ௵த்திற்கு ஸெட்டில்மெண்டு ஒப்புக்கொண்டிருப்பதைக் கொண்டு ஒரு பாதகமும் ஏற்படாது என்று தோன்றுகிறது. ஏனென்றால் ஸெட்டில்மெண்டு செய்து கொள்ளும்போது முழு மாஸூல் நஷ்டமாகும் கேஸ்களைப்பற்றி ஒருவித ஏற்பாடும் செய்து கொள்ளவில்லை.

ஹைகோட்டுக்குப்போய்கவர்ன்மெண்டார் ரெமிஷன் கொடுக்கக் கடமைபட்டவர்களென்று தீர்த்துக்கொண்டு வந்தாலொழிய கவர்ன்மெண்டார் ரெமிஷன் கொடுப்பது தயாவிஷய மென்றே சொல்லிவிட்டார்கள். தீர்வை விகிதம் தப்பு, அல்லது மொத்தத் தீர்வை தப்பு, என்பதாக வாதாடும் பக்ஷத்தில் அப்படிப்பட்ட வாதங்களை ஸிவில் கோர்ட்டுகள் ஒப்புக்கொள்ள அதிகாரமில்லை. ரயத்துத் தரப்பில் வாதிக்கவேண்டியது முழு மாஸூலும் நஷ்டமாகும்பக்ஷத்தில் ஸர்க்காருக்கு பாகமே இல்லை யென்பதே. இந்த விஷயத்தைப்பற்றி ஸிவில் கோர்ட்டார் தீர்மானம் செய்யலாமென்று தோன்றுகிறது. ஆகையால் பொதுஜன அபிமானமுள்ள நிலக்காரன் ஒருவன் ஸர்க்காருக்கு எதிராக வாதாடி கோர்ட்டில் ஜெயித்து வந்தாலொழிய நன்செய் நிலத்தில் முழு மாஸூலும் நஷ்டமாகும் பக்ஷத்தில் தீர்வை வஜா ஆகாமல் முழுத்தீர்வையையும் கொடுத்துவிட வேண்டுமென்பதை தீர்ந்துபோன விஷயமாக எண்ண வேண்டியிருக்கிறது.

பத்திராதிபர்,

A SUBSTITUTE FOR CORK

BY

T. C. V. RAMANA AIYAR.

கார்க்குக்கு பதில்.

தற்காலம், நாம் உபயோகிக்கிற சீசா அல்லது புட்டி, ஜாடி முதலியவைகளுக்கு அந்நிய தேசங்களிலிருந்து வருகிற கார்க்கு அதாவது நெட்டி என்னப்படுகிற ஒருவகை மரத்துண்டை தகுந்த அளவாய்ச் சீவி யடைக்கிறோம். இது அதிக கனமில்லாமலும், புட்டிகளின் வாயிலடைத்தால், காற்றை யுள்ளே விடாமலும், அடைக்கும்பொழுது சுருங்கவும், எடுக்கும்பொழுது விரியவும் கூடியதாயிருப்பதால் அநேகமாய் அவைகளையே உபயோகிக்கிறோம். தவிர புட்டிகளில் வார்க்கப்படும் எவ்வித எண்ணெய், திராவகம், பன்னீர் முதலியவைகளின் குணத்தை இந்தக் கார்க்குகள் எவ்விதமாயும் கெடுப்பதில்லை. இந்தக்கார்க்கு மரங்கள் ஐரோப்பாக்கண்டத்தில் பல விடங்களிலிருப்பதாகத் தெரியவருகிறது. இந்து தேசத்தில் அம்மரமே யிருப்பதாக நாளதுவரை கேள்விப்படாதபோதிலும் அது போன்ற வேலைகளுக்கு உபயோகப்படத்தக்கமரம் வேறு யாதொன்றும் கண்டுபிடித்திருப்பதாகத் தோற்றவில்லை.

யாம் பரீக்ஷித்துப்பார்த்த வரையில் கார்க்குகளுக்கு பதிலாக ஒரு மரத்தை உபயோகித்ததில் வெகு பொருத்தமானதாக விருக்கின்றது. அதாவது, ஆணைக்கத்தாழையில் நடுவில் வளர்ந்து புஷ்பித்துக் காய்ப்பதை யாவரும் பார்த்திருக்கலாம். இது எவ்விடத்திலும் சாதாரணமாய்க் கிடைக்கக்கூடியது. இது இருப்புப்பாதைகளின் இருபுறத்திலும் வளர்க்கப்படுகிறது. இதன் மட்டைகளை அறுத்துக்கொண்டுபோய் தண்ணீரில் ஊரப்போட்டு அழுகிய பிறகு நாரை எடுத்து கத்தாழை மஞ்சி என்பதாக பல விடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன் கயிறாகத்திரித்து பல வேலைகளுக்கு உபயோகிக்கிறார்கள். ஆனால் கத்தாழையில் நடுவில் உயரமாய்வளர்ந்து புஷ்பிக்கிற மரத்தையும் அதன் கைகளையும் விறகாக வின்றி வேறு வேலைகளுக்கு உபயோகிப்பதாகத் தோற்றவில்லை. இது கனமின்றி இலகுவாயிருப்பதினால் இவைகளை பந்தல் கால்களுக்கு உபயோகித்தோம். மற்ற மரங்களைவிட சீக்கிரத்தில் இவைகள் இற்றுப்போயின. நமது வீட்டில் உபயோகப்படுத்துகிற புட்டி ஜாடி முதலியவைகளுக்கு கார்க்குக்கு பதிலாக கார்க்கு மாதிரி செய்து உபயோகித்தோம். அவைகள் வெகுகாலம் வரையில் உறுதியாகவும், புட்டியின் வாய்களுக்கு இறுக்கமாகவுமிருக்கின்றன. காற்றை உள்ளே விடாமல் சுருங்கவும் விரியவும் கூடியதாயிருக்கின்றது. பார்வைக்கு யாதொருவிகாரமாகவும் தோன்றாமலிருப்பதுடன், புட்டியிலடைக்கும் திராவகம் போன்றவைகளை எவ்விதத்திலும் கெடுப்பதில்லை. கார்க்குகளைப்போல் இத்துண்டுகளும் கனமின்றி யிருப்பதுடன், கார்க்குகள் சில ஸமயங்களில் முறிந்து புட்டியில் பாதியும் வெளியில் பாதியுமாக விழுந்து விடுவதுபோல் இவைகள் முறிந்து போவதில்லை. அதாவது கார்க்குகளிலுள்ள பிளவுத்துவாரங்கள் இந்த மரத்திலில்லை.

இந்த மரங்களை நன்றாக முதிர்வதற்கு முந்தி வெட்டிக் கொண்டுவந்து சிறிதுகாலம் நிழலில் போட்டுவைத்திருந்து ஈரம் வற்றிய பிறகு தண்ணீரில் ஏழுநாட்கள் வரையில் ஊறும்படி செய்து வேண்டிய மாதிரியாக மிகச்சுலபமாய் அடைப்புகள் செய்யலாம். இக்கத்தாழை இருப்புப்பாதையின் ஓரங்களில் வளர்க்கப்படுகிறபடியால் இதை பலர் ரயில் கத்தாழை என்றும் கூறுவதுண்டு. இதை யாவரும் பரீக்ஷை செய்து பார்க்கலாம்.

டி. ஸி. வி. ரமணய்யர்.

WATER FACILITIES FOR CATTLE

BY

N. APATHSAHAYA AIYAR.

கால்நடைகளுக்குத் தண்ணீர் வஸதிகள்.

இந்தியாவில் முக்கியமானவர்கள் விவஸாயிகள். விவஸாயிகளுக்கு மூலதனம் கால்நடைகள். கால்நடைகளில்லாவிட்டால் எந்தக் காரியமும் நிறைவேறாது. எந்த ஜாதியாராயிருந்தாலும்ஸரி, எம்மதத்தினராயிருந்தாலும் ஸரி, விவஸாயிகளானாலும்ஸரி, விவஸயிகளாயில்லாவிட்டாலும்ஸரி, மானிடப்பிறவியாயுள்ள பிரதிநபருக்கும் கால் நடையின் உதவி அத்தியாவசியமாயிருக்கிறது. இவ்வளவு இன்றியமையாத கால்நடைகளை காப்பாற்றவேண்டியது எல்லாருடையவும் கடமை. இந்தக் காலத்தில் கால்நடைகள் ஆகாரத்திற்காக அயல் நாடுகளுக்கு ஏராளமாய் ஏற்றுமதியாகிவிடுகின்றன. காலமழை ஸரியாயில்லாததினால் வெக்கை, அடப்பான், கோமாரி, முதலிய கொள்ளை நோய்களினால் ஏராளமான கால்நடைகள் வருஷா வருஷம் சேதமாகின்றன. இத்தியாதி காரணங்களினால் ஸுமார் 10 வருஷங்களுக்கு முன் இருந்ததை விட மூன்று மடங்கு ஜாஸ்தியாய் கால்நடைகளின் விலை ஏறியிருக்கிறது. இப்படி மும்மடங்கு விலை கொடுத்து வாங்கிய கால்நடைகள் வெக்கை முதலிய கொள்ளை நோய்களுக்கு இரையாகாமல் தடுக்கவேண்டியது அவசியமல்லவா? கோடைகாலத்தில் சிறிது தூற்றல் தூறினால் பூமியின் கீழுள்ள உஷ்ணம் வெளிப்பட்டு அந்த உஷ்ணத்தைத் தாங்க முடியாமலே முக்கியமாய் கால்நடைகளுக்கு இவ்வியாதி உண்டாகின்றன. ஆனால் அப்படி அரைகுறையாய் மழைபெய்து உஷ்ணத்தைக் கிளப்பாமலிருக்கும்படி செய்ய நம்மால் முடியாது. அப்படிக் கிளம்பிய உஷ்ணத்தை சாந்தம் செய்யவேண்டியது நம்முடைய கடமையாயும் செய்யக்கூடியதாயுமிருக்கிறது. இப்பொழுது கிராமாந்தரங்களில் புராதன வழக்கங்கள் வர வர கைவிடப்பட்டுப் போயிற்று. அதில் குளங்கள் வெட்டப்படாமல் தூர்ந்துபோகும்படி விட்டிருப்பதும் ஒன்று. குளங்கள் அடிக்கடி வெட்டாமல் மேடிட்டுப் போயிருப்பதால் கோடை காலத்தில் சில குளங்கள் சுத்தமாய்க் காய்ந்தும், சில குளங்களில் அசுத்தப்பட்ட தண்ணீர் கொஞ்சமாயிருந்துகொண்டும், இருக்கின்றன. தாலூகா போர்டார்களே ஸுகாதாரத்தைக் கருதி கிணற்றுஜலம் உபயோகப்படுத்துவது நல்லதென்று கிராமந்தோறும் கிணறுகளை வெட்டிவருகிறார்கள். குளங்கள் வெட்ட அவர்கள் ஸம்மதிப்பட்டதேயில்லை. கிணறுகளினால் ஜனங்களின் ஸுகாதாரத்துக்கு நன்மையுண்டாகிறதென்பதற்கு ஆக்ஷேபணையில்லை. ஜனங்கள் நல்ல தண்ணீர் குடிக்காவிட்டால் வியாதி உண்டாகுமென்று நினைக்கப்படுவதுபோல் கால்நடைகளும் நல்ல தண்ணீர் குடிக்காவிட்டால் அவைகளுக்கு வியாதி உண்டாகுமென்று நினைக்கவேண்டியதில்லையா? கிராமாந்தரங்களில் பட்டணங்களைப்போல் தண்ணீர்தொட்டி கிடையாது. கால்நடைகளை எல்லாரும் காலை வேளையில் வெளியில் அவிழ்த்துவிட்டு விட்டு மாலையில் தேடிப்பிடித்து வந்து கட்டுவது வழக்கமாயிருக்கிறது. பகல் நேரங்களில், அதுவும் வெயில் காலங்களில், கால்நடைகளுக்கு தாகமுண்டாகாமலிருக்குமா? தாகமெடுத்தால் அவை யாரைக்கேட்கும் கிணற்றைச்சுற்றி சுற்றி வரவேண்டியதுதான். கால்நடைக்குக் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாதபோது குளிப்பாட்ட தண்ணீர் எங்கிருந்து கிடைக்கும்? தண்ணீருக்கு கஷ்டப்படாமல் செய்வோமேயானால் பாதி கால்நடைகளையாவது வியாதிக்கு இரையாகாமல் தடுக்கலாம். இதற்கு பிரதி கிராமத்திலும்

ஒரு குளத்தையாவது ஆழமாய் வெட்டி நிறைய ஜலம் கட்டிவைத்துக் கொள்ளவேண்டிய தென்று நினைக்கிறோம். தாலூகா போர்டார்கள் குளம் வெட்டவேண்டிய விஷயத்திலும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

என். ஆபத்ஸகாய அய்யர்.

POVERTY OF INDIA

BY

S. M. KRISHNASWAMI.

இந்தியாவின் தரித்திரம்.

சில மாதங்களுக்கு முன் ஒரு கிராமத்தில் ஐரோப்பிய ரொருவருக்கும் இந்திய ரொருவருக்கும் இந்தியாவின் ஏழ்மைத் தனத்தைப் பற்றி யுண்டான சம்பாஷணையை பின்னே எடுத்துக் கூறுகிறோம். இதில் மெய் இவ்வளவென்பதும், விசனிக்கக்கூடியது இவ்வளவென்பதும், திருத்திக்கொள்ளக் கூடியவை இவ்வளவென்பதும், நம் நேயருக்குச் சொல்லாமலே விளங்கும்:—

ஐரோப்பியர்:—நீங்கள் பேசுகிறதைப் பார்த்தால் இந்தியா வரவர ஏழ்மைத்தனத்தை அடைகிறதென்று நினைக்கிறீர்கள்போல் தோன்றுகிறது. உண்மையில் இந்தியாவின் வரும்படி வருஷந்தோறும் அதிகரித்துகொண்டே வருகிறது.

இந்தியர்:—இது மலைப்புத்தான். நாங்கள் கொடுக்கிற வரியைப் பாருங்கள். இப்படி வரிகொடுத்தால் நாங்கள் பிள்ளை குட்டி எப்படிப் பிழைக்கிறது?

ஐரோப்பியர்:—நான் சொல்லுகிறதைக் கவனமாய்க் கேட்பீராயின் உண்மை விளங்கும். இந்தியாவில் ஒருவன் வருஷத்திற்கு ஸராஸரி 3 ரூபாய் வரிகட்டுகிறான். இங்கிலாந்திலோ தலைக்கு 24 ரூ. வரிகட்ட வேண்டியிருக்கிறது. ஆனல் இங்கிலாந்து இந்தியாவைப்போல் 12 மடங்கு நிதி கொண்டுள்ளதென்று சொல்லலாம்.

இந்தியர்:—அப்படி யிருக்க இந்தியன் ஏழையில்லை யென்று எப்படிச் சொல்லுவீர்?

ஐரோப்பியர்:—இந்தியாவின் தரித்திரத்திற்கு துரைத்தனத்தார் காரணமல்ல. குடிகளே தான் காரணம்.

இந்தியர்:—எப்படி?

ஐரோப்பியர்:—விலையேற்றம், வியாபாரக்குறைவு, மற்றுமுள்ள குறைகளுக் கெல்லாம் கவர்மெண்டார்தான் காரணமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். பின்னும் படியாத நாட்டுப்புறத்து ஜனங்கள் அரசனுடைய பாவத்தினல் பஞ்சமும் வியாதியும் வருகின்றனவென்று நினைக்கிறார்கள். இது யோசனையில்லாமல் சொல்லுவது. 'மண்டலத்தோர் செய் பாவம் மன்னனைச் சேரும்' என்று நினைத்திலர் போலும்.

இந்தியர்:—பிரஜைகளுக்குத் தீங்கு வராமல் காப்பது அரசனது கடமையல்லவா?

ஐரோப்பியர்:—முழுவதும் அரசனைச் சார்ந்ததல்ல. கவர்மெண்டார் உயிரையும், பொருளையும் காப்பாற்றிக் கொடுக்கிறார்கள். மற்ற விஷயங்களில் அவரவர்கள் நஷ்டலாபங்கள் அவரவர்களைச் சேர்ந்தது. அரசனும் குடிகளும் ஒத்து வாழ்ந்தாலல்லவோ செங்கோல் செழித்தோங்கும். முற்காலத்தில் அம்மை முதலிய தொத்து வியாதிகளினலும் பஞ்சத்தாலும், அரசர்களிட்டு வந்த சண்டைகளினலும், வருஷந்தோறும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் மாண்டுவந்தார்கள். இப்பொழுதோ ஆங்கில ஆதீனத்தில் சண்டைகளெல்லாம் ஒழிந்தன. பஞ்ச காலங்களில் ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குத் தானியங்கள் கொண்டுவரப்பெற்று அநேக உயிர்கள் காப்பாற்றப் படுகின்றன. அம்மை குத்துவதனலும் ஆஸ்பத்திரிகள்

ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாலும் முன்னிருந்த உயிர்ச்சேதம் இப்பொழுதுகிடையாது. ஆகவே பத்துவருஷங்களுள் 10 லக்ஷம் ஜனங்கள் விருத்தியாகின்றன. ஜனங்கள் அப்படி அதிக மாவதனால் ஒவ்வொருவனுடைய வருமானங் குறைகிறது.

இந்தியர் :—ஆம். உண்மைதான். ஆனால் ஜனத்தொகை அதிகமாகிவிட்டால் அவர்களை எங்கே கொண்டுபோய்த் தள்ளுகிறது? பங்குக்குவந்த பாதகர்களென்று தள்ளிவிடுகிறதா?

ஐரோப்பியர் :—சற்றுப் பொறுமையுடன் கேளும். இங்கிலாந்தின் ஜனத்தொகை அதிகரிக்கஅதிகரிக்க ஜனங்கள் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கு குடியேறி விடுகிறார்கள். ஆகவே உள் நாட்டாரும் வெளியேறுகிறவரும், இருவரும் ஒருமிக்கப் பயன்படுகிறார்கள்.

இந்தியர் :—அப்படியே இந்தியரும் வெளிநாட்டிற்குப் போகலாமே. ஏன் அப்படிப் போகிறதில்லை?

ஐரோப்பியர்:—அறியாமையாலும், பயத்தாலும், மனதிடமின்மையாலும், பிராமணர்கள் தங்களை ஜாதிப்பிரஷ்டம் செய்துவிடப் போகிறார்களே என்றஅதிகிலாலும், இந்துக்கள் தங்கள் பிறந்த இடத்தை விட்டு பெயர்வதில்லை. யோசித்துப்பாருங்கள், உங்கள் ஒளவையாரே, 'திரைகடலோடியுந் திரவியந்தேடு' என்று சொல்லியிருக்கிறார்.

இந்தியர் :—அப்படிப் போகாததனால் பிரமாதம் என்ன?

ஐரோப்பியர் :—பிரமாதம் ஒன்றுமில்லை. ஊரில் போட்டி அதிகமாகிப்போய் ஜீவனத்திற்கு ஹானி நேரிடுகிறது.

இந்தியர் :—சுறுசுறுப்பாயிருக்கிறவன் இங்கே பிழைக்கமாட்டானா?

ஐரோப்பியர் :—சுறுசுறுப்பா யுழைப்பவர்கள் தான் கிடையாதே! ஜனங்கள் ஸாதாரணமாக கைத்தொழில் வியாபாரத்தை ஏற்றுக் கொள்வதில்லை.

இந்தியர் :—ஏன்?

ஐரோப்பியர் :—எல்லாரும், கையில் பேனா எடுத்து எழுதி ஸம்பாதித்தால் தான் ஸம்பாத்திய மென்று நினைக்க ஆரம்பிக்கிறார்கள்.

இந்தியர் :—ஆமாம்! ஆமாம்! அது இங்கிலீஷ் படிப்பு செய்த கூத்தல்லவா?

ஐரோப்பியர்:—எழுத்தாணி பிடிப்பதனாலேயே ஒரு தேசத்தில் செல்வம் விருத்தியாகாது. எல்லாரும் பல்லக்கு ஏறினால் தூக்குகிறவர்கள் யார்? இங்கிலாந்தை, 'கடைக்காரர்கள் ராஜ்யம்,' என்று பலர் இகழ்கிறார்கள். அத்தகைய கடைக்காரர்கள் ஒரு வாரம் தங்கள் கடையை மூடிவைப்பார்களானால் உலகம் எப்படித் தவிக்கும் என்பதை சற்று யோசித்துப்பாரும். விவஸாயம், கைத்தொழில், வியாபாரமுமல்லவா இங்கிலாந்தை இவ்வளவு உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவந்தவை. இந்தியர்கள் இம் மூன்றையுங் கைவிடுகிறார்கள். இதுதான் இந்நாடு தரித்திரதசை அடைவதின் முக்கிய காரணங்களுள் ஒன்று.

இந்தியர் :—நீர் சொல்லுவது உண்மையே. சில விஷயங்களில் குடித்தனக்காரனுடைய நஷ்டலாபங்கள் அவனாலேயே உண்டாவதென்றுமேலே கூறினீர்களே அதெப்படி? சற்று விரித்துரைப்பிரா?

ஐரோப்பியர் :—முக்கியமான சிலவற்றை மட்டும் எடுத்துரைக்கிறேன். நான் ஒன்றும் புதிதாகச் சொல்லப்போகிறதில்லை. எல்லாம் உங்களுக்குத் தெரிந்த விஷயங்களே. முதல் முதலில், நீங்கள் உங்கள் குடும்பச்செலவுகளில்சிக்கனமாக இருப்பதில்லை. கல்யாண

விஷயமாகவும், நவராத்திரி முதலிய பண்டிகைகள் விஷயமாகவும் ஏராளமாக வீண் செலவு செய்கிறீர்கள். வீண் புகழ்ச்சிக்காகவா நம்பொருளைப் பறிகொடுக்கிறது? இந்தியர்கள் கல்லியாணங்களில் செலவழிக்கிறபடி எந்ததேசத்தாரும் செலவழிப்பதில்லை. நீர் உம் வீட்டுக்கல்யாணத்தில் 4 தாசி, ஸதிர்ஆட வைத்தால், உங்கள் அடுத்த வீட்டுக்காரன், 8 தாசி தன்வீட்டுக் கல்யாணத்திற்கு வைக்கிறான். மத்தாப்புகளிலும் பாணவேடிக்கைகளிலும் காசைக் கரியாக்குகிறீர்கள். மேளங்களிலும் கூத்துகளிலும் பணத்தை கண்கால் தெரியாமல் இறைக்கிறீர்கள். ததியாராதனை யென்றும், ஸமாராதனையென்றும், வனபோஜனமென்றும் வைத்து, சோறுகண்டவிடமே ஸ்வர்க்கமென்று அற்பசந்தோஷியாகத் திரிந்துகொண்டு அதையே ஜீவனமாக நம்பி யிருக்கும் நூற்றுக்கணக்கான வைதிக பிராமணர்களுக்கும், பண்டாரங்களுக்கும், 'நூறேடுநூறு நெய்யிலேசுட்டபணியாரம்,' என்று ஏராளமாகச் சாப்பாட்டில் செலவழிப்பதல்லாமல், பூரி தக்ஷிணைகளிலும், துணி மணிகளிலும் மிதமின்றிச் சிலர் வீண் செலவு செய்கிறார்கள்.

இந்தியர்:—அப்படிச் செய்வதனால் பெருந்தீங்கு ஒன்றுங்காணோமே?

ஐரோப்பியர்:—அப்போது ஒன்றுந் தெரியாது, பிற்பாடு தெரியவரும். ஒரு தகப்பன் தன் குமாரன் கல்யாண விஷயமாக கணக்கின்றிச் செலவழிக்காமல், அதை அப்படியே ஆஸ்தியாக வேறொரு இடத்தில் வைத்திருப்பானேல், பிற்காலத்தில் தம்பதிகள் இருவருக்கும் எவ்வளவு உபயோகமா யிருக்கும். யோசித்துப்பாரும்.

இந்தியர்:—கல்யாண மென்றால் வேடிக்கையாக சந்தோஷத்துடனிருக்க வேண்டாமா?

ஐரோப்பியர்:—கல்யாணங்களில் கேளிக்கையுடனிருப்பது அவசியமே: இது எல்லா தேசத்தாருள்ளும் வழக்கந்தான். ஆனால் எதற்கும் மிதமில்லையா? 'கண்டதே காக்ஷி, கொண்டதே கோலமா? போட்டிபோட்டுக் கொண்டு செய்தால் தான் வேடிக்கையா? ஸாதாரணமாக உறவினர்களையும் சிநேகிதர்களையு மழைத்து அவர்களுடன் உண்டு உல்லாசமா யிருப்பது ஸகஜம். மற்ற வீண் விஷயங்களில் செலவழிப்பது மடமையே.

இந்தியர்:—அவனவன் தத்தன் வரும்படிக்குத் தக்கபடிதானே செலவழிப்பான்? அதிகமாக எப்படிச் செலவிடக்கூடும்?

ஐரோப்பியர்:—குழந்தை கேட்கிறதுபோல் கேட்கிறீர். வரும்படிக்குத் தக்கபடி செலவழித்தால் எவ்வளவோ சிலாக்கியமா யிற்றே. அது இல்லையென்றல்லவோ நான் இவ்வளவு தூரம் வருத்தமடைவது. சில வீணர்களின் புகழை நம்பித் தலைகால் தெரியாமல் செலவழிக்கிறார்கள். வேண்டிய பொருள் இல்லாவிட்டால் அண்டை அசலில் தானியங்களையே, பாத்திரங்களையோ, துணிமணிகளையோ, வீடு, நிலங்களையோ அடகுவைத்து ரூபாய் கடன் வாங்கிக் கல்யாணத்தை ஒருவன் நிறைவேற்றுகின்றான். அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியாதென்றபடி இவன் வருந்தி ஈட்டிய பொருளின் அருமை 'காரிகை விற்றுக் கவிபாடுபவற்குத் தெரியுமா? செலவழித்து விட்டு மறுபடியும் கொடுக்க வகை யில்லாமல் தவிக்கிற போதல்லவா வருத்தம் தெரியும்.

இந்தியர்:—கல்யாணத்தில் செலவழிப்பதில் மட்டுமே ஒருவன் ஏழையாகக் கூடுமா?

ஐரோப்பியர்:—இல்லை. இந்தியர் தர்ம விஷயத்தில் உலகெங்கும் புகழ் பெற்றவரென்றாலும், அவர்கள் வகையாகத் தர்மம் செய்வதில்லை. இவர்கள் செய்யும் தர்மத்தின் பெ

ரும்பாகம் தீமையை விளைவிக்கிறதே யொழிய நன்மை விளைவிப்பதாகத் தெரியவில்லை. வருஷந்தோறும் ஒன்றுபோக ஒன்றாக வந்து கொண்டிருக்கும் பண்டிகைகளில் அநேகருக்கு உணவளிப்பது வழக்கமாதலால் இதையே நம்பிக் கொண்டு தேசாந்திரிகளென்றும், பண்டாரங்களென்றும் சில சோம்பேறிகள் ஊரூராகத் திரிந்து வயிறு வளர்த்துக் கொண்டு வருகிறார்கள். அன்றியும் ஒரு குடும்பத்தில் உழைத்து ஸம்பாதிக்கிறவன் ஒருவனிருக்க, உட்கார்ந்து சாப்பிடுகிறவர்கள் எட்டுப்பேர் இருப்பார்கள். பெண்டு பிள்ளைகளைத்தவிர தன்னைச் சேர்ந்தவராவது, தன்மனைவியைச் சேர்ந்தவராவது, சிலர் வீட்டிலிருந்து கொண்டே யிருக்கிறார்கள். இவ்வாறன்றி, மேற்கூறிய சோம்பேறிகளும், தண்டச்சோறு தின்னாமல் உழைத்து சம்பாதிப்பாராயின் நாட்டின் செல்வம் எவ்வளவு அதிகரிக்கும் ?

இந்தியர் :—இது வரையில் நீர் சொல்லியவை யனைத்தும் உண்மையே ! மேலும் ஏதாவது புத்தி மதி புகட்டக்கூடிய விஷயங்கள் எடுத்துரைப்பீராயின் நாங்கள் வந்தனத்துடன் ஏற்றுக் கொள்வோம்.

ஐரோப்பியர் :—நீர் உம்மனதில் என்ன நினைத்துக் கொண்டாலும் ஸரி, எனக்குத்தோன்றிய வற்றை மனதாறச் சொல்லி விட்டேன். இன்னும் சில சில்லரைக் காரணங்களுண்டு. முக்கியாம்சங்களை மட்டும் எடுத்துரைத்தேன். பன்னியுரைத்திடில் பாரதமாமாதலால் இப்பொழுது இம்மட்டோடே நிறுத்துவோம். மற்றொரு முறை சந்திக்கும் போது விட்டுப்போனவைகளை வேண்டுமானால் எடுத்து விளக்குகிறேன்.

எஸ். எம். கிருஷ்ணஸ்வாமி.

ADVERTISING METHODS.

பயிரங்கப்படுத்தும் விதங்கள்.

பயிரங்கப்படுத்தும் விளம்பரங்கள் சரக்கின் ரீதியை ஒட்டியே இருக்கவேண்டும். சரக்கு ஸுமாராகயிருக்க அதை அஸாத்தியமாய் ஸ்தோத்திரம் செய்தால் முதல்தடவை என்னமோ வாங்குவார்கள். பிறகு அந்த வியாபாரி பேர் கெட்டுப்போய்விடும். ஜனங்களும் அவனிடத்தில் வியாபாரத்தை நிறுத்திவிடுவார்கள். ஆகையால் ஒரு வியாபாரிதான் விளம்பரப்படுத்தின பிரகாரம் நடப்பதற்குத்தயாராக யிருக்கவேண்டும். நல்ல ஸாமான்களைத்தான் விற்கவேண்டும். சரக்கை மாற்றிக் கொடுக்கச் சொன்னால் ஒப்புக்கொள்ள வேண்டும். பணத்தை திருப்பிகொடுக்கச் சொன்னாலும் கொடுக்க வேண்டும். சரக்கை அனுப்பச்சொன்ன மணிப்பிரகாரம் அனுப்பவேண்டும். மேற்கூறிய தீர்மானங்களை ஜனங்களுக்கு பயிரங்கப்படுத்தி தானும் தன்னுடைய ஆட்களும் அந்த மாதிரி நடக்கத்தயாராயிருக்க வேண்டும். வேலைக்காரர்களுக்கு சரக்குகளின் விலைகளும் அவைகள் வைத்திருக்கும் இடங்களும் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். ஜனங்கள் வந்து கேட்கும்போது கடையில் இருக்கப் பட்ட சரக்குகளைக்கூட இல்லை யென்று சில வேலைக்காரர்கள் சொல்லுவதை நாம் கேட்டிருக்கிறோம். நல்ல வேலைக்காரர்களாக பார்த்து ஏற்படுத்தவேண்டும். அவர்களை சந்தோஷப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அப்போதைக்கப்போது செய்து கொண்டிருக்கவேண்டும். கடையில் சரக்கு எடுத்துக் கொடுப்பவர்கள் சந்தோஷமாக யிருந்தால் தான், வாங்கவருபவர்களும் சரக்குகளை அவர்களிடத்தில் வாங்கப் பிரியப்படுவார்கள். ஆகையால் வேலைக்காரர்கள் சந்தோஷமாய் வேலை செய்வதற்காக சில வியாபாரிகள் அவர்களுக்கு லாபத்தில் பங்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்

டு பிரதிவருஷம் அல்லது இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை லாபத்தைப் பங்கிட்டுக்கொடுக்கிறார்கள். இன்னும் சிலர் வியாபார ஸம்பந்தமாக பரீட்சை ஏதாகிலும் வைத்து அதில் முதன்மையாய் இருப்பவனுக்கு வெகுமதி யளிக்கிறார்கள்.

முற்காலத்தில் வியாபாரிகள் வேலைக்காரர்களை வாசலில் நிறுத்தி வழியோடு போகிறவர்களை வலுவில் கூப்பிடுவார்கள். தற்காலத்திலும் வெளியே மாட்டியிருக்கும் படங்களைக்கொண்டு நாம் அந்த மாதிரி செய்ய எத்தனிக்கிறோம். கடைகள்தோறும் வெளிப்பக்கத்தில் பச்சை சிகப்பு லேபில்கள் ஒட்டிய தகரடப்பிகளை கோபுரங்கள் மாதிரி ஜோடித்து வைத்திருக்கிறார்கள். இது ஜோடிக்கிறவனுடைய ஸாமர்த்தியத்தை காண்பிக்கிறது. ஆனால் எல்லாக்கடைகளிலும் ஒரே மாதிரியாகயிருப்பதினால் வாங்குபவர்களுடைய மனதை இந்தக்கடையில் தான் வாங்கவேண்டுமென்று இழுப்பதற்கு ஒன்றுமில்லை. தகரப்பெட்டிகளையும் புட்டிகளையும் வைத்து இடத்தை அடைப்பதற்கு பதிலாக நல்ல படங்களை வரைந்து மாட்டி வைத்தால் ஜனங்களுடைய மனதை யிழுக்கும். அந்தப்படங்களில் ஸாமான்களின் மேன்மையை குறித்தும் விலையை குறித்தும் இரண்டொரு வரிகள் வரையலாம். காட்லிவர் எண்ணெய் விற்குமிடத்தில் அதை சாப்பிட்டு மார்பு பெருத்த மாதிரியாக ஒரு பொம்மையை வரைந்து காட்டலாம். பண்டகசாலைகளில் சரக்குகள் செய்யப்படும் விதங்களை சித்திரங்களில் வரைந்து தொங்கவிடலாம். ஒரு சக்கிலியன் கடையில் ஒரு நோயாளி படுத்திருக்கிற மாதிரியும் அவன் பக்கத்தில் மருந்துப் பெட்டிகள் வைத்திருக்கிற மாதிரியும் படம் எழுதி தொங்கவிடப் பட்டிருந்தது. இதன் தாத்பரியம் இன்னதென்று அறியாதவர்களுக்காக அந்தப்படத்திற்கு அடியில் அவன் ஜோடு போட்டுக் கொள்ளுகிறதில்லை யென்று எழுதப்பட்டிருந்தது. சில வியாபாரிகள் தற்காலத்திய விசேஷ வர்த்தமானங்களின் சித்திரங்களைத் தொங்கவிடுகிறார்கள். உதாரணமாக ராஜாவுக்கு பட்டாபிஷேகம் நடந்த மகோற்சவத்தை படத்தில் காண்பிப்பார்கள். புதிதாக கண்டு பிடித்திருக்கும் பறக்கும் யந்திரத்தின் படத்தைக் காண்பிப்பார்கள். நல்ல சரக்கை தெரிந்தெடுக்கும் குறிகளையும் நல்ல சரக்கிற்கும் கெட்ட சரக்கிற்குமுள்ள வித்தியாஸங்களையும் விவரித்து எழுதுவோர் சிலர். எல்லா வியாபாரிகளும் தங்கள் தங்கள் சரக்குகளை நல்லதென்றே சொல்லுவார்கள். ஆகையால் ஜனங்களுக்கு நம்பிக்கை கொடுக்கிறதில்லை. ஆனால் நல்லதென்று சொல்லுவதற்கு காரணமெடுத்துரைத்தால் ஒப்புக்கொள்ளுவார்கள். சிலர் இதை படரூபமாகக் காட்டுவார்கள். உதாரணமாக ஒரு தோல் வியாபாரி தன் கடைக் கெதிரில் ஒரு படத்தை மாட்டி யிருந்தான். அந்தப்படத்தில் ஒரு ரம்பம் பல கடைகளில் விற்கும் தோல்களை அறுக்கிற மாதிரியும் அவைகளில் இந்தக்கடைதோல் மாத்திரம் ஜாஸ்தி அறுபடாமல் இருக்கிற மாதிரியும் வரையப்பட்டிருந்தது. ஒரு விளக்குகளை விற்கும் வியாபாரி தான் விற்கும் விளக்கு ஜாஸ்தி பிரகாசத்தைக் கொடுக்குமென்று எழுதி ஒட்டுவதற்கு பதிலாக தன் விளக்கையும் வேறு விளக்குகளையும் ஏற்றி எறியவிட்டார். இதை பார்த்தவர்கள் தாங்களே இந்த லாந்தரின் மேன்மையை உணர்ந்து கொண்டார்கள்.

மேற்சொன்ன மாதிரி பரீட்சைகாட்ட முடியாத விஷயங்களில் நல்ல டாக்டர்கள் அல்லது நன்குணர்ந்தவர்களுடைய அத்தாக்ஷி பத்திரங்களை தொங்கவிடலாம். ஒரு கொடை வியாபாரி தன்னுடைய கடைக்கருகில் ஒரு குழாய் கட்டி அதிலிருந்து ஜலம் சிறு துளிகளாக நாலாபக்கங்களிலும் வந்து விழும்படி செய்து,

அதனடியில் ஒரு வேலைக்காரனை தன்னுடைய கொடை ஒன்றைப்பிடித்து நிற்கும்பாடியாகச் செய்தார். கொடையின்மேல் விழுந்தஜலம் ஊறி உள்பக்கத்தில் சொட்டவில்லை. இதனால் நல்ல "வாட்டர் ப்ரூப்" அதாவது தண்ணீரில் நனையாத கொடையென்று உணர்ந்து கொண்டு, வேடிக்கைபார்க்க வந்த ஜனங்கள் வாங்க தீர்மானித்தார்கள். ஒருவர் தன் கடையில் வியாபாரம் செய்பவர்களுக்கு லாபம் உண்டென்று தெரிவிப்பதற்கு என்ன யுக்தி செய்தாரென்றால் நூறு ரூபாய்க்கு சில்லரை மாற்றி கடை பலகணியண்டை குவியலாகக் குவித்து வைத்தார். பலகணியின்மேல் எங்கள் கடையில் வியாபாரம் செய்தால் இவ்வளவு பணம் சேர்க்கலாமென்று பெரிய எழுத்தில் எழுதப் பட்டிருந்தது. ஒருவர் வாடகை ஜாஸ்தி கொடுக்கமுடியாமல் சிறிய யிடத்தில் கடை வைக்கும்படியாக நேர்ந்தது. அந்த யிடத்தில் தன்னுடைய ஸாமான்களைப்பரப்பி பயிரங்கபடுத்த முடியவில்லை. அதற்காக என்னயுக்தி செய்தாரென்றால் தன்கடைக் கெதிரில் ஒரு கூடு மாட்டி அதில் குஞ்சுபொரிக்கும் தருணமாக யிருக்கும் கோழிமுட்டைகளை வைத்து குஞ்சு பொரிப்பதைக் காண்பித்தார். குஞ்சு பொரிப்பதை அநேகர் பாராமல் இருக்கக்கூடும். இந்த வேடிக்கையைப் பார்க்க வந்த ஜனங்கள் அந்தக்கடையில் இன்ன சரக்கு விற்கப்படுகிற தென்று அறிந்து கொண்டார்கள். பெருத்த வியாபாரிகள் பத்திரிகைகளின் மூலமாயும் விளம்பரங்கள் மூலமாயும் தங்களுடைய பெயரையும் சரக்குகளையும் பயிரங்கப்படுத்தக் கூடும், ஆனால் சில்லரை வியாபாரிகள் அவ்விதம் செய்யமுடியாது. ஆதலால் முன்னால் கூறிய மாதிரியான யுக்திகளால்தான் சரக்குகளை பயிரங்கப் படுத்தவேண்டும்.

சில வியாபாரிகள் தங்கள் கடைகளில் நல்ல பிரகாசமான விளக்குகளைக்கொளுத்தி வைக்கிறார்கள். அப்படிச் செய்வதில் அவர்களுடைய அபிப்பிராயம் என்னவென்றால் பிரகாசம் ஜனங்களை அந்தப்பக்கம் இழுக்கு மென்பது. ஆனால் அப்பிரகாசம் அவர்கள் எண்ணத்திற்கு நேர் விரோதமாக யிருக்கிறது. ஏனெனில் பிரகாசத்தைப் பார்க்கமுடியாமல் ஜனங்கள் வேறுபக்கம் முகங்களை திருப்பிக் கொள்ளுகிறார்கள். ஆகையால் விளக்குகளின் வெளிச்சம் ஜனங்களின்மேல் ஜாஸ்தி படாமலும் சரக்குகளின்மேல் ஜாஸ்திபடும்படியாகவும் இருக்கவேண்டும். துணிக்கடையில் வர்ண விளக்குகள் இருக்ககூடாது. ஆனால் நாற்காலி கட்டில் முதலான மரஸாமான்கள் விற்குமிடத்தில் பல விதமான வர்ணங்கள் கூடிய காந்தவிளக்குகளை வைத்து ஒரு வீட்டை ஜோடித்து அலங்கரித்தால் எப்படி யிருக்குமோ அப்படி ஜோடித்துவைப்பது நலம். பார்க்கிறவர்களுக்கு தங்கள் வீட்டையும் இந்த ஸாமான்களை வாங்கிக்கொண்டுபோய் ஜோடித்தால் அழகா யிருக்கும் என்ற ஆசை உண்டாகும்.

கடையை சாத்தின பிறகுகூட விளக்கு வைத்திருந்தால் லாபமுண்டு. ராத்திரியில் ஜன்னல் வழியாக உள்ளே யிருக்கும் ஸாமான்களை நிதானமாக ஜனங்கள் பார்ப்பார்கள்,

SELECTIONS.
விசேஷத்திரட்டு.

MANURE
பசளை.

1. ஒவ்வொரு வருடமும், ஒரு தரையில் ஒரே யினப் பயிர் செய்யப்பட்டால் அத்தரையில் அப்பயிருக்கேற்ற உணவு வரவரக்குறைந்துவிடும். அக்குறைவினால், அப்பயிரால் வரும் பிரயோசனமும் வரவரக்குறையும். இக்குறைவை நிறைவாக்குவதற்காக, நிலத்துக்கு இடப்படும் எரு, குழை முதலிய பொருட்களே பசளை யெனப்படும்.

2. பசளைகளில், கமப்பசளை, வியாபாரப் பசளை என இருவகைகளுண்டு.

3. கமப்பசளையாவது கமக்காரன் தன் நிலத்தில் செலவின்றிச் சேகரிக்கக்கூடிய பசளை; இப்பசளையில் பலவகைகள் உண்டு. அவைகளிற் பிரதானமானவை எவையெனில்: மாட்டெரு, ஆட்டெரு, குதிரையெரு, கோழியெச்சம், மூத்திரம், மரச்சாம்பல், கலவைப்பசளை, குழை என்பவைகளாம்.

4. மாட்டெரு:—இது மாட்டின் சாணி. இதில் பயிருக்குவேண்டிய பலவகை யுணவுமுண்டு. இளம் மாட்டின் சாணியிலேயே பயிருணவு அதிகமாக யுண்டு. புல்லும், வைக்கோலும் தின்று சீவிக்கும் மாட்டின் சாணியிலும் இத்தீன்களுடன் கொள்ளு, தவிடு, பிண்ணாக்கு, முதலிய தீன்களைத் தின்னும் மாட்டின் சாணியில் அதிக பயிருணவுண்டு.

5. ஆட்டெரு:—வெள்ளாட்டெரு, மாட்டெருவிலுஞ் சற்றே திறமானது. செம்மறி ஆட்டெருவோ மற்றைக் கமமிருகங்களின் எருவிலும் அதிக திறமானது. இதில் உப்புவாயு அதிகமுண்டு.

6. குதிரையெரு:—இது மாட்டெருவிலுந் திறமானது. ஆனால் இது சூடுகொண்ட எருவாகையால், இப்பசளையிடப்படும். பயிருக்கு நீர் குறைவில்லாதிருக்கவேண்டும். அப்படி யிருந்தால் பயிர் அதிக பலனைக்கொடுக்கும். இந்த எருவை வெகு நாட்களுக்குக் காற்றாடாடக் குவித்து வைத்தால் அதின் பலன் கெட்டுப்போகும்.

7. கோழியெச்சம்:—இது மேலே சொல்லப்பட்ட எல்லா எருக்களிலுந் திறமானது. இதில் உப்புவாயு ஆட்டெருவில் இருப்பதிலும் அதிகமாயுண்டு. இது காரமான எருவாகையால், நீரில் கரைக்கப்பட்டுப் பயிருக்குப் பாவிக்கப்படவேண்டியது.

8. மூத்திரம்:—இதில் உப்புவாயு அதிகமுண்டு. இதுவுங் காரமான பசளையாயிருப்பதால் நீருடன் கலக்கப்பட்டுப் பயிருக்குப் பாவிக்கப்படவேண்டியது.

மூத்திரம் மணல் நிலத்தைக் கெட்டிப்படுத்தும். இத்தேசத்தவர்கள் இப்பிரயோசனமான பசளையைச் சேகரித்துப் பாவிக்கிறதில்லை. மூத்திரத்தைக் கண்டவிடங்களில் அவமாய்க் கழித்துவிடாதபடி தகரவாளிகளில் விட்டு நீர்சேர்த்துப் பயிருக்கிட்டு நல்ல பலனை அடையலாம்.

9. மரச்சாம்பல்:—இது மரத்தை எரிப்பதினால் உண்டாகும் பொருள். நிலத்திலிருந்து மரமானது எடுத்துக்கொள்ளும் நிரசவஸ்துக்கள் (Mineral plant food) சாம்பலி லடங்கியிருக்கின்றபடியால், இது எப்பயிருக்கும் ஏற்ற பசளையாகும். உவர்நிலத்திலுள்ள மரங்களின் சாம்பலில் கறியுப்புக்காரம் (Soda) அதிகமாயுண்டு; மற்றவிடங்களிலுள்ள மரங்களின் சாம்பலில் வெடியுப்புக்காரமே (Potash) அதிகமாயுண்டு.

சாம்பலில் மூன்றிலொருபங்கு சுண்ணாம்பாகையால், சுண்ணாம்பினால் நிலத்துக்குண்டாகும் நயத்தை இதுவுங் கொடுக்கும். இவ்விதமான உபயோகமுள்ள பொருளை அநேக ஜனங்கள் பசளையாகப் பாவியாமல் வேலிகளில் கறையான் பிடியாதபடி அவைகளினடியில் கொட்டிவிடுகிறார்கள். மற்றைப் பசளைகளுடன் சாம்பலையும் எருக்கிடங்கிற் போடுவது நற்பலன் பெறும் வழியாகும்.

உவர் நிலத்துக்கு இப்பசளை ஏற்றதல்ல.

10. கலவைப்பசளை:—குப்பை, வைக்கோல் புல்லு, இலை, உமி, சாம்பல் முதலிய பொருட்களை மாடு, ஆடு, குதிரை, கட்டும் இடங்களில் பரவி, அவைகளில் அம்மிருகங்களின் மல சலங்களைப் படவிட்டு, அக்கலவையை யெடுத்துச் சீமெந்து (Cement) சுண்ணாம்பினால் கட்டப்பட்ட ஓர் கிடங்கிற் போட்டு, வெயில்படாதபடி கொட்டிவிட்டு, ஈரலிப்புள்ளதா யிருக்கும்படி நீரை இடைக்கிடை விட்டு காற்றட்புகுந்து பழுதுபடுத்தாதபடி அடித்திருக்கிச் சேகரிக்கப்படும் பசளையே கலவைப்பசளை.

இப்பசளை பயிர்களுக்கு வேண்டிய உணவைக் கொடுப்பது மல்லாமல் நிலத்துக்குக் கசிவையும் அதிகமாய்க்கொடுக்கும்.

11. குழை:—மரங்கள் செடிகளின் இலைகளை நிலத்துள் தாழ்ப்பது அந்நிலத்தின் கசிவை அதிகப்படுத்துவது மல்லாமல்,பயிருக்கு வளர்ச்சிக்கேற்ற உணவையுங் கொடுக்கின்றது. நெற்றுப்பயிர்களின் (Legumes) வேர்களிலுள்ள ஒர்வகைச் சிவமூலங்கள் (Germs) காற்றிலிருக்கும் உப்பு வாயுவைக் கிரகித்து இப்பயிர்களிற் செறியப்பண்ணுகின்றனவென்பது, கற்றோரின் கருத்தாயிருக்கின்றது. உப்பு வாயுவே மரவளர்ச்சிக்கு அதிதேவையான பயிருணவாயிருப்பதால், நெற்றுப்பயிர்களாகிய சிவணர் வேம்பு, காவிளாய்,புங்கு முதலியவற்றின் குழைகள், மற்றைமரங்களின் குழைகளிலும் பார்க்க, நிலத்துக்கு விசேஷ பலனைக் கொடுக்கின்றனவென்பது அனுபவத்தால் அறியப்பட்டவுண்மை.

எல்லாக் குழைகளும் நிலக் கசிவை யுண்டாக்கும்; ஆனால் நெற்றுப்பயிர்களின் குழையோ அதனோடு பயிர் செழித்துண்டாகச் செய்யும் வல்லமையையும் உடையது. வேலிகளிலுங் காடுகளிலும் வெட்டப்படும் பலவிதமான குழைகளை, அதிக விலைகொடுத்து வாங்கிக் காய்ந்தபின் நிலத்துள் தாழ்ப்பதே, யாழ்ப்பாணத்திலுள்ள கமக்காரின் வழக்கம். இவ்விதமாகப் பணத்தை வீணாய்ச் செலவழித்து நட்டமடைவதிலும்,நெற்றுப்பயிர்களாகிய கொள்ளு, பயறு, உழுந்து, சணல், கிலுகிலுப்பை, டெயின்சே (Dhaincha) வங்காளப் பகுதியில் உண்டாக்கப்படுகின்ற ஒர்வகைச் சணல் முதலிய வற்றைப் பயிரிடப்படும் நிலத்திற்றானே உண்டாக்கி, அவைகளைப் பூக்கும் பருவத்தில் வெட்டி நிலத்துட் புதைப்பது செலவிற் சுருக்கமும் பலனிற் பெருக்கமும் அடைவதற்கு ஏற்றவழியாகும். இந்த உண்மையைக் கமக்காரர் அனுபவத்தாற் சோதித்தறிக.

சணலும், டெயின்சையும், கிலுகிலுப்பையுமே உப்புவாயுவை நிலத்தில் அதிகமாகச் சேர்த்துவிடும் நெற்றுப்பயிர்கள். முள்முருக்கும் இவைகளைப்போல நிலத்தைச் செழிக்கப்பண்ணும் மரம். இதின் விசேஷ பிரயோசனத்தை யாழ்பாணத்துக் கமக்காரர் அனுபவத்தால் அறிந்து தங்கள் வெற்றிலைக் கொடிக்கும் கிழங்குக்கொடிக்கும் இம்மரத்தைப் பாவிக்கிறார்கள்.

12. கமப் பசளைகளைச் சரியானவிதமாய்ச் சேர்த்துப் பழுதுபடாமல் பவுத்திரப்படுத்திவைக்க இத்தேசத்துக் கமக்காரருக்குச் சிறிதுந் தெரியாது. மழை காற்று, வெயில்படத்தக்கதாம், குடியிருக்கும் வளவில் ஒரிடத்தில் கமப்பசளையைக் கொட்டிவைப்பதே இவர்களின் வழக்கம். மழை, காற்று, வெயில்படுவதினால் எருவிலிருக்கும் பயிருணவின் ஒரு பகுதி சமூவுப்பட்டுப் போய்விட, இன்னொருபகுதி ஆவியாய் மாறிக் காற்றுடன்சேர, மிஞ்சியிருக்கும் சக்கையை நிலத்துக்கிடுவதால், பயிர் செழித்துண்டாகாது. ஆகையால், கமப்பசளைகளைக் கலவைப்பசளைக்குச் சொன்னமுறைப்படி, கிடங்கிற்போட்டுப் பவுத்திரப்படுத்திக்கொள்ளவேண்டும்.

13. சிலவிடங்களில், கமக்காரர் கோடைகாலத்தில், மாட்டெருவை, வயல்களில் பரவி விடுகிறார்கள். இப்படி இடப்படும் எருவில் வெயில்படுவதினால், அதிலுள்ள பிரதான பயிருணவாகிய உப்பு வாயு ஆவியாய்க் காற்றுடன்சேர, மிஞ்சிக்கிடப்பது சக்கையே. இவ்விதமாகவே, கோடைகாலத்தில் வயலில் அடைக்கப்படும் ஆடுகளின் எருவுங் கெட்டுப்போகின்றது. இவைகளின் பயிருணவுத்தன்மை குறைவுபடாது இருக்கவேண்டுமாயின் இடப்படும் எருவை அன்றாடு கொத்தி நிலத்துட் சேர்த்துவிடவேண்டும்.

14. மேலும், அநேக கமக்காரர், கிடங்கிலிருக்கும் எருவையும் விதைப்பதற்கு வெகுநாட்களுக்கு முன் கொண்டுபோய் வயல்களில், வண்டில் வண்டிலாகவும், கடகம் கடகமாவுங் கொட்டி வெயில்பட விடுகிறார்கள். எருக்குவியலை வயலிற் போட்டவுடன் பரவி உழுது மண்ணினால் மூடிவிட்டால், அந்த எருவின் பயிருணவுத்தன்மை ஒருகாலத்துங் குறையவே மாட்டாது.—கமத்தொழில்விளக்கம்.

DEPARTMENTAL NOTES.
பகுதிக் குறிப்புகள்.

AGRICULTURE.
விவஸாயம்.

Earthworms in Agriculture.

விவஸாயத்தில் மண் உண்ணும் புழுக்கள்.—நம்மவர்கள் அனேகருக்கு சில புழுக்கள் மண்ணைத் தின்று ஜீவித்துக்கொண்டிருக்கின்றன என்பது நன்ருய்த் தெரியும். மண்ணில் அனேக தாவர வஸ்துக்களாகிய செடி, கொடி, புல், பூண்டு முதலியவைகளும், ஜெந்துக்களும், செத்த பின் மண்ணுள் அழுகி மட்கும்போது ஒருவிதமான ரஸ பதார்த்த நிலைமையையடைகின்றன. ரஸபதார்த்தத்தை உட்கொள்ளும் பொருட்டு இம்மண்ணில் வஸிக்கும் புழுக்கள் மண்ணை உட்கொள்ளுகின்றன. தங்கள் தேகத்திற்கு உபயோகமுள்ள பதார்த்தங்களை உணவாகக்கொண்டு மற்றவைகளைக் கழிவு பதார்த்தங்களாய் மலரூபமாய் வெளிவிடுகின்றன. இப்படி இப்புழுக்கள் செய்வதால் கீழ்மண் மேல்கொண்டுவரப்பட்டு வெகு நுட்பமான மண் மேல்பரப்பில் சேகரித்து வைக்கப்படுகிறது. இது உரம் செய்து வண்டல் முதலான வேறு மண் அடித்த குணங்களைக் கொடுக்கிறது.

ஸாதாரணமாய்ப் பயிரிடும் நிலங்களில் இப்புழுக்கள் வருஷத்திற்கு 1/10 அங்குலம் மண்ணை கீழ் மண்ணிலிருந்து மேல் பரப்புக்குக் கொண்டு வருவதாய் ரஸாயன சாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிருர்கள். இக்கணக்கின்படி ஸுமார் 50-வருஷத்தில் கீழ்ப் பரப்பிலிருந்து மேல் பரப்பிற்கு 5-அங்குல மண்ணை இப்புழுக்கள் கொண்டு வரும்.

Food Stuff for Cows.

பசுக்களுக்குத் தீனி.—சில குடியானவர்கள் தங்கள் பசுக்களுக்கு ஏராளமாயும் அபரிமிதமாயும் தீனி போட்டால் நிறைய வெண்ணெயும் பாலும் கிடைக்கு மென்று எண்ணி பிண்ணுக்கையும் தவிட்டையும் நிறையப் போடுகிருர்கள். இவ்விதம் செய்வது பிசகு என்று சாஸ்திர ஆராய்ச்சி செய்தவர்கள் சிலர் சொல்லுகிருர்கள்.

Hints on Cattle-breeding.

மாடுகளை விருத்திசெய்ய சில யுக்திகள்.—ஒருவன் புதிய மாடுகளை வாங்கி விருத்திசெய்யலாம், அல்லது தன்னிடமிருக்கிற எருதுகளை விருத்தி செய்யலாம். புதிதாய்க் கிடை சேர்க்கிறவன் நல்ல பொலி எருதும் அதற்குத் தக்க நல்ல வர்க்க கிடாரிகள் கொஞ்சமும் வாங்கவேண்டும். கிடையில் பிறக்கிற கன்றுகளில் நல்லதாய்த் தெரிந்தெடுத்து மாப்பிள்ளைக் காளையாய் விடவேண்டும். இம்மாதிரி செய்கிறதினுல் கால்நடை விருத்தியாகும்.

Ceylon Agricultural Students.

ஸிலோன் விவஸாய மாணவர்கள். ஸிலோன் கவர்ன்மெண்டார் 4 ஸிலோன் சிறுவர்களை பம்பாய் மாகாணஞ்சென்று புனு விவஸாயக் காலேஜில் விவஸாயக் கல்வி கற்றுவரத் தெரிந்தெடுத்திருக்கிருர்கள். அவர்கள் 4 பேரும் கோயம்புத்தூரிலுள்ள விவஸாய காலேஜில் சேராததற்குக் காரணம் அங்கே இடமில்லாததே.

Light and Heavy Cotton Seeds.

லேசும் பளுவுமான பருத்திக்கொட்டைகள்.—மேல்நாட்டார் பருத்தி ஸாகுபடியில் பளுவான விதைகளையும் லேசான விதைகளையும் ஒரேமாதிரி தன்மையுள்ள நிலத்தில் ஒரேமாதிரி பண்புசெய்து ஒரேநாளில் விதைத்துப் பரிசோதனை செய்ததில், லேசான விதைகளை விதைத்த பயிரைப்பார்க்கிலும் கனமான விதைகளை விதைத்த பயிரிலிருந்து 100-க்கு 10 ராத்தல் ஜாஸ்தி பருத்தி விளைந்திருப்பதாக ஸ்தாபித்திருக்கிருர்கள்.

Sir John Hewett on Agriculture.

ஸர் ஜான் ஹியூவெட் விவஸாயத்தைப் பற்றி.—ஐக்கிய மகாணங்களின் லெப்டினெண்ட் கவர்னராகிய ஸர் ஜான் ஹியூவெட் ஒரு தடவை விவஸாயத்தைப்பற்றி பேசின பேச்சில் பின்வருமாறு சொன்னுர்:—

உலகத்தில் விவஸாயமானது சும்மா இருந்த நிலைமையிலேயே இருக்கவில்லை. அது அபிவிர்த்தியாகி தினத்துக்குத் தினம் புதுமாதிரிகளை யனுஷ்டித்து வருவதால், இந்திய விவஸாயிகளும் சும்மா இராமல் புது உபாயங்களை யனுஷ்டித்து வரவேண்டும். அநேக விவஸாயப் பொருள்கள் விவஸாயம் செய்யப்படாமல் குறைந்துபோயின; உதாரணமாக, அவுரி முப்பது வருஷத்துக்கு முன்னுல் 3 லட்சம் ஏக்கராவில் பயிர் செய்து வந்ததானது, இப்போது 40 ஆயிரம் ஏக்கராவில் தான் பயிர் செய்யப்பட்டுவருகிறது;

அதுபோலக் கரும்பும் ஆகிவிடாமல் விவஸாயிகள் ஒன்ருய்ச்சேர்ந்து, அதை முற்படுத்தவேண்டும். விவஸாயிகளுக்கு ராஜாங்கத்தார் செய்யவேண்டிய ஒத்தாசையை அவர்கள் செய்துகொண்டு வருகிருர்கள்; பொருட்காட்சியில் விவஸாயக்கோர்ட்டில் காட்டப்படும் யந்திரங்களேயும் கருவிகளேயும் விவஸாயிகள் போய்ப் பார்க்கவேண்டும்; விவசாயிகளுக்கும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு முள்ள நேசப் பான்மையானது வரவர முற்றவேண்டும்.

Settlement Schemes.

ஸெட்டில்மெண்டு ஸ்கீம்கள்.—நாளது மேமாஸத்தில் உதகமண்டலத்தில் கூடிய சட்ட நிர்மாண ஸபையின் மீட்டிங்கில் ஆனரெபில் மிஸ்டர் ராமச்சந்திரராவ் பந்துலு இந்த மாகாணத்து ஸெட்டில்மெண்டைப்பற்றிப் பின்வருமாறு கேள்விகேட்டார்:—எந்த டிஸ்ட்ரிக்ட்களுக்கும் தாலூக்காக்களுக்கும் 1912-ம் வருஷத்தில் ஸெட்டில்மெண்ட் நடக்கப்போகிறது? போன எப்பிரல் மாஸத்தில் பட்ஜட் விவாதத்தின் போது ஆனரபில் திவான்பகதூர் ஆதிநாராயணய்யா எங்கேயாவது ஸெட்டில்மெண்ட் செய்வதாக நிச்சயமாயிருந்தால் அந்த ஸெட்டில்மெண்ட் ஸ்கீமை சட்டஸபையில் விவாதத்துக்குக் கொண்டு வரவேண்டுமென்றும், அது ஸம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் கெஜட்டில் பிரசுரம் செய்யவேண்டுமென்றும், சொன்ன யோசனைப்படி இந்த வருஷத்தில் செய்யப்படும் ஸெட்டில் மெண்டுகளேக் குறித்து மேற்கண்டவாறு கவர்ன்மெண்ட் செய்வார்களா என்று கேட்டார். இதற்குப் பதில், கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த பொள்ளாச்சி உடுமலைப்பேட்டை, கொள்ளேகால் இவைகளைப்பற்றின ஸெட்டில்மெண்டுதான் கவர்ன்மெண்டின் முடிவான உத்தரவுகளை எதிர்நோக்கியிருக்கின்றது. பின்வரும் ஜில்லாக்களிலும் தாலூக்காக்களிலும் புது ஸெட்டில்மெண்டு 1912-1913-ம் வருஷத்தில் செய்யப்படலாம்:—

டிஸ்ட்ரிக்ட்டுகள்.	தாலூக்காக்கள்.
(1) வட ஆற்காடு—	வாலாஜாபேட்டை, ஆர்கோணம், செய்யாறு (ஒருபோகம்)
(2) கோயமுத்தூர்—	பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கொள்ளேகால்
(3) சித்தூர்—	வாயல்பாட்
(3) ராமநாடு—	ஸ்ரீ வில்லிப்புத்தூர்

ஸெட்டில்மெண்ட் ஸ்கீம்கள் அனுஷ்டானத்துக்கு வருமுன்னல் அவைகளை சட்டஸபை முன் கொண்டுவர கவர்ன்மெண்ட் பிரியப்படவில்லை; ஆயினும் அவைகள் ரெவினியூ போர்டுக்கு அனுப்பப்படும் போது டிஸ்ட்ரிக்ட் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட உத்தரவு செய்வீர்கள், என்று பதில் சொல்லப்பட்டது.

Ants.

எறும்புகள்.—சில தோடை, எலுமிச்சை,மா முதலிய மரங்களினடியிலே புற்றுண்டாக்கி அதிலே பலவித எறும்புகள் குடிகொண்டு அவ்வம்மரங்களின் கொம்புகிளைகளிற் போக்குவரவுபண்ணி மரங்களைக் கெடுக்கின்றனவென்றும், அவைகளைத் துரத்த முயன்றும் அனுகூலப்படவில்லை யென்றுங் கமக்காரர் விவஸாயிகள் சொல்ல வறிகிறேம். அவ்வித எறும்புகள் குடிகொண்டிருக்கும் மரங்களின் இலைகளிலே வேறு ஜாதிப் பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன. இப்பூச்சிகள் இலைகளை யரித்துத் தின்னுகின்ற பூச்சியும் இலைகளின் சாற்றை உறிஞ்சுந் தன்மையையுடைய பூச்சியுமென இருவகைப்படும். இவ்விருவகைப்பூச்சிகளின் பிற்பக்கத்து நுனியிலே முலைக்காம்புபோன்ற அவயவங்களிருக்கின்றன. மரத்தினடியிலே குடிகொண்டிருக்கும் எறும்புகள் இப்பூச்சிகளையடைந்து முலைக்காம்புபோலான நுனிகளைத் தடவ அவைகளிலிருந்து, ஒருவித இனிப்புப்பால் வடிகின்றது. இந்த இனிப்புப்பாலைப் பானஞ் செய்கிறதற்காகவே மரங்களைச்சுற்றி எறும்புகள் குடிகொள்ளுகின்றன. ஆகவே மரங்களின் இலைகளில் மர்ந்திருக்கும் பூச்சிகளை மாத்திரந்துரத்திவிட்டால் யாதொரு பிரயாசையுமின்றிக் "செத்தாட்டிலிருந்து உண்ணிகளருவது" போல எறும்புகள் மரத்தடியை விட்டு நீங்கிவிடுகின்றன.

மரங்களின் இலைகளிற் குடிகொண்டிருக்கும் பூச்சிகளும், அவைகளையடைந்து பாலைப் பானம்பண்ண மரங்களிற்போக்குவரவுபண்ணும் எறும்புகளுங்கூடி மரங்களைக் கெடுக்கின்றன வென இலங்கைக் கமச்சங்கத்து இலிகிதர் அறிந்து பூச்சிகளைத் துரத்தக்கூடிய மருந்தினை யாழ்ப்பாணத்துக்கனுப்பியிருக்கிருரென வறிகிறேம். இம்மருந்தைச் சோதித்தறிய விரும்புவோர் உள்ளூர் அரசாங்க கிருஷிகாசிரியரிடங் கேட்டுப் பெற்றுக்கொள்ளுக. உடம்பிலேயே சுவையான பாலுள்ள ஒருசாதிப் பூச்சிகள் அமெரிக்காவிலே மெக்சிக்கோ நாட்டிலே இருக்கின்றன எனவும், அங்குள்ள பெண்களும் பிள்ளைகளும் அவைகளைப் பிடித்துத் தலையையும் மற்றப்பாகங்களையுங் கிள்ளி எறிந்துவிட்டுப் பாலை உறிஞ்சிச்குடிக்கிருர்களெனவும் இன்னுஞ் சிலர் இவ்வித பூச்சிகளை நசுக்கி ஒருவகை மதுபானம் வடிக்கிருர்களெனவும் அறிகிறேம்.—கமத்தொழில் விளக்கம்.

COMMERCE.

வியாபாரம்.

Japanese Commercial Enterprise.

ஜப்பானியர்களின் வியாபார ஊக்கம்.—இந்தியாவுக்கு ஒரு தொழில்நிபுணரையனுப்பி இங்கு நூல் வர்த்தகம் நன்றாக நடக்குமா என்று ஜப்பானியர்கள் முயன்றதாகவும், அது பலித்ததென்றும், ஒரு ஜப்பானியப் பத்திரிகை எழுதுகின்றது. இனி இங்கு ஜப்பான் தனது நூல் வியாபாரங்களைத் தொடங்கிக் கொள்ளும் போலும்! எந்த நாடும் வர்த்தகம் கைத்தொழில் முதலியவற்றால் விர்த்தியடைந்ததாகக் கேட்கிறோமே தவிர, பி. ஏ. பாஸ் செய்துவிட்டு 15 ரூபாயில் கிளர்க்கு வேலையில் அமர்வதினால் தேசம் முன்னுக்கு வந்ததாக எந்த சரித்திரத்தினும் நாம் துணிந்து சொல்லக்கூடவில்லை.—திராவிடாபிமானி.

Increase in Motor Cars.

மோட்டார்கார்களின் அபிவிருத்தி.—இந்தியாவில் மோட்டார் வண்டி நாளுக்கு நாள் அபிவிருத்தியாகி வருகிறது என்பது வியாபாரக் கணக்கை பார்த்தால் வியக்தமாக ஏற்படுகிறது. 1909-1910-ல் இந்தியாவில் வந்து இறங்கின மோட்டார் வண்டிகள், மோட்டார் ஸைகில்கள் இவைகளின் மதிப்பு $47\frac{1}{2}$ லட்சம் ரூபாய், என்றும், 1910-11ல் $73\frac{1}{4}$-லட்சம் என்றும், 1911-12-ல் $100\frac{1}{4}$ லட்சம் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

Business Enterprise in India.

இந்தியாவில் வியாபார ஊக்கம்.—இந்தியாவில் போன மார்ச்சுமாதத்தில் அடியில் கண்ட விபரப்படி 23 கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. அந்த விவரங்களைக் கொண்டு அந்த மாதத்தில் வியாபாரத்தில் ஊக்கம் எவ்வளவு இருந்ததென்பதை அறிந்து கொள்ளலாம்.

2 பாங்கிகளும் லேவாதேவி கம்பெனிகளும்	100,20,000
4 இன்ஷியூரன்ஸ் கம்பெனிகள்	245,000
2 அச்சிடுவதிற்கும் பிரசுரங்கள் செய்வதற்கும் காகிதங்கள் விற்பதற்குமான கம்பெனிகள்	303,000
8 வியாபாரக் கம்பெனிகள்—மேற்சொன்னவை யல்லாதவைகள்	16,35,000
1 ஜூட்மில் கம்பெனி	6,00000
1 டீபயிரிடும் கம்பெனி	2,00000
1 ஒரு ரப்பர் பயிரிடும் கம்பெனி	90,000
2 சுரங்கம் வெட்டும் கம்பெனிகள்	6250,000
2 கம்பெனிகள்—மேற் சொன்னவையல்லாதவைகள்	320,000
ஆக மொத்தம் ரூ.	196,63000

Rice Trade of Burma.

பர்மாவில் அரிசி வியாபாரம்.—1911-12ஷூத்தில் பர்மாவில் ஒரு துறை முகத்திலிருந்து இன்னொரு துறைமுகத்திற்கும் இதர தேசத்துத் துறைமுகங்களுக்கும் ஏற்றுமதியான சரக்குகளில் அரிசியும் நெல்லும் 100-க்கு 63.76 ஆக இருந்தது. இதனால் பர்மாவில் அரிசி வியாபாரம் எவ்வளவு பலத்த வியாபாரம் என்று எளிதாய்த் தெரிகிறது. உலகத்தில் பர்மாவிலிருந்து மட்டு மல்லாமல் இதர தேசங்களிலிருந்தும் அரிசி ஏற்றுமதி ஆகிறது. ஆனால் பர்மாவிலிருந்து ஏற்றுமதியாவது வழக்கப்படி வருஷந்தோறும் தவறாமல் ஏற்றுமதி ஆவதால் இதர தேசங்களில் பர்மா அரிசிக்கு கிராக்கி உண்டு. பர்மாவிலிருந்து ஏற்றுமதியான அரிசியின் 5ஷூத்து சராசரி 23,64,169 டன் நிறையுள்ளது. அதன் பெறுமானம் 2255 லக்ஷம் ரூ. 1909-10ஷூத்தில் தான் ரொம்ப அதிகமாக அதாவது 25,20,730 டன் ஏற்றுமதி ஆயிற்று. 1911-12ஷூத்தில்தான் ரொம்ப குறைச்சலாக அதாவது 21,96,563 டன் ஏற்றுமதி ஆயிற்று. 1907-08 ஷூத்தில் நல்ல விலை கிடைத்தது அதாவது 2384 லக்ஷம் ரூ. 1910-11 ஷூத்தில் தான் குறைந்தவிலை கிடைத்தது அதாவது 2177 லக்ஷம் ரூ. 1911-12 ஷூத்தில் இந்த அரிசி வியாபார ஸம்பந்தமாக முக்கியமாய் சென்னை வங்காளம் இந்த ராஜதானிகளிலிருந்து 2,55,769 கூலிகள் ரெங்கூனுக்குப் போனார்கள். ரெங்கூனிலிருந்து திரும்பி வந்தவர்கள் 2,24,363 பேர்கள்.

Development of British Exports

ப்ரிட்டிஷ் ஏற்றுமதியை விருத்தி செய்தல்.—இங்கிலாந்தில் சரக்குகள் செய்கிறவர்களில் அநேகர் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தச் சங்கத்தின் நோக்கம் இங்கிலாந்தில் செய்யப்பட்ட சரக்குகளை ஏற்றுமதி செய்வதே. இந்தச் சரக்குகளுக்கு இந்தியாவில் நல்ல கிராக்கி இருப்பதால் அவைகளை ஒன்று சேர்த்து கல்கத்தாவில் ஒரு பொருட்காட்சியாக வைக்கப்போகிறார்கள். இப்படிச் செய்தால் அந்தச் சரக்குகளில் நல்ல வியாபாரம் நடக்கும் என்பது அவர்கள் துணிபு.

INDUSTRY.

கைத்தொழில்.

Soap out of Plantain Peel.

வாழைப்பழத் தோலால் ஸோப்.—ஆப்பிரிச்சாவின் மேற்குப் பாகங்களில் வெள்ளைக்காரர்களும் சுதேசிகளும் பனை என்ற வாழைப்பழங்களின் தோலைச்சுட்டு சாம்பலாக்கி அதோடு தண்ணீரையும் பாம் ஆயில் என்று சொல்லப்படும் ஒருவித எண்ணெயையும் சேர்த்து ஸோப்பாக உபயோகித்து தமது சரீரத்தை சுத்தஞ்செய்து கொள்ளுகிறார்களாம். நாம் வீணானவைகளாக எறிந்துவிடும் எத்தனையோ பொருள்களை அயல்தேசத்தார் பிரயோசனத்திற்கு கொண்டுவருகிறார்க ளென்பதும் பத்திரிகை முதலியவற்றின் மூலமாய் நமது அறிவு எவ்வளவு விர்த்தியாகக் கூடுமென்பதும் இதனால் எளிதில் விளங்கும்.

The Sugar Industry.

சர்க்கரைத் தோழில்.—சர்க்கரைத் தொழிலைப் பற்றிக் கவர்ன்மெண்டார் அதிக சிரத்தை பாராட்டி வருவதைப்பார்க்க சந்தோஷமாயிருக்கிறது. இந்தியாவில் ஐக்கிய மாகாணங்களிலேயே கரும்பு விசேஷமாய்ப் பயிர் செய்யப்பட்டு வருகிறது. ஆனாலும், சர்க்கரை முழுதும் அன்னிய தேசங்களிலிருந்து வந்துவிடுகிறபடியால், அந்தக் கரும்புக்குத் தக்க பிரயோஜனமில்லாமல் அந்தப் பயிர் குறைந்து கொண்டு வருகிறது. அன்னிய தேசத்துப் போட்டியை நிறுத்தி நம் தேசத்துச் சர்க்கரைத் தொழில் செழிக்கும்படி செய்யாவிட்டால் கரும்பு ஸாகுபடி செய்வோர் அழிந்து போவார்கள். ஆகையால சர்க்கரைத் தொழிலைப்பற்றிக் கவனிக்குப்படியாக இந்தியா கவர்ன்மெண்டார் தக்க நிபுணர்களைத் தருவித்திருப்பது சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. நிபுணர்களைத் தருவித்து உபயோகிப்பதிலும், தக்க யந்திரங்களை வாங்குவதிலும், மொத்தத்தில் இந்தியாவில் சர்க்கரைத் தொழிலை, ஜாவா முதலிய போட்டி தேசங்களில் நடப்பதுபோல, பெரும் மாதிரியாய் நடத்துவதிலும், கவர்ன்மெண்டார் பணசெலவு செய்வதிலும், பின் வாங்கக்கூடாது.

Match Factory.

தீப்பெட்டித் தொழிற்சாலை.—கொஞ்சகாலத்திற்கு முன் மெஸர்ஸ் டார்வுட் அண்டு கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்ட 'இராவாடி மாட்ச் கம்பெனி' யானது நல்ல ஸ்திதியிலிருந்து வருகிறது. பர்மா கடைகளுக்கெல்லாம் நெருப்புப் பெட்டிகள் விற்பனைக்காக ஸப்ளைசெய்து வருகிறார்கள். இதன் தொழிற்சாலையானது மாண்டலேயில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பர்மாவிலும் இந்தியாவிலும் நெருப்புப் பெட்டி வியாபாரம் எங்கும் பரவுகிறதற்கு மெத்த ஸாதகமாகும். வேறொரு கம்பெனியானது ஆனரபில் மிஸ்டர் விம்-சின்-ட்சாங் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவருடைய கம்பெனியில் செய்யும் நெருப்புக்குச்சிகளும் ஜப்பானியரது நெருப்புப் பெட்டிக்குப் பின் வாங்கினதாகக் காணோம்.

A Cotton Seed Oil Mill.

ஒரு பருத்திக்கோட்டை எண்ணெய் மில்.—பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த நவஸாரியில் "இந்தியன் காட்டன் ஆயில் கம்பெனி லிமிடெட்" என்று சொல்லப்படும் இந்தியா பருத்திக்கொட்டை எண்ணெய் கம்பெனியார் பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காக ஒரு மில் ஸ்தாபித்திருக்கிறார்கள். அது போன மார்ச்சுமீ 17வ யன்று கனம் ஜி. கே. பரக் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மிஸ்டர் பரக் பேசினதில் பருத்திக்கொட்டை எண்ணெயினுடையவும் பிண்ணாக்கு முதலியவைகளினுடையவும் உபயோகங்கள் ஜனங்களுக்குத் தெரியவரத்தெரிய வர மேற்சொன்ன் கைத்தொழில் விருத்தியாகும் என்று சொன்னார். 50 வருஷங்களுக்கு முன்னால் அமெரிக்காவில் நாலேநாலு பாக்டரிகளிருந்தன. 25 வருஷங்களுக்கு பிறகு 119 பாக்டரிகளாயின. 1900 வருஷத்திலோ 668 ஆயின. 1910 வருஷத்தில் 981 பாக்டரிகள் இருந்தன. இந்தியாவில் பருத்திக்கொட்டை வேண்டிய அளவு இருப்பதால் நம்முடைய தேசத்திலும் ஏன் இந்தத் தொழில் அமெரிக்காவில் போல் விருத்தி அடையக் கூடாது? இந்த ஸமயத்தில் ஒரு விசேஷ ஸமாசாரத்தைச்சொல்ல வேண்டியிருக்கிறது. மில்லைத் திறந்து வைத்து எல்லாரும் பேசியானபிறகு அங்கே வந்திருந்தவர்கள் எல்லாருக்கும் சிற்றுண்டிகள் கொடுக்கப்பட்டன. அவைகளில அநேகம் பருத்திக்கொட்டை மாவு, எண்ணெய், இவைகள் தனியாயோ அல்லது இரண்டும் சேர்ந்தோ, செய்யப்பட்டிருந்தனவாம்.

ECONOMICS.
பொருளாதாரம்.

The Indian Census.

இந்தியாவின் ஜனஸங்கியை.—ஸமீபத்தில் எடுத்த ஸென்ஸஸ் கணக்கின்படி இந்தியாவில் $31\frac{1}{2}$-கோடி ஜனங்களிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஸென்ஸஸில் இந்தியா முழுவதிலும் 20-லக்ஷம் எனுமூமரேடர்கள் (ஜனக்கணக்கெடுப்பவர்கள்) நியமிக்கப்பட்டனராம். ஸென்ஸஸ் ஆகி 9-நாளைக்குள் இந்தியா முழுவதிலுமுள்ள ஜனத்தொகை எல்லா விவரத்தோடும் தெரிவிக்கப்பட்டது. இந்தியாவின் $31\frac{1}{2}$ கோடி ஜனங்களுள் $\frac{3}{4}$ பங்கு ப்ரிட்டிஷ் நாட்டிலும் $\frac{1}{4}$ பங்கு தேச மன்னர் நாடுகளிலும் வஸிக்கிறார்கள். ப்ரிட்டிஷ் நாட்டில் போன ஸென்ஸஸைவிட இந்த ஸென்ஸஸில் 100-க்கு $5\frac{1}{2}$ பங்கு ஜனங்கள் அதிகம். ராஜ ஸமஸ்தானங்களிலோ 100-க்கு 13 பங்கு அதிகம். ஸராஸரி ஒரு சதுர மைலுக்கு 175 பேர் வஸிக்கிறார்கள். வங்காளத்தில் சில இடங்களில் 1 சதுரமைலுக்கு 900 பேருக்கு அதிக மிருக்கிறார்கள். பர்மா, காஷ்மீர்போன்ற சில விடங்களிலோ 50-பேருக்கு அதிகமில்லை. பலுசிஸ்தானத்தில் 6 பேர்தானிருக்கிறார்கள்.

The Condition of the Ryot.

நிலக்காரரின் நிலைமை.—இந்திய விவஸாயிகள் பெரும்பான்மையும் 3, 4 ஏக்கராக்களை வைத்துப் பயிர் செய்கிறவர்கள். இவர்கள் கொடுக்கவேண்டிய வரிகளும் அதிகமாயிருக்கின்றன. ஆகையால், இவர்களுக்கு மூலதனமென்பதே இல்லை. பெரும்பாலும் கடனாளிகளாய்க் கடனில் மூழ்கி யிருக்கிறவர்கள். சில பாகத்தினர் ஜமீன்தார்களாயும் மிராசுதார்களாயும் நல்ல நிலைமையில் இருக்கிறார்கள். இவர்கள் விவஸாயத்தில் அதிகப்பணம் செலவு செய்து, இவர்களுடைய நிலம் ஒன்றுக்கு மூன்று விளையும்படி செய்யலாம். இப்படி ஏதோ சிலர் செய்த போதிலும், நூற்றுக்கு 90 விவஸாயிகள் விவஸாயத்தில் பணம் செலவிடக் கூடியவர்களா யில்லை. இதை யுத்தேசித்துத்தான் ஆதியிலிருந்த ஆங்கிலேய ராஜதந்திரிகள் சிலர் விவஸாயிகளிடத்திலிருந்து கவர்ன்மெண்டார் பெறும் வரிகளை அடிக்கடி அதிகப்படுத்தாமல் ஸ்திரமாக்கிவிட வேண்டுமென்று, ப்ரேரித்தார்கள். அவர்கள் செய்தப்ரேரணை நிறைவேறாமற் போயிற்று. இப்போது கவர்ன்மெண்டார் நிலவரியென்றும், லோக்கல்பண்டுக்காக ஸெஸ்ஸுகளென்றும், காட்டுவரி முதலான பல சில்லரை வரிகளென்றும், விவஸாயிகளிடத்தில் வாங்குகிறபடியால், அவர்களுக்குப் பணம் சேரும் வழியே இல்லை. அவர்கள் பணம்பெற்ற முதலாளிக ளாவார்களென்று ஒருவரும் நினைக்கிறவரே இல்லை. விவஸாயிகளுக்கு ஒத்தாசையாக இப்போது செய்யக்கூடியதெல்லாம் ஐக்கிய நாணயச்சங்கங்களைப் பலப்படுத்தி, அவைகளால் விவஸாயிகளுக்குச் சுலபமான வட்டிக்குக் கடன்கிடைக்கும்படி செய்வதைத்தவிர வேறில்லை. வேறு விதங்களாயும் ஐக்கியத்தை யுண்டுபண்ணி, அவர்கள் பல சில்லரைத் தொழில்கள் செய்யும்படியாகவும், அவர்கள் செய்யும் பொருள்களை லாபகரமாய் விற்கும்படியாகவும், ஏற்பாடுசெய்யலாம். இந்த வழிகளாலும் சாஸ்திர பூர்வமான பல உபாயங்களை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து, அவைகள் மூலமாயும் நிலத்தில் அதிக லாபம் பெறும்படி செய்யலாம். விவஸாயிகள் பொறுக்கும் வரிப்பளு இனி எப்போதாவது குறையுமென்று நினைக்க நியாயமில்லை. கவர்ன்மெண்ட் செலவுகள் அதிகமாகி, அதிகச் செலவுக்காக அதிக வரும்படி கொடுக்கும்படி நேரிடும். இந்த அதிக வரிப் பளுவைப் பொறுக்கும்படியாக மேற்கண்ட உபாயங்களால் விவஸாயிகள் பெறும் வரும்படியை அதிகமாக்க வேண்டுமென்று சுதேசமித்திரன் பத்திரிகை எழுதுகிறது.

Japanese Policy.

ஜப்பானியர்களின் தந்திரம்.—நம் நாட்டில் பூமிக்குள்ளிருந்து கிடைக்கும் உலோகப்பொருள்களை அன்னியர்கள் தோண்டி எடுத்து லாபமடைவதையும் நாம் அதைப் பார்த்துக்கொண்டு பல்லிளித்து நிற்பதையும் ஏற்கனவே அறிந்ததுதான் என்று "திராவிடாபிமானி" பத்திரிகை சொல்லுகிறது. ஜப்பான் தேசத்திலும் இப்படியே உலோகப் பொருள்கள் அகப்படுவதாயிருப்பதில் அதை முதல் முதலில் கண்டு பிடித்துத் தேடி எடுப்போர் அன்னியரே யாவார்கள். ஆயினும் அதை அவர்களுக்குச் சொற்ப காலத்துக்கு குத்தகைக்கு விட்டு பிறகு தங்கள் வசமே அதைத் திருப்பிக்கொண்டு அன்னியர்களின் பாத்தியதையை ஒழித்துவிடுகிறார்கள். இந்த உபாயத்தை ஜப்பானியக் கவர்ன்மெண்ட் அநுஷ்டித்து வருகிறது. இதனால் சுதேசத்து ஜனங்களே பிறகு அதைத் தோண்டி எடுத்து லாபமடைய வழி ஏற்படுகிறது. இந்தியா கவர்ன்மெண்ட் இப்படிச்செய்ய அதற்கு சக்தி போதாது.

CO-OPERATION.
கோவாபரேஷன்.

The Aims of Credit Societies.

ஐக்கிய நாணயச் சங்கங்களின் நோக்கங்கள்.— 3 ஐரோப்பிய தர்மிஷ்டர்களால் ஏற்படுத்தப்பட்டவைகள். அவைகளை ஏற்படுத்தியவர்கள் ஜெர்மெனியைச் சேர்ந்த ரபீயிஸென், ஷூல்ட்ஸ் என்பவர்களும், இத்தலியைச் சேர்ந்த லூஸட்டி என்பவரே. ரபீயிஸென் என்பவரால் ஏற்படுத்தப்பட்ட சங்கங்களே இந்தியாவிற்குத் தகுந்தவைகள். அவைகளின் முக்கிய அம்சங்களாவன :—

(1) சங்கங்களுக்கு நஷ்டம் நேர்ந்தால் ஒவ்வொரு மெம்பரும் வரையறையில்லாமல் நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கவேண்டும்.

(2) ஒவ்வொரு சங்கமும் கொஞ்ச தூரத்துக்குள்பட்ட இடங்களிலேயே வேலைசெய்யவேண்டும்.

(3) ஷேர் ஹோல்டர்கள் அதாவது பங்காளிகள் என்பது கிடையாது. ஆகையால் டிவிடெண்ட் அதாவது ஷேர்களுக்கு வட்டி கொடுப்பது என்பது கிடையாது.

(4) ஒவ்வொரு சங்கமும் ரிஸர்வ் பண்டு ஒன்றை உண்டாக்கவேண்டும்.

(5) இந்த சங்கங்களை நிர்வகிப்பதில் மெம்பர்கள் பிரதிப் பிரயோஜனத்தை எண்ணாமல் இனாமாகவே வேலைசெய்யவேண்டும்.

(6) கடன் வாங்குகிறவன் கடன் வாங்கினபணத்தை உபயோகித்து அதனால் லாபம் ஸம்பாதித்து அந்த லாபத்தைக் கொண்டு கடனை திருப்பிக் கொடுப்பது.

(7) மேற்சொன்ன ரூபாய் அணா பைஸா லாபங்களல்லாமல் இச்சங்கங்களினால் வேறுவித லாபங்களுமுண்டு.

A Lecture on Co-operative Societies.

ஐக்கிய நாணயச்சங்கப் பிரசங்கம்.—செங்கல்பட்டு ஜில்லா திருவள்ளூர் தாலுகா ஐக்கிய நாணயச் சங்க ஆதரவின்கீழ் மேற்படி தாலுகா ஜமீன் எகாட்டூர் கச்சேரியில் ஐக்கிய நாணயச்சங்கத்தின் நன்மைகளைப்பற்றிப் பேச ஒரு பொதுஜனக் கூட்டம் ஸமீபத்தில் கூடிற்று. அதில் மெஸர்ஸ் அருளைய நாயுடு, சுவாமி கோவிந்த நாயுடு, சங்க இனிஸ்பெக்டர் நாராயணசாமி முதலியார், ஆகிய மூன்று கனவான்களும் கூட்டுறவுச் சங்கங்களின் நன்மைகளைப்பற்றி சாங்கோபாங்கமாய்ப் பிரசங்கஞ் செய்தார்கள். அவற்றில் கீழ்க்கண்ட விஷயங்கள் குறிப்பிடத்தக்கவை:—

"கூட்டுறவுச் சங்கங்களின் 1904-ம் வருஷத்திய 10-வது ஆக்டானது கவர்ன்மெண்டாராலும் அநேக மேதாவிகளாலும் எவ்வளவோ யோசனைசெய்து ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவின் தாழ்மைக்குக் காரணமாகிய ஒற்றுமையின்மை, ஏழ்மைத்தன்மை, கடன்கஸ்தி, ஜாதிமதபேதத்தினாலுண்டாகும் சச்சரவு, ஸாவுகார்கள் செட்டிமார்களின் அபார வட்டி ஏற்பாடு, சில்லரைச் சச்சரவுகளால் உண்டாகும் பொது நன்மைக்கேடு, இத்தகைய விஷயங்களை தேசத்தில் தலைகாட்டாமல் ஒழித்து இந்தியருக்கு க்ஷேமத்தையுண்டாக்குவதற்கென்றே இச்சங்கங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம், ஒற்றுமை நற்றவம், ஒற்றுமை மற்றவர்க்கும் நமக்கும் க்ஷேமம். பலபேர் ஒன்று சேரின் பொறுப்பு சுலபமாய் ஏற்படும். பல பேர்களின் பொறுப்பின் பேரில் கடன்களும் சுலபமாய் அகப்படும். தனியாய் ஒருவனைக் கடன் கேட்கில் அது பல தொந்தரவுகளுக் குட்படுத்துகிறது. விவஸாயிகள் தொந்தரவை யொழிக்க கிராம பாங்கிகளே சிறந்தவை. பணக்காரர்களுக்கும் பத்துப்பேர் ஸகாயம் வேண்டும். பணச்செலவுக்கு அஞ்சி அமுலுக்குக் கொண்டுவராதிருந்த கவர்ன்மெண்டாரின் அச்சத்தை யொழிக்க, மேனாட்டு தனவான் ஒருவர் 25,000 ரூபாய் இனாமாக் கொடுத்தார். இச்சங்கங்கள் 7 வருஷ காலமாய் நடக்கின்றன. இது வரையில் எந்த சங்கத்துக்கும் குறைவென்பது கிடையாது. இதுவரையில் 800 ஸொஸைட்டிகள் இந்த ஜில்லாவில் சேர்ந்திருக்கின்றன. இதற்குக்கவர்ன்மெண்டு செலவு வருஷத்தில் 70,000 ரூபாய். இதனால் மற்ற இலாகாகளைப்போல் ராஜாங்கத்தாருக்கு வரும்படி கிடையாது. உலகத்தில், ஜனங்களின் பேரில் பட்சம் வைத்திருக்கிறவனே ஆசாரியன் அதுவே தபசு, ஒற்றுமையின் அமிர்தத்தை ஒருங்கேவுண்ண என் பிந்தவேண்டும்? இச்சங்கங்களில் ஐக்கியம், நாணயம், ஆகிய இவைகளே முக்கிய அங்கங்கள். இச்சங்க அங்கத்தினர்க்கு கௌரவமும் மதிப்பும் தானாகவே அமைகின்றன. இது, ராஜாங்கத்தின் முழு அநுசரணையையும், அபிமானத்தையும், மேற்பார்வையையும் பெற்றிருக்கிறபடியால் இதற்கு அழிவே கிடையாது. நாமே கடன் கொடுக்கிறோம், நாமே கடன்வாங்குகிறோம், ஸகல அதிகாரமும் சங்கத்தாருடையதே. எதிர்பாராத நஷ்டங்களுக்கு க்ஷேம நிதி இருக்கவே இருக்கிறது."

BANKING.

பாங்கி வியாபாரம்.

Banks and Shares.

பாங்குகளும், பங்குகளும்.—சமீபத்தில் ஐக்கிய மாகாணங்களின் தொழிற்சங்கத்தில் ஒரு ஐரோப்பிய கனவான் பாங்குகள் இந்தியாவில் சண்டபடி நடப்பதினால் அவற்றை அடக்கியாளச் சட்ட மேற்படவேண்டுமென்று போராடுவதைக் கேட்ட நம்மவர் பிரமிக்க இடமுண்டாகலாம். ஆனால் அவர் சொல்லும் இரண்டோ ரம்சங்களை நமது வர்த்தகர், தொழிலாளிகள், உத்தியோஸ்தர் முதலிய இஷ்டரனைவரும் ஜாக்கிரதையாய்க் கவனிப்பது நலமென்பதில் சந்தேகமில்லை.

சென்னை ராஜதானியைப் பொறுத்த மட்டில் நாம் கவனிக்கவேண்டிய முக்கிய அம்சங்கள் இவை. இந்த ராஜதானியில் மதிராசிலும், கோயமுத்தூர் போன்ற சில விடங்களிலுமே பலவகைப்பட்ட பெயர்களுடன் **நிதிகள்** என்ற பாங்குகள் சுமாராகப் பிரபலித்து வருகின்றன. இவைகள் எல்லாம் **ஜாயிண்டு ஸ்டாக்கு கம்பெனிச்** சட்டத்தை யனுசரித்து ரிஜிஸ்தராகி நடப்பவை. கோ ஆபரேடிவ் பாங்குகளைப் பற்றியோ இங்கு பேசவேண்டியதில்லை.

சாவுகார் லேவாதேவியைக் காட்டிலும் இவை மொத்தத்தில் பலவகைகளிற் சிறந்தன வென்பதில் ஆக்ஷேபமில்லை. ஒவ்வொரு பாங்கும் ஏதோ ஒரு கூட்டம் விசேஷ விதிகளை யேற்படுத்திக்கொண்டு, குறித்த காலங்களில் குறித்த விடத்தில் வேலை நடத்திவருவதால், அம்மட்டில் 'வியாபாரம்' செய்பவர் பணங் கொடுப்பவரை 'அனுசரிக்க' வேண்டிய அவசரமில்லை. 'பல்லைக்காட்டவேண்டியது' மில்லை. வாங்குகிறவர்களுக்குக் கடன் நிபந்தனைகளெல்லாம் தெரியுமாதலால், அந்தப்படி நடத்தும் வரை ஒருவருடைய 'தயவு' அனாவசியம். இப்படியே டிபாசிட்டு முதலிய விஷயங்களிலும். பங்குக்காரர்களுக்கோ அனேகமாய் 'ஒரு வட்டி' மாமூலாகிவிட்டது. சில சமயங்களில் அதிகமும் காணுகிறது.

ஆனால் இம்மாதிரி பாங்குகளை நடத்தி வருபவருள் முக்கால் வரிசை ஜனங்களுக்குப் பாங்குகளைப் பற்றிய சாஸ்திரம், அனுபவம் முதலிய விஷயங்கள் தெரியவே தெரியாது. கம்பெனிச் சட்ட நிபந்தனைகளும் சற்று 'சுமார்' தான். மூன்று நாலு அம்சங்களில் பெருத்த மோசங்களுக்கு இடமிருக்கிறது. (1) பங்குக்காரர் வருஷவாரி மீட்டிங்கு என்று ஒரு சடங்கு மட்டும் வைத்துக்கொண்டு யாரோ நாலு பெயர் வந்து போகிறார்களல்லது, லுத்திய நடவடிக்கைகளையும் கணக்கு வழக்குகளையும் வேண்டியபடி கவனிக்கிறார்களில்லை. அப்படிச் செய்யச் சக்தியும் போதாது. (2) டைரெக்டர்களுக்கு 'உட்காரக் கூலி' யேதாவது உண்டானால் வாங்கிப்போவதல்லது, பாங்கைப்பற்றிப் படித்தும், கேட்டும், உழைத்தும் பாடுபட அவகாசமுமில்லை, அக்கரையுமில்லை. (3) ஆதலால் எல்லாம் செகரிடெரி யொருவர் மீது பாரம் விழுவதில், அவர் நல்லவரானால், நலம், இல்லாவிட்டால் 'கோயமுத்தூர் சுவதேச திரவிய சேகர நிதி'க்கு வந்ததுபோல 'விதைக்கோட்டையில் பெருச்சாளி' தான். (4) வரவு செலவுக் கணக்கென்று தினசரியோ, மாசவாரியோ பிரசுரப்படுத்தி வரும் கணக்கு, நாம் பார்த்தமட்டில் குப்பையிலெறியக் கூலிவேண்டும் சரக்காகும். அதை வைத்துக்கொண்டு பாங்கு சங்கதி யொன்றும் காண முடியாது. (5) அனேக யோக்கியர்கள் ஒரூரில் 10 பாங்குகளிருந்தால், அவற்றுளெல்லாம் கிடைத்த மட்டில் வாங்கிச் சமயம்போல் பார்த்துக் கொள்ளுகிறார்கள். அதைத் தடுக்க (பாங்குகளுக்குள் ஒற்றுமைக்குறைவினால்) வேண்டிய சௌகரியமில்லை. (6) ரசர்வ் பண்டு, அல்லது க்ஷேம நிதி யென்பது இவ்வளவென்ற நிபந்தனையுமில்லை, அந்த நிதியை வேண்டியபோது உதவும்படி வேறு தகுந்த இடங்களில் வைத்துவைக்கும் வழக்கமுமில்லை. மற்ற பணத்தோடு கையாண்டு வருவதால், எப்போது அது அவசரமாக வேண்டுமோ, அப்போது தான் அது உதவாமற்போவது. (7) ஆடிட்டு, இன்ஸ்பெக்ஷன் முதலிய பெருங்காரியங்களைச் செய்வதற்கு யோக்கியதைக் கூடிய மனிதர் வேண்டுமென்கிற நிபந்தனையில்லை. யார்வேண்டுமானாலும் அந்த உத்தியோகம் வகிக்கலாம். (8) பல சமயங்களில் பாங்கு ஏற்படுவது ஒருவருடைய தம்பி, தமையன், மாமன், மருமகன் முதலிய யாருக்காவது ஒரு உத்தியோகம் வேண்டியே ஏற்படுகிறது. பிறகு பாங்கில் நடக்கும் விசித்திரங்களை விளக்கவேண்டியதில்லை.

இந்த மாதிரி அபாயங்களிருப்பது வாஸ்தவமாதலால், இனிப் பாங்குகள் விர்த்தியாக வேண்டுமானால், இந்தத் தோஷங்களைச் சர்க்கார்மட்டு மன்றி, மகாஜனங்களில் விவேகிகளும் சேர்ந்து பரிகரிக்கவேண்டியது மெத்தவும் அவசியம். 'அர்பத்நட்' மாதிரி பெரிய உற்பாதமுண்டாகுங் காலத்தில் மட்டும் விழித்துக்கொண்டு, அடித்துக் கொள்வது க்ஷேமமுமன்று, விவேகமுமன்று. ஆங்காங்கு பாங்கில் சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைக் கவனித்து நன்மையடைவாரென்று நம்புகிறோம்.— வித்யாவிஹாரிணி.

INSURANCE.
இன்ஷியூரென்ஸ்.

Insurance Business.

இன்ஷூயூரென்ஸ் வியாபாரம்.—ஒவ்வொரு இன்ஷியூரென்ஸ் கம்பெனிச்கும் முதல் தொகையுண்டு. இன்ஷியூர் செய்யும் பாலிஸிஹோல்டர்கள் செலுத்தும் ப்ரீமியம் அதாவது கட்டணங்களில் மிகுந்த தொகையைக் கொண்டே தான் பிற்பட்டு அவர்களுச்குக் கொடுக்கவேண்டிய தொகையை கம்பெனிக்காரர்கள் கொடுக்கிறார்சள். அந்தியத்தில் கொடுக்கவேண்டிய தொகைக்கு கட்டணங்களிலிருந்து மிகுந்த தொகைகுறைவாகும் பக்ஷத்தில் ஒரு இன்ஷியூரன்ஸ் கம்பெனியும் வியாபாரத்தை நடத்திக்கொண்டுபோக முடியாது. இன்ஷியூரன்ஸ் கம்பெனியின் மூலதனம் அதன் மொத்த ஆஸ்தியில் வெகு சிறுபாகமே. அது முக்கியமாய் கம்பெனி ஆரம்பிக்கும்போது ஏற்படும் செலவுகளுக்கும் ஏதோ ஒரு ஸமயத்தில் ஏற்படக்கூடிய வேறு செலவுகளுக்கு மட்டும் உபயோகப்படும்.

Insurance Humour.

இன்ஷியூரென்ஸ் வேடிக்கை.—ஒருவன் தன் ஆயுளை இன்ஷியூர் செய்யும்போது அவனுடைய முன்னுள்ள தேக ஸ்திதி, அவன் தகப்பன், தாயார், ஸகோதரர்கள், ஸகோதரிகள், இவர்களுடைய முன்னுள்ள தேக ஸ்திதி முதலிய ஸகல விருத்தாந்தங்களையும் சொல்லவேண்டும். ஒருவன் இரண்டு தடவை ஒரு கம்பெனியில் இன்ஷியூர் செய்தபோது முதல் தடவை ஒருவிதமாயும் இரண்டாம் தடவை வேறுவிதமாயும் சொல்லியிருந்தான். இதை விசாரிக்கும்படி கம்பெனியார் தங்கள் ஏஜெண்டுக்கு எழுதியதற்கு அந்த ஏஜெண்டு பின் வருமாறு எழுதினாராம். "முன் சொன்னதற்கும் பின் சொன்னதற்கும் வித்யாஸம் ஏற்பட்டதற்குக் காரணம் என்னவென்றால் இன்ஷியூர் செய்த உத்தேசித்தவரும் அவருடைய 29, 32, வயதுள்ள இரண்டு ஸகோதரர்களும் ஒரே தாய் தந்தைக்குப்பிறந்தவர்கள். பிறகு அவருடைய தகப்பனாரோடு கூடப்பிறந்தவருக்குப் பிள்ளை இல்லாததால் அவர் இன்ஷியூர் செய்தவரை ஸ்வீகாரம் செய்துகொண்டார். ஆகையால் ஸ்வீகாரமான நாள் முதல் அவருக்கு அவருடைய ஸகோதரர்கள் தாயாதிகளாகவும் அவருடைய தகப்பனோடு கூடப்பிறந்தவர் அவருக்குத் தகப்பனாராகவும், அவருடைய பெண்சாதி அவருக்கு தாயாகவும் ஆகிவிட்டார்கள். முதல் தடவை இன்ஷியூர் செய்தபோது சொல்லியதில் ஸ்வீகாரத்திற்குப் பிறகு அவருக்கு தாயாதிகளானவர்களை தன் ஸகோதரர்கள் என்று சொல்லிவிட்டார்".

Live Stock Insurance in Sweden.

ஸ்வீடன் தேசத்தில் கால் நடைகளை இன்ஷியூர் செய்தல்.—கால்நடைகளை இன்ஷியூர் செய்வது இந்தியாவில் இதுவரையில் கிடையாது. விவஸாயிகளுக்கே கால் நடைகள் முக்கிய ஆதாரமானதையால் அவர்களைக் கொண்டே கோவாபரேஷன் முறையில் கால் நடைகளை இன்ஷியூர்செய்ய முயற்சிசெய்து வருகிறார்கள். ஸ்வீடன் தேசத்தில் கால்நடைகளை இன்ஷியூர் செய்வது ஒரு வியாபாரமாய் நடந்துவருகிறது. அந்த தேசத்தில் 46 ஸொஸைட்டிகள் தேசம் முழுவதும் வியாபாரம் செய்து வருகின்றன. 197 ஸொஸைட்டிகள் சில மாகாணங்களில் மட்டும் வியாபாரம் செய்துவருகின்றன. 552 ஸொஸைட்டிகள் கிராமங்களில் மட்டும் வேலை செய்து வருகின்றன. ஸ்வீடன் தேசத்து விவஸாயிகள் தங்கள் கால்நடைகளை இன்ஷியூர் செய்து அதற்காகக் கொடுக்கும் ப்ரீமியம் தொகையானது 50 லக்ஷம் ப்ராங்குகள் (ஒரு பிராங்கு என்பது $9\frac{1}{2}$ அணா) ஆகும். இப்படி இன்ஷியூர் செய்தகால் நடைகளின் மதிப்பு 30 கோடி பிராங்குகளாகும். ஸ்வீடன் தேசத்து முக்கிய பட்டணமாகிய ஸ்டாக்ஹோம் நகரத்திலுள்ள "ஸ்காண்டினேவியன் லைவ் ஸ்டாக் இன்ஷியூரென்ஸ் ஸொஸைட்டி"யில் தான் ஜாஸ்தி கால்நடைகள் இன்ஷியூர் செய்யப்பட்டிருக்கின்றன. 1908-ம் வருஷத்தில் இந்த ஸொஸையிட்டியானது கால்நடைகளுக்கு ஈடாக 16,36,184 பிராங்குகள் இன்ஷியூர் செய்தவர்களுக்குக்கொடுத்தது. இந்தத் தொகை ஸ்வீடன் தேசத்து எல்லா இன்ஷியூரென்ஸ் ஸொஸைட்டிகளும் சேர்ந்து கொடுத்த தொகையில் பாதியாகிறது. ப்ரான்ஸ், இத்தலி, இந்த தேசங்களில் மெம்பர்கள் பரஸ்பர நன்மைக்காக ஒன்று சேர்ந்து கால்நடைகளை இன்ஷியூர் செய்கிறார்கள். இவைகளைப்போலல்லாமல் ஸ்வீடன் தேசத்து இன்ஷியூரென்ஸ் ஸொஸைட்டிகள் அந்த தேச முழுமையும் கால் நடைகளை இன்ஷியூர் செய்கின்றன. இப்படிக்கு 100-க்கு 72 கால் நடைகள் இன்ஷியூர் செய்யப்பட்டிருக்கின்றன,

EDUCATION.

வித்யா விஷயம்.

A New Forest College in Coimbatore.

கோயமுத்தூரில் ஒரு பாரெஸ்ட் காலேஜ்.—இது வரை பாரெஸ்ட் இலாகாவில் ரேஞ்சர், போன்ற உயர்பதவி உத்தியோகங்களுக்கு ஆசைப்படுவோர் வட இந்தியாவிலே டேராடூனில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பாரெஸ்ட் காலேஜில் போய்வாசித்து விட்டு வரவேண்டியதாயிருந்தது. இப்போது பாரெஸ்ட இலாகாவில் உயர்பதவி உத்தியோகங்களை வகிக்கும் இச்சென்னை மாகாண வாசிகளில் அநேகர் அந்த காலேஜில் போய் வாசித்துவிட்டு வந்தவர்கள் தான். ஆனால் இனிமேல் இச்சென்னை மாகாணத்தார் பாரெஸ்ட் இலாகாவில் உயர்பதவிகளைப்பெற டேராடூன் சென்று வாசித்துவிட்டு வர வேண்டிய அவசியமிராதென்று தோன்றுகிறது. அடுத்த ஜூலைமாதம் முதல் இம்மாகாணக் கவர்ன்மெண்டாரால் கோயமுத்தூரில் ஒரு பாரெஸ்ட் காலேஜ் ஸ்தாபிக்கப் படப் போகிறது. அந்த காலேஜ் ரெவினியூபோர்ட் அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும். கோயமுத்தூரில் ஏற்கனவே விவஸாயக் காலேஜ் நடந்து வருகிறது. அவ்வூர் பாரெஸ்ட் காலேஜுக்கும் ஏற்ற விடமென்றே தோன்றுகிறது.

A School for poor Hindu Girls.

ஹிந்து ஏழைப் பெண்களுக்கு ஒரு ஸ்கூல்.—ஸகோதரிஆர். எஸ். சுப்புலக்ஷிமி பி. ஏ., ஹிந்து பால விதவைகளுக்கும் ஏழைப் பெண்களுக்கும் உபயோகமானவித்தை,தொழில்,ஸங்கீதம்இவைகளைச்சொல்லி வைத்து, பிற்காலத்தில் அவர்களுடைய ஜீவனம் அவர்களுக்கு கௌரவமாகவும் மற்றவர்களுக்கு உபயோகமாகவும் இருக்கும்படி செய்ய, ஒரு ஸ்கூல் ஸ்தாபிக்க வேண்டுமென்று அதற்குப் பொருள் உதவிசெய்யும்படி சனவான்களை வேண்டிக்கொண்டிருக்கிறார். இவரை நம் நேயர்கள் அறிவார்களென்று நம்புகிறோம். யூனிவர்ஸிடியில் உயர்ந்த பரீட்சையாகிய பி.ஏ. யில் தேர்ந்தும் தாம் சும்மா காலங்கழிக்கக் கூடாதென்றும், தம் தேசத்து ஸ்திரீகளுக்கு உதவிசெய்ய வேண்டு மென்றும், முன் வந்திருப்பர்.

Primary Education in Japan.

ஜப்பானில் ப்ரதம சிட்சை.—ஜப்பானில் 1904-ம் வருஷத்தில் 27, 138 ப்ரதம பாடசாலைகள் இருந்தன. அவைகளில் 50 லக்ஷம் பிள்ளைகளுக்கு மேல் வாசித்துவந்தார்கள். அவைகளில் கற்பிக்கப்படும் விஷயங்களில் பிரகிருதி சாஸ்திரமும் ஒன்று. செடிகள் ஜந்துக்கள் முதலியவைகளைப்பற்றிய சுலபமான பாடங்களை விவஸாயம், ஜலவிருத்தி, கைத்தொழில் முதலியவைகளுக்கு ஸம்மந்தப்பட்டிருக்கும் விதத்தில் போதிக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். 1905-ம் வருஷத்தில் விவஸாயக் கல்வி போதிப்பதற்காக மட்டும் 1436 விசேஷ பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அவைகளில் 62,118 பிள்ளைகள் படித்தார்கள். இம்மாதிரியான விவஸாயப் படிப்பை இத்தேசத்திலும் ஏற்படுத்தவேண்டும்.

The Indian Students Enquiry Committee.

இங்கிலாந்திலுள்ள இந்திய மாணவர் விஷயமாய் விசாரணைக் கமிட்டி.—1904-ம் வருஷத்தில் ஏற்படுத்திய தொழிற்படிப்பு ஸ்காலர் ஷிப்பன் திட்டத்தினையின் பிரகாரம் இங்கிலாந்தில் போய்ப் படிக்கிற இந்தியமாணவர்களுக்கு அப்படிப்பு விஷயமாய் என்னென்ன ஸௌகரியங்கள் இருக்கின்றன என்பதை விசாரணைசெய்து அறிய, லார்டு க்ரூ ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார். அந்தக்கமிட்டியில் ஸர் தியடோர் மாரிஸனும், ஸர் கிருஷ்ணகுப்தாவும், மான்செஸ்டர் தொழிற் பாடசாலையில் முன்னே ப்ரின்ஸ்பலாயிருந்த மிஸ்டர் ரெயினல்ட்ஸும், ஸவுத் கென்ஸிங்டன் இம்பீரியல் ஸயன்ஸ் காலேஜ் ப்ரோபெஸரான ப்ரோபெஸர் டாவிபியும், அங்கத்தினராயிருக்கிறார்கள். இந்தக் கமிட்டி யுனைடெட் கிங்டம் என்ற இங்கிலாந்து ஸ்காத்துலாந்து அயர்லாந்து என்ற நாட்டிலுள்ள யூனிவர்ஸிட்டிகளை நாடிச்சென்று ஆங்காங்குள்ள ப்ரொபெஸர்களுடையவும், மற்றவர்களுடையவுமான ஸாக்ஷியங்களைக் கிரஹித்து வரும். இப்பொழுது 27 மாணவர்கள் ஸ்காலர் ஷிப்புப் பெற்றுக்கொண்டு இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் படித்து வருகிறார்கள். இந்த முறை நல்லதென்று பலர் ஒப்புக்கொண்டபோதிலும் இதை இன்னும் சீர்திருத்தலாம் என்று சொல்லுகிறார்கள். இங்கிலாந்தில் படித்துவிட்டுத் திரும்பும் இந்திய மாணவருக்கு என்னவேலை கொடுக்கிறதென்று இந்தியாவில் யோசனையா யிருக்கிறது. அதைப்பற்றி இப்பொழுது நடத்தப்போகிற இக்கமிட்டியின் விசாரணை, பிறகு இந்தியா கவர்ன்மெண்டார் விசாரணை செய்வதற்கு, பூர்வபீடிகா விசாரணையாகவிருக்கும்.

ECONOMIC PRODUCTS.
விலையுள்ள பொருள்கள்.

Tomato Seed Oil.

தக்காளி விதை எண்ணெய்.—இத்தாலியா தேசத்தில் தக்காளி விதையிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். அந்த எண்ணெய்க்கு சீக்கிரத்தில் காய்ந்து வறண்டு போகும் குணமிருக்கிறதால், அது வார்னீஸுக்கு உபயோகப்படுகிறது. அந்த தேசத்தில் தக்காளி ஜாஸ்தி யாகையால், ஜாக்கிரதையாய் அதன் விதையை சேகரிக்கிறார்கள். அந்த தேசத்திலுள்ள பார்மா மாகாணத்தில் மாத்திரம் 54,000டன் தக்காளி அகப்படுகிறதாம். அதிலிருந்து 600 டன் எண்ணெய் அகப்படுகிறதாம்.

Pine Apple and Banana Fibres.

அன்னாசி, வாழை, நார்கள்.—அமெரிக்காவைச் சேர்ந்த பிலிப்பைன் தீவுகளில் அன்னாசிச் செடி நாரிலும் வாழை நாரிலும் நல்ல வியாபாரம் நடக்கிறதாம். இந்தியாவிலோ அவைகள் வீணாய்ப் போகின்றன. சீனாதேசத்தில் இந்த நார்களைக்கொண்டு நல்ல வஸ்திரங்கள் நெய்கிறார்களாம். இந்த நார்களை எவ்வளவோ விதமாக உபயோகிக்கலாமென்று சொல்லி பிலிப்பையன் கவர்ன்மெண்டார் அவைகளை, வியாபாரம் ஆகும்படிக்கு, அந்நிய தேசங்களிலெல்லாம் கொண்டுபோய்க் காட்டிவருகிறார்களாம்.

Mangoes in the Phillippines.

பிலிப்பைன் தீவுகளில் மாப்பழம்.—நேர்த்தியான ருசியிலும், வாசனையிலும் மாம்பழத்தை மிஞ்சிய வேறு பழமில்லை. இந்தப் பழம் வெகு காலமாய் இந்தியாவில் பயிர் செய்யப்பட்டு அன்னிய தேசங்களுக்கு அனுப்பப்பட்டு வந்த போதிலும், சென்ற சில வருஷங்களாய் உலகத்திலுள்ள உஷ்ண தேசங்கள் பலவற்றிலும் பயிர் செய்யப்பட்டு வருகின்றது. பஸிபிக் ஸமுத்திரத்திலுள்ள பிலிப்பைன் தீவுகளில் சிலாக்கியமான மாம்பழங்கள் பயிர் செய்யப்பட்டு ஜப்பானுக்கும் சைனாவுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. ஆப்பிரிக்கா அமெரிக்கா இந்த இரண்டு கண்டங்களிலும் இவைகளையடுத்த தீவுகளிலும் இந்தப் பழம் இப்போது பயிர் செய்யப்படுகிறது.

The Uses of Old Paper.

பழைய காகிதத்தின் உபயோகம்.—வர்த்தமானப் பத்திரிகையைப் படித்த பிறகு, இது இனிமேல் ஒன்றுக்கும் உதவாது என்று அப்பத்திரிகையைக் குப்பையோடு குப்பையாக எறிந்து விடுகிறது யாவருக்கும் வழக்கமாயிருக்கிறது. நாகரிகம் இப்பொழுது தலையெடுத்து, இவ்விதமான பழய பத்திரிகைகளைப் பலவிதமாய் உபயோகித்துக் கையாள வழி காட்டியிருக்கின்றது. குளிர்காலத்தில் அதை விரித்து அதன்மேல் படுத்துக் கொண்டால் குளிர் என்பது சிறிதும் தோன்றாமல் கம்பளம் போல் உஷ்ணத்தை உண்டாக்கி தேசத்துக்குச் சுகத்தை தருகின்றது கம்பளம் சால்வை முதலியவற்றைப்போல் பளுவில்லாமலே குளிருக்கு மனிதர் போத்துக்கொள்ளவும் உதவும். சிலர் மேஜோடு என்னும் கால்ஜீரா செய்து கொள்ளத் துணிக்குப் பிரதியாகப் பழைய காகிதத்தைக் கையாளுகிறார்கள். மேலும் சிலர் தலையணை திண்டு முதலானவற்றைக் காகிதத்தினால் செய்து கொள்ளுகிறார்கள். அன்றியும், வெயில் தோன்றாமல் குடையாகச் செய்வதற்கும், தையற்காரர் பலவிதமான உடைகளுக்கு மாதிரியாகச் சத்திரித்துக் காட்டுவதற்கும், எழுத்தாணி, கத்தி, சத்திரிகளுக்கு உறை செய்வதற்கும், கண்ணாடி சாடி முதலான பளிங்கு சாமான்களை மூடி வைப்பதற்கும், மருந்து முதலியவற்றைக் கட்டி வைப்பதற்கும், சில ஜாதியர் கோதுமை ரொட்டி முதலிய அப்பங்களைச் சுருட்டி வைப்பதற்கும், வைத்திய சாலைகளிலும் சிறைச்சாலைகளிலும் படிக்கத் தெரிந்தவர்கள் வீண் காலம் போக்காமலும் நோய் தெரியாமல் மறந்தும் இருக்க, விநோதமாய்ப் படித்துக் கொள்ளுவதற்கும், முச்சியர் நானாவித ஒட்டுப்பெட்டி, பொம்மை, பாவை முதாலனவைகளைச் செய்வதற்கும், வீட்டின் மேற்கூரைக்குத் தகடுபோல் செய்து மூடுவதற்கும், திரைச்சீலைபோல ஒட்டி மறைத்துக் கட்டிக்கொள்வதற்கும் இக்காகிதங்களை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். புத்தகம் கட்டுகிற பைண்டர் கத்தரித்து எறிந்து விடுகிற துண்டு துண்டான காகிதங்களை நூல் வர்த்தி போல் தீபங்கொளுத்திக் கொள்வதற்கும், நெருப்பைப் பற்றவைத்து எடுத்துக்கொண்டு போவதற்கும், சரம்சரமாகத் தொங்கவிட்டுப் பந்தல்களை அழகுசெய்வதற்கும், பெட்டி பேழைகளிலுள்ள சாமான்களை மூடி வைப்பதற்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.

உலகத்தில் உபயோகமற்ற பொருள் ஒன்று மில்லை என்பதற்கு இதைவிட வேறு திருஷ்டாந்தமென்ன வேண்டும்? "சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவு"மென்னும் பழமொழிக்கு இப்பழைய காகிதங்கள் கையாளப்படுகிற விநோத வகைகளே பெரிய சாக்ஷியாகும்.

BUSINESS METHODS.

வியாபார முறைகள்.

Shop Assistants.

கடையில் உதவிகள்.—கடைகளில் வேலையா யிருக்கும் உதவிகள் ஒவ்வொருவரும் நன்றாய் போதிக்கத் தக்க உபாத்தியாயர்கள் போலிருக்கவேண்டும். கடையிலுள்ள சரக்குகளின் குணகுணங்கள் முதலிய விஷயங்களை நன்றாய்த் தெரிந்தவர்களா யிருக்கவேண்டும். வாங்கவந்தவர்களுக்கு அவைகளை எடுத்துச் சொல்லக் கூடியவர்களா யிருக்கவேண்டும்.

Exhibition of Babies.

குழந்தைக் காட்சி.—லண்டன் பட்டினத்திலே குழந்தைகளின் ஸுகத்துக்கும் வளர்ச்சிக்குமேற்ற 'விரோல்' என்னும் ஓர்வித உணவுண்டாக்குங் கம்பெனியொன்றுளது. இந்த உணவின் மகத்துவத்தை யறிந்த பெற்றோர் உலகத்தின் நானாபகுதியிலும் இருக்கிறார்கள். அவர் தம்கைக்குழந்தைகளை அருமையான இந்த உணவையூட்டி வளர்த்துவருகிறார்கள். கம்பெனியார் இவ்வகையனுகூலங்களைப் பற்றி மிகத் தைரியமடைந்து தமது உணவையுண்டு வளருங் குழந்தைகளின் சிறப்பைத் தாம் முகாமுகமாய் நேரிற் கண்டு களிக்க எண்ணங்கொண்டு அதற்காக குழந்தைக் காட்சியொன்று லண்டன் பட்டினத்திலே நடத்தினார்கள். மேற்குறித்த உணவையுண்டு வளருங் குழந்தைகள் மாத்திரமே காட்சிப் பொருளாய் வரும்படி யழைக்கப்பட்டன. இந்த விளம்பரம் உலகத்தின் எல்லாப் பகுதிக்கும் அனுப்பப்பட்டது. வரும் ஒவ்வொரு பிள்ளையினுடைய பிரயாணச்செலவையும் நாம் பொறுப்போம்; ஒவ்வொரு பிள்ளைக்கும் வசிக்க அறையும் பராமரிக்க ஒவ்வோர் வைத்தியனும் நம் பொறுப்பில் தருவோம்; நீங்கள் ஒவ்வொரு ஆயாளுடன் மாத்திரம் இங்குவந்தாற்போதும் என்று கம்பெனியார் விளம்பரம் போட்டிருந்தார்கள். இப்படியே கம்பெனியார் யாவையும் ஸரியாய் நிறைவேற்றினார்கள்.

தூரமானதேசங்களிலிருந்து தம் குழந்தைகளைப் பெற்றோர் பயமின்றிக் கொண்டுவந்து காட்சிக்குச் சேர்ப்பரோ என்று அனேகர் ஸந்தேகித்தார்கள். ஆயினும் உலகத்திலுள்ள 40 ஜாதிகளிலிருந்து 100 குழந்தைகள் வந்துகூடின. சீனா, ஜப்பான், இந்தியா, இலங்கை, எகிப்து, மேல் ஆபிரிக்கா, தென்னமெரிக்கா, ஐக்கிய மாகாணம், மேற்கிந்திய தீவுகள், துருக்கி, க்ரீஸ், ஆஸ்திரியா, ஜெர்மனி, ருஷியா, போலாந்து, ப்ரான்ஸ், ஸ்பானியா, போர்த்துக்கல், மால்டா, நார்வே, டென்மார்க்கு, ஒல்லாந்து, சுவிற்சர்லண்ட், அங்கேரி என்னுந் தேசங்களிலிருந்தே மேற்குறித்த 100 குழந்தைகளுங் காட்சிப்பொருளாய் வந்து சேர்ந்தனவாம்.

தாமுண்டாக்கி விக்கிரயஞ்செய்துவருகிற விரோல் என்னு முணவையுட்கொண்டு ஸுகபெலம், நல்வளர்ச்சி, இவைகளை அடையும் பிள்ளைகளையும் அவர்களது தொகைகளையும் உலகமறியப் பகிரங்கத்திற்காட்டி அந்த உணவின் அருமை பெருமையை யெவருக்குந் தெரிவிப்பதற்கே கம்பெனியார் இந்தக் காட்சியைக் காட்டினார்கள். எல்லாத்தேசத்திலும் வியாபாரக் கம்பெனிகள் யாவும் தம்பொருட்களுக்கு நன்மதிப்புண்டாக்குவதற்குப் பலவித உபாயங்களைக் கையாடி வருகின்றன. அவ்வகையில் மேற்படி காட்சியு மொன்றேயாயினும் இந்தக்காட்சியின் பேரிற் கம்பெனியார்க்கு நேரிட்டிருக்குஞ் செலவுகள் அளவுக்குமிஞ்சியனவேயாம். நல்லவருமானத்தையடைவதினாலேயே கம்பெனியார் இவ்வளவு பெருந்தொகையை செலவழித்திருக்கிறார்கள், ஆனாலும் அவர்கள் இதைப்பற்றிச் சிறிதும்பயப்படவில்லை. உணவு இனி முன்னிலும் பார்க்கப் பன்மடங்காய் விலைப்படுமென்று காத்திருக்கிறார்கள். இதற்காகவே இந்தப் பெரிய உபாயத்தைக்கையாடினார்கள்.

The Alphabet of Success.

ஜயமடைவதற்கு முக்கிய ஸாதனங்கள்.—ராத்சைல்டு எனபவர் இங்கிலாந்தில் ஒரு பெரிய ப்ரபு. இவருடைய பாங்கியின் சுவற்றில் பின்கண்ட நற்போதனைகள் எழுதி ஒட்டப்பட்டிருக்கின்றன.

உன்வேலையின் ஒவ்வொரு சின்ன ஸமாசாரத்தையும் ஜாக்கிரதையாய கவனி.

ஒரு விஷயத்திலும் காலஹாரணம் செய்யாதே.

எல்லா விஷயங்களையும் தீர்க்காலோசனை செய்து பார்த்து அப்புறம் தீர்மானஞ் செய்.

ஸரியான காரியங்களை தைரியமாய்ச் செய். தப்பான காரியங்களைச செய்ய அஞ்சு.

கஷ்டங்கள் வந்தால் பொறுமையாய் இரு.

வாழ்நாளில் நேரிடும் இடையூறுகளை மனுஷயத்தனமாயும் தைரியமாயும் மேற்கொள்.

FRAUDS AND FAKES.

மோசங்களும் பித்தலாட்டங்களும்.

How Two Gamblers Escaped.

இரண்டு சூதாடிகள் தப்பிய விநோதம்.—டாக் ஓன், சிட்ஹோமர் என்ற இரண்டு சூதாடுபவர்கள் டிடானிக்கப்பலில் சூதாடிக்கொண்டிருந்தபோது தம் கப்பலுக்கு ஆபத்து நேர்ந்து விட்டதென்றும், இனித் தப்பவழியில்லை யென்றும் கேள்விப்பட்டவுடன், வெளியே ஓடிவந்து உயிர்தப்பப் படவு தேடினார்கள். அப்போது பெண்களை மட்டும் படவுக்குள் ஒரு மாலுமி ஏற்றிக்கொண்டிருந்தார். இதைப்பார்த்த இவர்கள் பெண்ணுருவாய் மாற்றிக்கொண்டாலன்றி வேறு வழியில்லை யென்று கண்டு பெண்வேஷந்தரித்து அப்படவில் ஏறிக்கொண்டார்கள். படவுக்கு வேண்டியவர்கள் ஏற்றப்பட்டவுடன் கப்பலை விட்டுப்படவு நகர்ந்தது. நடுவழியில் அப்படவைத் தள்ளப் போது மானமனிதர்களில்லாமல் பெண்களே தள்ள நேர்ந்தபோது இவர்கள் தம் பெண்ணுருவை நீக்கி ஆணுருவைத்தரித்துப் படவுதள்ளினார்கள். இவர்களுடைய உதவியில்லாதிருந்தால் அப்படவின் கதி அதோகதியா யிருக்குமென்று சொல்லுகிறார்கள்.

Adulteration of Food.

சாப்பாட்டுப் பொருள்களில் கலப்படஞ் செய்தல்.—சில வருஷங்களுக்கு முன்னால் அமெரிக்காவில் இறைச்சியில் ரொம்பவும் கலப்படம் செய்ததாக பெரிய அமளியாயிருந்தது. ஆனால் தற்போது அந்த தேசத்தில் சாப்பாட்டுப் பொருள்களில் இதரப்பொருள்களைக்கலப்பது குறைந்து கொண்டு வருவதாக எடிஸன் என்பவர் சொல்லுகிறார். சர்க்கரையோடு ஒன்றையும் கலப்பதில்லையாம். ஏனென்றால் அதற்குக் குறைந்த விலையுள்ள வெள்ளைஸாமான் ஒன்றும் கிடையாதாம். உப்போடு "ச்சாக்" என்று சொல்லப்படும் சீமைச்சுண்ணாம்பைக் கலந்து அந்த உப்பு கையில் ஒட்டிக்கொள்ளாது என்று சொல்லி அதிக விலைக்கு விற்கிறார்களாம்.

Tuition by Correspondence.

தபால் மூலமாய் போதனை.—சில பேர்கள் இங்கிலாந்து அமெரிக்காமுதலிய தேசங்களில் விவஸாயம், வியாபாரம், இன்ஜினியரிங்கு, பத்திரிகை போடுதல், முதலிய தொழில்களை சில கட்டணங்கள் செலுத்துபவர்களுக்கு கடித மூலமாய் போதிப்பதாக பத்திரிகைகளில் விளம்பரங்கள் போடுகிறார்கள். இப்படிப்பட்ட விளம்பரங்களில் அநேகம், மோசடியான விளம்பரங்கள் என்று ஒரு நிரூபர் ஒரு பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார். மேற்சொன்ன போதகர்கள் அந்தத் தொழில்களைப் பற்றிய நல்ல புஸ்தகங்களில் சில பாகங்களை எடுத்து எழுதி அனுப்பிவிட்டு அதில் சொன்னபடி செய்தால் ஸமர்த்தர்களாய் விடலாமென்று சொல்லுகிறார்களே தவிர, வேறு ஒன்றும் அவர்கள் ஸ்வதாவாய்ச்சொல்லி போதிப்பதில்லை. மேற்சொன்ன நிரூபர்களுடைய மூன்று ஸ்நேகிதர்கள், மனுஷ்யாளை வசியம் செய்யும் வித்தையும், கணக்குவைக்கும் வித்தையும் தாபால் மூலமாய்க்கற்றுக் கொள்வதற்காக பணத்தைக்கொடுத்து விட்டு ஏமாந்துபோய் விட்டார்களாம்.

Adulteration in Cocoanut Oil.

தேங்காய் எண்ணெயில் கலப்பு.—சென்ற பிப்ரவரி௴ 28௳ பம்பாயில் அந்த ராஜதானி ஸயன்ஸ் அதாவது சாஸ்திர சங்கத்தின்முன் மிஸ்டர் கனித்கர் என்பவர் "தேங்காய் எண்ணெயில் கலப்பு" என்பதைப்பற்றி ஒரு வியாஸகம் படித்தார். கொஞ்சகாலத்துக்கு முன்னால் பூனாவில் தேங்காய் எண்ணெய் ரொம்ப மலிவாய் விற்றதாம். அதைப்பற்றி அவருக்கு ஸந்தேகம் தோன்றிற்றாம். ஏனென்றால் தேங்காய் எண்ணெய் மழைகாலத்தில் உறைவது போல், அந்த எண்ணெய் உறையவில்லையாம். அதை பரிசோதித்துப் பார்த்தபோது, 100-க்கு 57 பங்குக்குக்கு மேல் தாதுவர்க்க எண்ணெய் கலந்திருந்ததாம். இன்னும் சோதனை செய்ததில் அதில் தேங்காய் எண்ணெய்யிருப்பதாகவே தெரியவில்லையாம். கடைசியில் இந்த பித்தலாட்டம் பம்பாயில் நடப்பதாக ஏற்பட்டது. அங்கே "ஸப்பித்" அதாவது "வெள்ளை எண்ணெய் முதல் நம்பரை" அதன் நாற்றத்தைப் போக்கிவிட்டு தேங்காய் எண்ணெயோடு கலப்பதாக ஏற்பட்டது. இந்த எண்ணெயை யந்திரங்களுக்குப்போட்ட உபயோகிக்கும் பக்ஷத்தில் யாதொரு கெடுதலுமில்லை. சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்துவதாயிருந்தால் என்ன ஆகுமோ ஈசுவரனுக்குத்தான் தெரியும்.

MACHINERY AND INVENTION.

யந்திரங்களும் நூதன கற்பிதமும்.

A Motor Apparatus.

ஒரு மோட்டார் வண்டி யந்திரம்.—விட்னி நகரத்திலுள்ள ஜெ. லீரி என்பவர் மோட்டார் வண்டிகளால் ஜனங்களுக்கு விபத்துண்டாகாவாறு யந்திரமொன்று கண்டுபிடித்திருக்கிறார். இந்த யந்திரம் மோட்டார் வண்டியின் முன்பக்கத்தில் வைக்கப்படுமாம். இது மோட்டார் வண்டி யோடும்போது, அதனெதிரே கிட்டும் எதையும் மிக எளிதாக அப்புறப்படுத்திவிடுமாம்.

A Binding Machine.

பைபின்டிங் யந்திரம்.—மாதாந்தர சஞ்சிகைகள் சிறு புத்தகங்கள் முதலியவைகளை கம்பியினாலாவது நூலினாலாவது தற்பொழுது தைத்து வருகிறார்கள். மேற்கூறிய இரண்டின் உதவியின்றி தைக்கும்படியான ஓர் பைபின்டிங் யந்திரம் அமெரிக்கா கண்டத்தைச்சார்ந்த நியூயார்க்கு நகரத்தில் ஸ்தாபனஞ் செய்யப்பட்டிருக்கும் ஷிரீடன் கம்பெனியாரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

Agricultural Machinery.

விவஸாய யந்திரங்கள்.—வடக்கே மதய மாகாணங்களிலும், பீரார்களிலும், ஜமீன்தார்களும், விவஸாயிகளும், ஷிவஸாயத்தில் உபயோகமான யந்திரங்களை ரொம்ப வாங்கிவருவதாக விவஸாயப்பண்ணைகளின் ரிபோர்ட்டுகளினால் வெளியாகிறது. பதரைத் தூற்றுவதற்கான காத்தாடி யந்திரங்கள் முக்கியமாய் ரொம்ப செலவாகின்றனவாம்.

Water Finding.

தண்ணீரிருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தல்.—சாஸ்திரீய முறைகளால் எவ்விதம் கீழே பாய்ந்து கொண்டிருக்கிற நீரோட்டத்தைக் கண்டுபிடிக்க முடியுமென்று ஒரு ப்ரஞ்சு சாஸ்திர நிபுணர் காண்பித்திருக்கிறார். டீனார்த் என்பவர் கண்டுபிடித்த யந்திரத்தின் பெயர் மைக்ரோபோன். ஓர் குழாயின் ஒரு முனையைத் தரையில் நட்டு மற்றொரு முனையை மைக்ரே போனோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனால், ஓடிக்கொண்டிருக்கிற அல்லது சொட்டிக்கொண்டிருக்கிற தண்ணீரின் சத்தம் பாதாளத்திலிருந்து காதிற்குக் கிணீரென்று கேட்கும்படி செய்யப்பட்டிருக்கிறது.

A Postal Stamping Machine.

தபால் தலையோட்டும் யந்திரம்.—லண்டனில் ஒரு போஸ்டாபீஸில் ஒரு நூதனமான யந்திரம் வைக்கப்பட்டிருக்கின்றது. தபால் தலைகளை தானாகவே ஒட்டிவிடுமாம். ஒரு காலணா அந்த மெஷின்மேல் வைத்தால் ஒரு ஸ்டாம்பை வெளியே கொண்டுவந்து தபால் மேல் ஒட்டிவிடும். ஒரு மணிக்கு 2000 முதல் 3000 வரைக்கும் லெட்டர்களுச்குத் தலையொட்டும். ஒவ்வொரு யந்திரமும் 50,000 ஸ்டாம்புகள் கொள்ளும். நல்ல காசுகளைத்தான் அந்த மெஷின் வாங்கிக்கொள்ளும்படி அதில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வளைந்து தேய்ந்த காசுகளாகட்டும் அன்னிய தேசத்துக் காசுகளாகட்டும் அந்த யந்திரத்தில் வைக்கப்பட்டால் அந்த யந்திரம் அவைகளைக் கீழே தள்ளிவிடுமாம். காசு வைத்தால் தபால் தலை கொடுக்குபடியான யந்திரங்கள் பம்பாயில் வைக்கப்பட்டுப் பரீட்சிக்கப்பட்டு வருகின்றனவென்றுந் தெரிகிறது. இதனால் ஜனங்களுச்கு அனுகூலமுண்டாகிறதென்று தெரியவந்தால் அந்த யந்திரங்கள் இந்தியாவிலுள்ள முக்கியமான தபாலாபீசுகளில் உபயோகப்படுத்தப்படுமென்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் பம்பாயிலுள்ள யந்திரங்களில் ஸ்டாம்புகள் ஒட்டும் ஏற்பாடு வைக்கப்படவில்லை.

Machinery Imports into India.

இந்தியாவில் யந்திர இறக்குமதி.—இந்தியாவுக்கு வரும் யந்திரங்களில் பெரும்பாகம் இங்கிலாந்திலிருந்தே வருகின்றன. இங்கிலாந்து அல்லாது அந்நிய நாடுகளிலிருந்து கீழ்க்கண்ட விவரப்படி மெஷீன்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:—

தேசம்	பவுன்கள்
அமெரிக்கா	136,298
ஜெர்மெனி	71,371
பெல்ஜியம்	35,306
ஹாலண்டு	2,449
இத்தலி	14,609
ஆஸ்திரியா—ஹங்கேரி	5,774
ஜப்பான்	5,674
ஹாங்காங்	2,358
ஆஸ்திரேலியா	2,181
பிரான்ஸ்	757
ஸ்வீடன்	210
மற்ற இடங்களிலிருந்து	6,670

இந்த விவரத்திலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மெஷீன் வகையரா ஸாமான்கள் விஷயத்தில் இங்கிலாந்தோடு போட்டி போட்டுக்கொண்டு முன்நிற்பது அமெரிக்கா என்பது நன்கு விளங்கும். அமெரிக்காவுச்கு அடுத்தபடியாக ஜெர்மெனி இருக்கிறது. ஜப்பான் இப்போதுதான் முதல் தடவையாக போட்டி போட முன்வந்திருக்கிறது.

LAW.

சட்டம்.

Maintenance.

ஜீவனம்சம்.—250 ரூபாய் வரும்படியுள்ள ஒரு குடித்தனத்தை விதவை ஜீவனம்சத்திற்காக 120 ரூபாய் கொடுக்கும்படி சொல்வது ஸரியல்ல.

Careless Proceedings of a Vakil.

வக்கீலின் அலக்ஷிய நடத்தை.—ஒரு கக்ஷிக்காரனிடமிருந்து வக்காலத்து பாக்கியிருந்த ஒரு வக்கீலுடைய மோசமென்று எண்ணும்படியான அலக்ஷிய நடத்தையால் ஒரு அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அந்த அப்பீல் மறுபடியும் பையிலில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியது கிரமம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

Government Water.

கவர்ன்மெண்டு ஜலம்.—கவர்ன்மெண்டாருடைய ஜலத்தை எப்போதும் இனமாக உபயோகப்படுத்திக்கொள்ள கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்திருப்பதாக ஊகிக்கக்கூடாது. இனமாக அனுமதி கொடுக்கப்பட்டது ஒரு வருஷத்திற்கு மட்டிலும். பிறகு அந்த இனம் அனுமதி புதுப்பிக்கப்பட வேண்டும்.

Debts of a Joint Family.

அவிபக்த குடும்பங்களின் கடன்.—அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு கல்யாணம் செய்விப்பது குடும்பத்தைச்சேர்ந்த காரியந்தான். அதற்காகக் குடும்பத்தலைவன் அவசியமாக கடன்வாங்க நேரிடும் பக்ஷத்தில் அந்தக்கடன் எல்லா பாகஸ்தர்களையும் கட்டுப்படுத்தும், இது சூத்திரர்களாயிருந்தாலும் ஸரி, அல்லது த்விஜாளா யிருந்தாலும் ஸரி, இவர்களுக்குள் விவாகம் என்பது ஒரு ஸம்ஸ்கார மாகும், கல்யாணமாகாவிட்டால் ஜாதி ப்ரஷ்டமாகமாட்டாது. ஆகையால் கல்யாணத்திற்காக ஸொத்தைவிற்று கல்யாணம் செய்யவேண்டுமா வேண்டாமா வென்பது இந்துக் குடும்பங்களில் வழங்கிவரும் கோட்பாட்டைப் பொருத்தது - 34. மதராஸ். 422.

Dividend Warrants.

டிவிடேன்ட் வாரண்டுகள்.—பாங்கிகளிலும் ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளிலும், ஷேர் எடுத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு டிவிடெண்டுக்காக அதாவது வட்டிக்காக, டிவிடெண்ட் வாரண்டு அதாவது செக்குப்போன்ற கேட்டவுடனே பணம் பெறும்படியான ஒரு காகிதம் அனுப்புவது வழக்கம். ஸ்காத்லாந்தில் கிளாஸ்கோ நகரத்தில் அந்தப் பட்டிணத்து கஜான்ஜி அந்த ஊரில் விளக்கு முதலியவைகள் போடுவதற்காக ஏற்பட்டுள்ள காஸ் கம்பெனியில் பணம் போட்டிருக்கும் சில ஷேர் ஹோல்டர்களுக்கு அவர்களுக்கு கொடுக்கவேண்டிய டிவிடெண்டுக்காக டிவிடெண்டு வாரண்டுகளை தபால் மூலமாய் அனுப்பினர். ஆனல் அந்த வாரண்டுகள் குறிப்பிட்ட ஷேர் ஹோல்டர்களுக்குப் போய் சேரவில்லை. ஷேர் ஹோல்டர்கள் மறுபடியும் டிவிடெண்டைக் கொடுக்கும்படி கேட்டபொழுது ஏற்கனவே டிவிடெண்டு வாரண்டுகள் அனுப்பிவிட்டதால் ஜாமின் கொடுத்தாலொழிய மறுபடியும் டிவிடெண்டுகளை கொடுக்க முடியாதென்று முனிஸிபாலிட்டியார் மறுத்து விட்டார்கள். அதன்மேல் வியாஜ்யம் நடந்தது. டிவிடெண்டு வாரண்டுகளை தபால் மூலமாய்த்தான் அனுப்புவதென்று கம்பெனி ரூல்களில் ஏற்பட்டிருந்தாலொழிய அவைகளை தபால் மூலமாய் அனுப்பிவிட்டதனல் டிவிடெண்டு கொடுத்தது ஆகாது என்று சொல்லி, ஷேர் ஹோல்டர்களுக்கு டிவிடெண்டுகளையும், செலவு தொகையையும் முனிஸிபாலிட்டியார் கொடுக்கும்படி கோர்ட்டார் தீர்மானித்துவிட்டார்கள். இந்த தீர்மானத்தை பாங்கிகளிலும், ஜாயிண்டு ஸ்டாக் கம்பெனிகளிலும் பணம் போட்டிருக்கும் ஷேர் ஹோல்டர்கள் கவனிக்கவேண்டும்.

Principal and Agent.

முதலாளியும் ஏஜெண்டும்.—முதலாளி சூதாடித் தோற்றதற்காகக் கொடுக்கவேண்டிய கடனை ஏஜெண்டு ரொக்கமாகவோ அல்லது கணக்கில் பற்றுப் போட்டுக்கொண்டோ கொடுத்திருக்கும் பக்ஷத்தில் அந்தப் பணத்தை முதலாளி கொடுக்கவேண்டியவனே.

Remuneration for Mediation.

மத்யஸ்தம் செய்வதற்கு பிரதிப் பிரயோஜனம்.—இரண்டு பேர்களுக்கு ஒரு விஷயமாக வீவில் தகரார் இருந்தது. இவர்களில் ஒருவன் மூன்றுவது மனிதனைக்கூப்பிட்டு அவனுடைய தாக்ஷணியத்துக்கு கட்டுப்பட்ட தன் எதிராளியோடு மத்யஸ்தம் செய்துவிட்டால் மத்யஸ்தம் செய்வதற்க்காக பிரதிப்பிரயோஜனம் செய்வதாகச்சொன்னன். இப்படி மத்யஸ்தம் செய்வதற்குள்ள பிரதிப் பிரயோஜனமானது சட்டபூர்வமாய் ஒப்புக் கொள்ளக்கூடியதென்றும், அதை வஸூல் செய்ய வியாஜ்யம் செல்லுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.—16 கல்கத்தா வீக்லி நோட்ஸ் 480 பக்கம்.

MEDICINE.
வைத்தியம்

Itch.

சொறி சிரங்கு.—கந்தகத்தைப் பன்றி நெய்யிலாவது, தேங்காயெண்ணெயிலாவது கூட்டிக்கொண்டு அதன் துர்க்கந்தம் நீங்குவதற்கு சிறிது அத்தர் சேர்த்துக்கொள்ளவும். இதை,சொறி சிரங்குகளுக்குப் பூச சுகுண முண்டாகும்.

Enlarged Tonsils.

உண்ணாக்கு வளர்த்தி.—மெழுகினால் ஒரு சிறிய கரண்டி செய்து, ஈர்க்குச்சொருகி காம்புபோல் செய்துகொண்டு,பிறகு வெள்ளைப்பூண்டு ரஸத்தை கரண்டியிலிட்டு காம்பைப் பிடித்துக்கொண்டு ஷை வெள்ளைப் பூண்டு ரஸம் உண்ணாக்கில் படும்படி 2, 3 தடவை நிதானமாய் வைத்தால் சுகுணமுண்டாகும்.

Acalypha Indica.

குப்பைமேனி.—இது ஸாதாரண வருஷப் பயிர்ப் பூண்டுகளிலொன்று. வைசூரிநோய் பரவுங் காலத்திலே வேப்பிலையைச் சேகரித்து வாசற்கூரையில் சொருகிவிடுவதும், வைசூரிப் புண்ணிலே ஈ விழாமல் துரத்துவதற்காக உபயோகிப்பதும் வழக்கம். அதுபோலப் "பிளேக்" நோய் பரவுங் காலத்திலே குப்பைமேனித் தழையைப் பிரயோகிப்பது நலமென்று அனுபவத்திற் காணப்பட்டதாயறிகிறோம்.

A Doctor's Opinion.

ஒரு டாக்டரின் அபிப்பிராயம்.—மெலிந்து சுருங்கியிருக்கும் உடம்பில் கிருமிகள் மிகுதியாக இருக்கின்றன என்றும், பூரித்திருக்கும் உடம்பில் கிருமிகள் மிகுதியாக இருப்பதில்லை என்றும், பெண்களது உடம்பில் விட புருஷர்களது உடம்பில் கிருமிகள் மிகுதியாக இருக்கின்றன என்றும், குளிர்ந்த நீரில் ஸ்நானஞ் செய்தால் கிருமிகள் குறைந்துபோமென்றும், சாராயங் கலந்துள்ள குளிர்ந்த நீரில் ஸ்நானஞ்செய்வது மிகவும் நலமாமென்றும் ஒரு ஜப்பான் டாக்டர் கூறுகின்றார்.

The Mosquito.

கொசு.—கொசுக்களால் தான் மலேரியா என்னும் விஷ ஜுரம் முண்டாகி ஜனங்களை லக்ஷக்கணக்காக நாசஞ்செய்கிற தென்பது இப்போது அனேகமாய் வாஸ்தவமாகி விட்டதாகச் சொல்லலாம். ஆதலால் கொசுக்களைப் பற்றிய ரகஸ்யமொன்று அபிமானிகளுக்கு விசித்திரமாகக் காணும். மொத்தமாகக் கொசுக்களில் ஆண்கள் அழுக்கு முதலியவற்றையே தின்று ஜீவிப்பவை யென்றும், பெண்கள்தான் ரத்தங் குடிப்பவை யென்றும் தெரிகிறது. அதிலும் பெண்கள் ஒரு முறை கர்ப்பந்தரித்தபின் முட்டையிட்டு, மறுபடி யொருமுறை ரத்தங் குடித்தால் ஆண்கள் வேண்டாமலே மறுபடி முட்டையிடலாமென்றும், இப்படிப் பலமுறை நூற்றுக்கணக்காக ரத்தங் குடித்து முட்டையிடுவது ஸாத்திய மென்றும் தெரிகிறது.

Tea and its Effects.

தேயிலையும் அதன் குணமும்.—தேயிலையில் "காபீன்" என்ற ஒரு ஸத்தும், "டானின்" என்ற துவர்ப்புள்ள ஓர்வித ஸத்தும் கலந்திருப்பதாக ரஸாயன சாஸ்திரிகள் தெரிவிக்கிறார்கள். மேற்கண்ட இரண்டு ஸத்துகளும், தேயிலையில், முற்கூறியது ஒரு பங்கும், பின்னால் கூறியது மூன்று பங்குமிருக்கின்றன. இவ்விரண்டு ஸத்துகளும் முறைப்படி யிருந்தால் தேயிலை எவ்வித தொந்தரவையு முண்டாக்காது. ஆனால் "டானின்" என்ற துவர்ப்பு ஸத்தானது மிகக் கொடிய மருந்து. அந்த ஸத்தை கொஞ்சம் எடுத்து ஒரு மாம்ஸத் துண்டின்பேரில் வைத்தால் அம்மாம்ஸத்தைத் தோலாக மாற்றிவிடும். ஆகையினால் இவ்விரண்டு ஸத்துகளும் அதற்குரிய கணக்கின்படி இருந்தாலன்றி டீ குடிப்பதற்கு யோக்கியதை கிடையாது. தேயிலையில் கெடுதலிருந்தாலாவது அல்லது நல்ல தேயிலை கெடுதலாக பக்குவப்படுத்தப் பட்டிருந்தாலாவது அத்தேயிலைக் கஷாயத்தில் காபீன் என்ற ஸத்து திட்டத்திற் சதிகமாகிறது. அதற்கடையாளம் கசப்பு மேலிட்டிருக்கும். தேயிலைக் கஷாயம் இறக்கி அதிக நேரம் வைத்திருந்தால் 'டானின்' என்ற துவர்ப்பு ஸத்து அதிகரித்து, ஜீரண சக்தியைக் குறைத்து நோய்க்கிட முண்டாக்கும். தேயிலையை ஒரு போதும் தண்ணீரில் போட்டு காய்ச்சக்கூடாது. சுத்தமான தண்ணீரை கொதிக்க வைத்து சூடான வேறொரு பாத்திரத்தில் தேயிலையைப் போட்டு வைத்திருந்து வெந்நீரைச் சிறிது சிறிதாக (5 நிமிஷத்திற்குள்ளாக) சாப்பிடுபவர்களுடைய இஷ்டம்போல் குறைவாகவோ ஜாஸ்தியாகவோ ஊற்றி உடனே வடிகட்டிச் சாப்பிடுவதுதான் ஸரியான முறையாகும். தயார்செய்த தேயிலையை அதிகநேரம் வைத்திருத்தல் ஒருபோதும் கூடாது.

FUN AND ANECDOTE.
வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

A Good Neighbour.

ஒரு நல்ல பக்கத்து வீட்டுக்காரன்.—

தந்தை:—[மனைவியைப் பார்த்து] "நீ அடுத்த வீட்டிற்கு அடிக்கடி போகாதே. அந்த வீட்டுக்காரனாகிய குப்பன் நல்லவனல்ல" என்றான்.

மனைவி:—"அப்படியா! நான் இனி அங்கு போகவில்லை" என்றாள்.

மகன்:—[4 வயதுச் சிறுவன்] "இல்லை அப்பா, அவன் ரொம்ப நல்லவன். தினம் நீ இல்லாதபோது வந்து எனக்கு மூன்று காசுங் கொடுத்து அம்மாளுக்கு ஒரு முத்தமுந் தந்துபோகின்றான்" என்றான்.

A Country Boor.

பட்டிக்காட்டான்:—

பட்டிக்காட்டான்:—ஐயா! எங்கூருக்கும் டிக்கட்டி கொடுங்க.

ஸ்டேஷன் மாஸ்டர்:—அடாய்! எந்தவூருக்கு?

ப. ன்:—இந்தால் இருச்குப்பாருங்க, இது கூடத் தெரியாதா?

ஸ். ர்:—எய் நேரமாய்விட்டது, எந்தவூர் சீக்கிரம் சொல்?

ப. ன்:—எலே! அந்த விசேபுரத்துக்கும் மாயரத்துக்கும் நடுவாலே இருக்காமே ஜங்குசன்

ஸ். ர்:—பேரளமா?

ப. ன்:—ஆமாய்யா அதான் அதான் அதான்

ஸ. ர்:—எடு எடு சீக்கிரம் கால் ரூபாய்.

ப. ன்:—எப்பாடி எங்கப்பாணை மூணுவீசத்துக்குமே ஒரு துட்டுக்கூடயில்லை.

ஸ். ர்:—சரி அதைத்தான் எடு.

பட்டிக்காட்டான் முடிச்சையவிழ்த்து மூன்றணு எடுப்பதற்குள் ஸ்டேஷன் மாஸ்டர் டிக்கட்டை எடுத்துக்கொண்டு வெளியில்போய் அவனையழைத்துச்சென்று ஒரு வண்டியில் ஏற்றி டிக்கட்டைகொடுத்து காசையும் வாங்கிச்சென்றார். ரெயில் புறப்பட இன்னும் ஐந்துநிமிஷ மிருந்தது. பட்டிக்காட்டான் வெற்றிலைப் பையையவிழ்த்து பார்க்கையில் புகையிலைத்துண்டைக்காணவில்லை. உடனே மூட்டையை வண்டியில் வைத்தான். முன் உட்கார்ந்திருந்த ஸ்டேஷன் வெளிப்புறத்திற்குப்போனான். அதற்குள் மூட்டையுடன் வண்டியும் குப் குப் பென்று புறப்பட்டது. பட்டிக்காட்டானும் "அண்ணே வண்டியை நிறுத்" தென்று பரபரப்புடன் திரும்பி வந்தான். அதுவும் கடகட வென்றோடவே, இவன் கிடுகிடென்று தொடரவே, மடமடவென்றொருவன் ஓடிவந்து, தடபுடலாய்ப் பேசி, பட படப்புடன் பட்டிக்காட்டானை அடிமேலடியடித்து அப்புறப்படுத்தினான்.

A Faithful Dog.

ஒரு நன்றியுள்ள நாய்.—ஒரு பிரபு வெகுநாள் ஒரு நாயை வளர்த்துவந்தார். ஒருநாள் ஸ்நானஞ் செய்யும் பொருட்டு ஓர் ஆற்றுக்குச் சென்று தம் உடுப்புகளை யெல்லாங் கழற்றித் தம்முடைய நாயினிடத்தில் ஒப்புவித்து விட்டு, ஆற்றிலிறங்குந் தருணத்தில் அந்த நாய் அவருக்குக் குறுக்கே பாய்ந்து அவரை யிறங்கவொட்டாமல் தடுத்தது. அது அவ்வாறு தம்மைத் தடுப்பதின் காரணம் தெரியாததினால் அதை யுபேக்ஷித்துப் பின்னும் ஆழத்திலிறங்கினர். உடனே யந்த நாய் குரைத்துக்கொண்டு தன்னுடைய எஜமானனுக்கு முன்னாகத் தண்ணீரில் குதித்தது. அப்பொழுது அதை ஒரு முதலை பிடித்துக்கொண்டு போய்விட்டது. அதன்மேலந்தப் பிரபு, தம்முடைய பிராணனைக் காப்பாற்றும்பொருட்டு அந்த நாய் செய்தவுபாயம் பிரயோஜனப்படாமற் போகவே எஜமானனுடைய பிராணத்திற்காகத் தன்னுடைய உயிரையே கொடுக்கத் துணிந்ததை நினைத்து அதிக விசனப்பட்டார்.

Why Do You Bark Like a Dog.

நீ ஏன் நாய்போல் குரைக்கிறாய்—ஒரு வழக்காளி கோர்ட்டில் பேசிக்கொண்டிருக்கும்போது எதிரியின் வக்கீல் அவனைப் பார்த்து "நீ என்ன நாய்போல் குரைக்கிறாய்" என, வழக்காளி வக்கீலைப் பார்த்து "ஐயா, திருட்டுப்பயலைக் கண்டால் நாய் குரைக்காதா"! என்றான்.

How Many Children Have You.

உமக்கு எத்தனை குழந்தைகள்.—ஐயா, உமக்கு பிள்ளைகள் உண்டோ? என்று ஒரு பையன் ஒரு மனிதனைக் கேட்டான், உண்டு என்றான். "உனக்கு பிறந்தது எத்தனை ஊருக்கு பிறந்தது எத்தனை!" என்று கேட்டான். "அந்த, மனிதன் திடுக்கிட்டு நின்றான்". உனக்கு பிறந்ததுபிள்ளை ஊருக்கு பிறந்தது பெண்ணல்லவா என்றான்,

CURIOSITIES.
விநோதங்கள்.

Salt Hill.

உப்பு மலை :—ஸான்டொமிங்கோவில் 4 மயில் நீளமுள்ள உப்புமலை யொன்றிருக்கிறதாம். அதிலுள்ள உப்பு 9-கோடி டன் எடையுள்ளதாம். அவ்வுப்பு பளிங்குபோன்று வெண்ணிறமுடையதாம்.

The Biggest Book.

மிகப் பெரிய புஸ்தகம்.—சைனாவிலுள்ள வைத்திய சங்கத்தார் 7-அடி நீளமும், $3\frac{1}{2}$ அடி உயரமும், 1203 பவுன் கனமுமுடைய ஒரு புஸ்தகம் வித்தஞ் செய்திருக்கிறார்கள். இப்போது உலகத்துள்ள புஸ்தகங்களில் இதுவே மிக பளுவுள்ள புஸ்தகமாம்.

How Old Are You?

உனக் கெத்தனை வயது ?—முத்தம்மாளை உனக்கு எத்தனை வயதென்றுகேட்க "எத்தனைவயதா! இரு பத்தாறுகூட நிறையவில்லையே? என்று மூக்கின் மேல் விரல்வைத்துப் பதில்சொன்னாள். "அந்தப் பேச்சு நிசந்தான், இப்போதுமட்டு மல்ல. இவள் வந்த நாலு வருஷமாக இந்தப்பேச்சே சொல்லிக்கொண்டிருக்கிறாள்" என்று பக்கத்திலிருந்த பார்வதி சொல்லி ஸ்திரப்படுத்தினாள்.

A Huge Tree.

ஒரு ப்ரமாண்டமான மரம்.—வட அமெரிக்காவைச் சேர்ந்த காலிபோர்னியாவில் ப்ரமாண்டமான மரம் ஒன்று வெட்டப்பட்டதாம். அதன் குறுக்களவு மாத்திரம் 18 அடியாம். இதே மரத்திலிருந்து அங்கே ஒரு பெரியகோயில் கட்டுவதற்கு வேண்டிய மரஸாமான்களெல்லாம் செய்து கொள்ளப்பட்டனவாம்.

A Blessed Land.

புண்ணிய பூமி.—உலகத்தில் பாக்கியமான நாடு ஐஸ்லாண்டு என்று சொல்லவேண்டும். ஏனெனில் அங்கே சிறைச்சாலைகளும், போலீஸ்க்காரரும் கிடையாதாம். ஜனங்கள் அவ்வளவு யோக்கியரெனச் சொல்லப்படுகிறது. சென்ற ஆயிர வருஷங்களில் இரண்டு களவுகள் நடந்தனவாம்.

A Curious Birth.

ஒரு விநோதப்பிறப்பு.—அம்மாபேட்டை திரௌபதையம்மன் கோவில் தெருவில் ஒரு பெண் குழந்தை பிறந்ததாம். அதற்கு இரண்டு கண்ணுமில்லை. மூக்கில்லை, உதடு இல்லை, ஒரு காதில்லை. இது எட்டாவது நாள் இறந்து போயிற்றாம்.

A Curious Tree.

ஒரு விநோத மரம்.—ஸயாம் தேசத்து முக்கிய பட்டணமாகிய பாங்காக்கில் விநோதமான மரமொன்றிருக்கிறது. அதன் அடிப்பாகம் 20 அடி உயரமாம்; அதிலிருக்கும் 20-40 இலைகள் 30 அடி நீளமும், ஓரடி அகலமு முடையனவாம். இவ்விலைகளின் காம்பைக் குத்தினால் அதிலிருந்து ஊற்றுப்போல் குளிர்ச்சியும் மதுரமுமான ஜலம் பெருகுகிறது. இம்மரம் பிரயாணிகளுக்கு மிகவும் உபயோகமுடையதாம்.

A Curious Man.

ஒரு விநோத மனிதன்.—டாக்டர் பாரெஸ் என்பவர் ஒரு அருமையான மனிதனைக்கண்டு பிடித்திருக்கிறார். அவன் 10–12 பைண்டு ஜலம் குடிக்கிறானாம்; குடித்த ஜலத்தை இஷ்டபடி முழுவதையும், கொஞ்சமாகவும், வெளிச்சுக்கொண்டு வருகிறானாம். மேலும், அவன் 4-5 தவளைகளையும், சிறு மீன்களையும் விழுங்கி, அவைகளை ஒரு மணிநேரம் வயிற்றில் வைத்திருந்து பின்பு அவைகளை உயிருடன் கக்கி விடுகிறானாம்.

Mortgaging the Wife.

மனைவியை அடமானம் வைத்தல்.—ஜப்பானில் ஒரு தச்சன் தன் அவஸரத்திற்காகத் தன்மனைவியை ஒரு நண்பனிடம் 800 என் (ஓர் வகைநாணயம்) னுக்கு அடமானம் வைத்தான். அதன்பின் அவன் அந்தக்கடனைக் கொடுப்பதற்காக 3 வருஷம் கஷ்ட ஜீவனம்பண்ணி பணத்தைத் திருப்பிக் கொடுத்து, மனைவியைவிட்டு விடும்படி கேட்கவே, அவனும் இசையவில்லை, அவளும் புருஷனிடஞ் சேர இஷ்டப்படவில்லை. இவ்வளவில் இருவருக்கும் சண்டை வந்துவிட்டது. வழக்கு விசாரிக்கப்படுகிறதாம்.

Marriage Method.

விவாக முறை.—உலகம் பலவிதம். தேசந்தோறும் பல வித்தியாஸங்கள் காணப்படுகின்றன. ரீமர் என்பது திபேத்து தேசத்திலுள்ள ஒரு இடம். இவ்விடத்திலுள்ளவர்கள் அநுஸரிக்கும் விவாகமுறைகள் அத்தியாச்சரியமானவையென்றே சொல்லவேண்டும். பிள்ளை வீட்டுக்காரன் பல ஸ்நேகிதர்களை யழைத்துக்கொண்டு பெண்வீட்டுக்குப்போக, அங்கே அவர்களும் பலரைச்சேர்த்து வைத்திருப்பார்கள். இரண்டு கட்சியார்களும் வம்பு வளர்த்துக்கொண்டு கொஞ்சநேரம் சண்டைபோடுவார்கள். பிறகு ஸமாதானஞ் செய்துகொண்டு, சேர்ந்து விருந்துண்கவே, கலியாணம் நடைபெற்றதாகும்.

HINTS AND RECIPES.
யுக்திகளும் முறைகளும்.

Testing Diamonds.

வைரம் பரிசோதிக்கும் முறை.—போலி வைரங்களும் இமிடேஷன் ரத்தினங்களும் வேண்டிய அளவு மலிவாய்க் கிடைக்கும் இக்காலத்தில், வைரத்தைப் பரிசோதிக்கும் முறையை அனைவரும் அறிந்து வைத்திருத்தல் அவசியமாகும். ஒரு கடுதாசி அட்டையிலே ஊசியினால் ஒரு சிறு துவாரத்தைச் செய்து வைரம் என்று சொல்லப்படுகிற கல்லின் வழியாய் அந்த துவாரத்தைப் பார்த்தால், வைரம் மெய்யானால் ஒரே துவாரமும், அது பொய்யானால் இரண்டு துவாரங்களும் கண்ணிற்குப் புலப்படுமாம். இன்னொரு முறை வைரத்தின் வழியாய் தன் விரலைப் பார்த்தால் அது எப்பொழுதும்போலிருந்தால் வைரம் மெய்யும், அது பெருத்துப்பிரிந்து தோன்றினால் பொய்யுமாம்.

How to make Soda water.

ஸோடா வாட்டர் செய்யும் முறை.—இரண்டு டம்ளர்களில் குளிர்ந்த ஜலம் எடுத்து ஒன்றில் அரைத்தேக் கரண்டியளவு கார்பொனெட் ஆப் சோடாவும் மற்றொன்றில் அதேயளவு டார்டாரிக் ஆஸிட்டும் போட்டு இரண்டும் தனித்தனி கரைந்தபின் இரண்டாவது டம்ளரில் இருக்கும் ஜலத்தை முதல் டம்ளரில் ஊற்ற, உடனே அந்த ஜலத்தில் வாயுவின் சக்தியால் ஓர் வகை கொக்களிப்புண்டாகும். அப்போது யாதொரு தாமஸமுமின்றி குடித்து விடவும். ஷாப்புகளிலிருக்கும் ஸோடா வாட்டரின் குணங்களெல்லாம் இதற்கு முண்டு. இவ்வாறு நாமே செய்வதனால் புட்டி 1-க்கு ஒரு அணா கிரயம் கொடுத்து வாங்கும் ஸோடாவாட்டர் ஒரு பைஸாச் செலவோடு முடியும்.

Unused Boots.

உபயோகப்படுத்தாத பூட்ஸுகள்.—காலுக்குப் போட்டுக்கொள்ளும் பூட்ஸுகள் நனைந்போனலாவது அல்லது சிலகாலம் போட்டுக்கொள்ளாமலிருந்தாலாவது விறைத்துப்போய் காலுக்குப் போட்டுக்கொண்டால் கஷ்டமாயிருக்கும். இதற்கு கொஞ்சம் துணியை எடுத்து வாஸலைனில் தோய்த்து பூட்ஸின் நாலாபக்கத்திலும் நன்றாய்த் தேய்த்து மறுபடியும் அதை காய்ந்த துணியால் துடைத்து விட்டால் பூட்ஸ் போட்டுக் கொள்வதற்கு ஸௌகரியமாயும் ஸுகமாயு மிருக்கும்.

An Error in Account.

கணக்கில் ஒரு தப்பு.—அமெரிக்காவில் ஒரு தானிய வியாபாரிக் கணக்கில் ஸரியாக 100 டாலர் வித்தியாஸப்பட்டதாம். அந்தத் தொகையேதான் கையிருப்பு ரொக்கத்திலும் குறைவாயிருந்ததாம். இன்னார் எடுத்திருக்கக் கூடுமென்று தெரியவில்லையாம். இதைக் கண்டு பிடிப்பதற்காக 100 டாலர்களுக்கு மேலேயே செலவுசெய்தாராம். 7௴ ஒரு கணக்கு நிபுணர் புஸ்தகங்களை யெல்லாம் மறுபடியும் மறுபடியும் சோதித்துப்பார்த்தார். ஒன்றும் அகப்படவில்லை. கடைசியாக ஒருநாள் கணக்குகளை மறுமடியும் பரிசோதிக்கும்போது ஒரு அம்சத்துக்கு எதிரில் 150 டாலர் என்று எழுதியிருந்தது. அப்பொழுது 150 ல் உள்ள 1-ன்மேல் பென்ஸிலின் முனையை நிறுத்திக்கொண்டு நின்றபோது அந்த 1 இரண்டு துண்டுகளாக உடைந்து காகிதத்தின் வழியாய் கீழே விழுந்தது. அந்தத் துண்டுகளை எடுத்துப் பார்க்கும்பொழுது அவை இரண்டும் ஒரு ஈயின் காலாம். அது 50க்கு முன்னால் ஒட்டிக்கொண்டு விட்டது. அதனால் ஸரியாக 100 டாலர் கணக்கில் ஏறிவிட்டது என்று ஏற்பட்டது.

To Preserve Books.

புஸ்தகங்களைக் காப்பாற்ற.—சில வருஷங்கள் போனால் புஸ்தகங்களை பூச்சி புழுக்கள் அடித்தும் அரித்தும், விடுகின்றன. இப்படிப்பட்ட நஷ்டங்கள் இந்தியாவிலுள்ள புஸ்தகசாலைகளில் ரொம்ப ஜாஸ்தி. இதைத் தடுக்க பின்வருமாறு செய்யலாம்:—சுத்திசெய்த சாராயம் 1 ஔன்ஸ், கர்ரோஸிவ் ஸப்ளிமேட் 10 க்ரேயின், சூடம் 20 க்ரேயின், சுட்டபடிக்காரம் ஒரு சிட்டிக்கை, இவைகளை யெல்லாம் சேர்த்துக் கலக்கி ஒரு மெல்லிய புருஷால் எடுத்து புஸ்தகங்களின் அட்டைகளின் மேலும் ஏடுகள் ஒவ்வொன்றுக்கும் மத்தியில் தைத்திருக்கும் 2, 3 இடங்களுக்கு சமீபத்திலும் தடவவும்.

Remedy For Smallpox.

பெரியம்மைக்குச் சிகிச்சை.—"க்ரீம் ஆப் டார்ட்டர்" பெரியம்மைக்கு கைகண்ட மருந்தாம். எவ்வளவு கடுமையான பெரியம்மை போட்டினாலும் அதை உபயோகித்தால் 3 நாளில் சொஸ்தமாய்விடுமாம். அதை உபயோகிக்கும் விதம் பின்வருமாறு. ஒரு ஔன்ஸ் க்ரீம் ஆப் டார்ட்டரை எடுத்து ஒரு பயின்ட் தண்ணீரில் கலக்கவேண்டும். இதை ஜில்லென்று இருக்கும்போது அடிக்கடி குடித்துவந்தால் நிச்சயமாய் அம்மை சொஸ்தமாய்விடுமாம். இப்படிக்கு எத்தனையோ ஆயிரம்பேர்களுக்கு சொஸ்தமாயிருக்கிறதாம். அம்மை வடுவென்பதே விழாதாம். கண் ஒரு பொழுதும் குருடே ஆகாதாம்.

ECONOMIC LITERATURE.

பொருளாதார ஸம்பந்தமான பிரசுரங்கள்.

Some Facts about Tanjore Landholders.

தஞ்சாவூர் மிராசுதார்களைப்பற்றிய சில விஷயங்கள்.—நாளது மேமாஸம் கும்பகோணத்தில் நடந்த மாகாண கான்பெரென்ஸில் உபசரணைக் கம்மிட்டியின் சேர்மனுயிருந்த ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியர் தஞ்சாவூர் ஜில்லா மிராசுதார்களின் குறைகளைப்பற்றி பின்வருமாறு பேசினுர்:—

இந்த ஜில்லா மிராசுதாரர்கள் பெரிதாய் எண்ணும் மூன்று விஷயங்களை கவனிக்கும்படி தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன், அவைகளாவன:—(1) ரெவென்யூ ஸெடில்மெண்ட், (2) கூலியாட்கள் கப்பலேறிப்போதல், (3) பாய்ச்சல் வாய்க்கால் வெட்டுவித்தல். 18 வருஷத்திற்கு முன் இந்த ஜில்லாவில் தரம் பைஸல் செய்ததில் புதிதாக இரண்டு தரங்கள் ஏற்பட்டன. (1) வண்டல் களி (2) வண்டல் மிச்ரம். இப்படித்தரம் போட்டதற்குக் காரணம் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பூமியை செவ்வல் என்ருவது கரிசல் என்ருவது சொல்லக் கூடாமைதானும். இவ்விரண்டு வகுப்புகளும் ஐந்து உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. யாரும் பார்த்த உடனே ஒரு பூமியானது கரிசலா செவ்வலா என்று சொல்ல முடியும்; ஊன்றிப்பார்த்தால் கரிசல் செவ்வல்கள் களியா, மணலா, இவை இரண்டும் கலந்தவையா என்பதையும் சொல்லிவிடலாம். பார்த்தவுடனுவது அல்லது எவ்வளவு கவனம் வைத்தாலாவது ஒரு தரத்தை மற்ருென்றிலிருந்து தெரிந்துகொள்ளுதல் முடியாது. இதற்காக தரம் பைஸல் செய்யும் உத்தியோகஸ்தர் கிராமங்களுக்குப்போக ரஸ்தாக்களிருப்பதையும், அவைகளிலிருந்து நெல்லு முதலானவைகளைக் கொண்டுபோய் விற்கக்கூடிய இடங்களின் ஸமீபத்தையும், பாய்ச்சல் ஸௌகரியங்களையும், கவனிக்கிருர்கள். ஸர்க்காருக்கு எந்த (ஸார்ட்டு) அதாவது உள் வகுப்பு அதிகத் தீர்வையைக் கொண்டுவரும் என்பதையே அவர்கள் முக்கியமாய் கவனிக்கிருர்கள். ஆகையாலேதான் மேல் உத்தியோகஸ்தர்கள் நிரம்ப கவனமாய் பரிசீலனை செய்தும், மாயவரம், கும்பகோணம், நன்னிலம் தாலூகாக்களில் நிலங்கள் உயர்ந்த தரத்தில் போடப்பட்டன. ஆகவே ரெவினியூ அபாரமாக உயர்ந்துவிட்டது. மிராசுதாரர்கள் தெரிவித்துக்கொண்டதின்பேரில் ரெவினியூ போர்டாரும் கவர்ன்மெண்டாரும் தரம் உயர்ந்துபோட்டது வாஸ்தவம் என்று ஒப்புக்கொண்டு, உட்பிரிவைச்குறைத்து தரத்தைத் தாழ்த்தும்படியாக உத்தரவு பிறப்பித்தார்கள். இன்னும் சிறிது காலத்தில் வரும் ஸெட்டில்மெண்டில் இந்த விஷயங்கள் ஞாபகத்திலிருக்க வேண்டுமென்றும், கடைசியாக ஏற்பட்ட க்ளாஸ், உட்பிரிவுகள் மாறக்கூடாதென்றும், தஞ்சாவூர் ஜில்லா மிராசுதாரர்களாகிய நாங்கள் மிகவும் கவலையுள்ளவர்கள யிருக்கிரோம். வரப்போகிற ஸெட்டில்மெண்டில் கவர்ன்மெண்டார் பலமுறை சொல்லியிருக்கிறபடி விலைவாசி யொன்றே கவனிக்கப்படுமென்று நம்புகிருேம். 30 வருஷத்துக் கொருதரம் ஸெட்டில்மெண்டு செய்கிறதானது நாட்டின் க்ஷேமவிருத்தியைத் தடுக்கின்றது. ஒரு தலை முறையில் ஒரு ஸெட்டில் மெண்டுக்கு மேற்பட்டு வேண்டாமென்று இவ்வாறு செய்தார்போலும். ஜலரோகம் அதைப்போன்ற கொடிய வியாதிகளால் பீடிக்கப்படும் நம்மவரில் சிலர் 60,70 வயது வரையிலும் ஜீவந்தர்களா யிருக்கின்றமையால், ஒரு புருஷாயுஸிலேயே இரண்டு ஸெட்டில்மெண்டு மிகவும் கடுமையாயிருக்கின்றது. இப்போது ஏற்பட்டிருக்கும் நிலவரிகளை சாசவதமானதாகச் செய்யும்படி நாம் கவர்னமெண்டைக் கேட்க வேண்டாமா வென்றும், அது கூடாதானல், பின் 60 வருஷத்திற்கு ஒருமுறை ஸெட்டில்மெண்டு செய்யும்படி மனு செய்துகொள்ள வேண்டாமா வென்றும் இந்த ஸபை யோசிக்கவேண்டியது.

நம்முடைய கூலியாட்கள் கப்பலேறி வேறு தேசத்திற்குப்போய் விடுவதனுல் வியவஸாயவேலை வெகுவாகத் தடைப்பட்டுப்போகிறது. அதிகக் கூலியைத் தேடி அது அகப்படும் இடத்திற்குப் போகிற எவரையும் தடுக்க நமக்கு அதிகாரமில்லை. ஆனுல் நம்மிடத்தில் வியவஸாயவேலை செய்வதாய் முனபணம் வாங்கிக்கொண்டதை அவர்கள் திருப்பி நமக்குக்கொடுத்த பின்பு தான் அவர்கள் வேறு நாட்டிற்குப் போகவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிருேம். இதுவிஷயமாக இந்த ஸபையார் ஓர் தீர்மானஞ் செய்யவேண்டியது அவசியம்.

நம்முடைய பாய்ச்சல் வாய்க்கால்கள் எக்கலெடுத்துத் தூர்ந்துபோயிருக்கின்றன. கிராமவாஸிகள் சேர்ந்து வேலைசெய்ய வராமையினுல் குடி மராமத் ஆக்டின் நிபந்தனைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரும்படி ரெவின்யூ அதிகாரிகளுக்கு மனு செய்துகொள்ள அவசியமுண்டாகிறது. குடிமராமத் ஆக்டோ சிலவிஷயங்களில் குறைவுள்ளதென்றும், ரெவின்யூ உத்தியோகஸ்தர்களும் கவனிப்பதில்லை என்றும் புகார் உண்டு இந்தக் குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டியவை. துரைததனத்தாரும் மிராசுதாரர்களுடன் சேர்ந்து வாய்க்கால் தலைப்பிலிருந்து கிராம எல்லைவரையில் வாய்க்கால் வெட்டும்வேலைக்கு ஒத்தாசை செய்யவேண்டியது.

TAMIL LITERATURE.

தமிழ்க் கல்வி.

The Coronation of King George V and English to Tamil Calendar.

இங்கிலீஷ் தமிழ் ஜந்திரி.—இந்தப் புஸ்தகம் ஈரோட் வக்கீல் வி. ஸுப்ரமணிய அய்யரால் இயற்றப்பட்டது. 1807-ம் வருஷம் முதல் 1927-ம்௵வரையில் 120-வருஷங்களுக்கு இந்தப் புஸ்தகத்தைக் கொண்டு இங்கிலீஷ், தமிழ், எந்த வருஷத்துக்கு வேண்டுமானாலும், மாஸம் தேதி இவைகளைக் கண்டுபிடிக்கலாம். புஸ்தகத்தின் விலை அணா. 0—8—0

வேண்டியவர்கள் ஈரோட்டில் கே. எஸ். ராமஸுப்பய்யருக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.

Sanskrit First Reader.

ஸம்ஸ்கிருத முதல் ரீடர்.—இரண்டாவது பதிப்பு விலை அணா 0-4-0

Sanskrit Second Reader.

ஸம்ஸ்கிருத இரண்டாவது ரீடர்.—இரண்டாவது பதிப்பு விலை அணா 0-10-0

இவ்விரு ஸம்ஸ்கிருத புஸ்தகங்களாம் திருநெல்வேலி ஸீ. எம். காலேஜ் அஸிஸ்டெண்டு ஸம்ஸ்கிருத பண்டிதராகிய எஸ் ராமச்சந்திர நீலகண்ட சாஸ்திரிகளால் இயற்றப்பெற்றன.

Nala Chakravarti.

நள சக்ரவர்த்தி.—இது தஞ்சாவூர் ஸெயின்ட் பீட்டர்ஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ ஆர். ஸுப்ரமணிய அய்யரால் இயற்றப்பட்டது. தமிழ் நாட்டில் ப்ரவிசித்திபெற்று விளகும் நளசக்ரவர்த்தியின் சரித்திரத்தை நாடகரூபமாக செய்யப்பட்டிருக்கிறது. இந்நூலில் தெய்வபக்தி, ராஜதர்மம், பெண்கல்வி, கைத்தொழில் முதலிய விஷயங்கள் அங்கங்கே விசித்திரமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 0-4-0

The Mystery of Kokilam.

கோமதி கோகிலமானது.—இவ்வினிய செந்தமிழ்நாவல் பசுமலை ஹைஸ்கூல் தமிழ் பண்டிதராகிய என். ஆர். ஸுப்ரமணிய சர்மாவால் இயற்றப்பட்டது. இதில் கல்வியின் பெருமை, பெண்கல்வியின் அவசியம், பால்ய விதவாவிவாகம், பரோபகாரச் சிறப்பு, தீமை செய்தவர்களுக்கும் நன்மையையே செய்யவேண்டு மென்னுஞ் சால்பு, கற்பின்மேன்மை, நட்பின்தன்மை, "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையு" மென்ற உண்மை முதலிய பல நல்ல விஷயங்கள் அங்கங்கே ஸந்தர்ப்பத்திற் கேற்ப நன்றாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 0-10-0

The Benefits of British Rule in India.

ப்ரிட்டிஷ் ஆட்சியால் இந்தியா அடைந்திருக்கும் நன்மைகள்.—இது தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த சேங்காலிபுரம் ம-ா-ா-ஸ்ரீ. வி. பஞ்சாபகேச அய்யர் அவர்களால் இயற்றப்பெற்று ம-ா-ா-ஸ்ரீ, ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாச்சாரியார். பி. ஏ. அவர்களின் முகவுரையுடன் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

ப்ரிட்டிஷ் ஆட்சியின் கீழ் நமக்குண்டான நன்மைகளை 20 தலைப்பின்கீழ் தர்க்கித்து ஒவ்வொன்றிலும் ப்ரிடிஷ் ஆட்சிக்குமுன்னும் தற்காலத்திலுமுள்ள தேசத்திய நிலைமையின் வித்யாஸங்களை யெடுத்துக்காட்டியிருக்கிறார்.

ப்ரிட்டிஷாரால் நமக்கு உண்டான சில நன்மைகளாவன:—

1. தேசீய ஒற்றுமையும் ஜன ஐக்கியமும்;
2, அமைதியும், ஸமாதானமும்;
3. நியாயமும் சட்டமும்.
4. நரபலி, உடன் கட்டையேறல் முதலிய கொடூரச்செயல்களை நிறுத்தல்.
5. கல்வி, தபால், தந்திகள், போக்குவரவு ஸாதனங்கள் முதலிய அபிவிருத்தியால், இந்தியாவின் கைத்தொழில்கள், நாகரீகம், முதலியவைகளை விருத்தியாகுதல்.

இச்சிறு புஸ்தகம் தபால்செலவுக்காக ஒரு அணா தபால் ஸ்டாம்பு அனுப்புவோர்களுக்கு இனமாகக் கொடுக்கப்படுமெனத் தெரிகிறது.

Savitri.

ஸாவித்ரீ.—இந்தத் தமிழ் நாடகம் கு. வே. சம்பந்த செட்டியாரால் இயற்றப்பெற்றது. "கற்புடை மாதரெல்லாங் கணவனே தெய்வ மென்பார்" என்றும், "கற்புடைச் சிந்தை மாதவர் கணவனையன்றி வேறோர் இற்புறத்தவரை நாடார்" என்றும் ஆன்றோர் கூறியபடித் தன் நாயகனையே தெய்வ மெனக்கொண்டு வழி படும் பெருந்தகைமை வாய்ந்த கற்புக்கரிசிகள் கொண்டாடும் ஸாவித்ரியின் திவ்ய சரித்திரத்தை நாடகரூபமாக ஆசிரியர் எழுதிருக்கிறார். "இந்நாடகத்தை வாசிக்கும் சகோதர சகோதிரிகள் இம்மை மறுமைப்பயனை யெளிதினிலடையும்படி, "மருவிய காதன் மனையாளுந் தானுமிருவரும் பூண்டேர்ப்பினல்லால் ஒருவரால் இவ்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான் சகடம் செல்லாது தெற்றிற்று நின்று" என்ற சான்றோர் முதுமொழிக்கிணங்க இந்நாடகத் தலைவன் தலைவிகளாகிய சத்தியவந்தனையும் ஸாவித்ரியையும்போல் நடந்துக்கொள்ள வேண்டு மென்பதே இந்தப் புஸ்தகத்தின் முக்கியக் கருத்து.

MISCELLANEOUS NEWS.

நாநா ஸங்கதி.

An Agricultural Engineer.

ஒரு விவஸாய இஞ்சினீர்.—பஞ்சாப மாகாணத்துக்கு ஒரு விவஸாய இஞ்சினீரை 2-வருஷத்துக்கு வைத்துப்பார்ப்பதாய் அந்த கவர்ன்மெண்டார் தீர்மானித்தபடி சாங்கிஷனாயிருக்கிறது.

Earthquake in Rangoon.

ரங்கோனில் பூகம்பம்.—ரங்கோனில் சிலநாளாகப் பூகம்பங்கள் பல உண்டாயின; அவற்றுள் இம்மே மாதம் 23 ந் தேதியிலுண்டான பூகம்பம் ஒருமணி நேரமிருந்ததாம். மெய்மியோவில் துருப்புக்களிருக்கு மிடங்கள் சேதமாயினவாம். பார்டர்பட்டாளத்தின் சோல்ஜர்களிருக்கு மிடமும், கவர்ன்மெண்ட் ஹவுஸும், இதரபங்களாக்களும் சேதமானபடியால் எல்லாரும் கூடாரங்களில் வசிக்கின்றனராம். கடைவீதியில் சேதமதிகமில்லை; ரயில்வே லயனிலுள்ள கிளப்பின் ஒருசுவர் விழுந்துஒருவனைக் காயப்படுத்தியது; சிம்னியும் விழுந்துவிட்டது. அனேக கோயில்கள் சேதமாயின; அவற்றுள் பிரசித்தமான நாயங்கிரி கோவிலுமொன்றும்.

A Reform Marriage.

ஒரு ஆசாரத் திருந்த விவாஹம்.—மங்களூர் மிஸ்டர் கெ. ரெங்கராவ் தாழ்ந்த வகுப்பாரை ஈடேற்றுவதில் விசேஷ அக்கரை பாராட்டுகிறவர். அவர் ஜாதியில் ப்ராமணரானாலும் இப்போது ப்ராமோவாய் (ப்ரமஸமாஜத்தைச் சேர்ந்தவராய்) இருந்து வருகிறார். அவருடைய குமாரத்திகளில் ஒருத்தி பி. ஏ. பரீட்சைக்குப் போயிருக்கிறாள். கூடிய சீக்கிரத்தில் பட்டதாரியாய் விடவும் கூடும். அவள் கூடிய சீக்கிரத்தில் ஒரு ஜமீன்தாரைக் கலியாணஞ் செய்துகொள்ளப்போகிறாளென்று பம்பாய் இந்தியன் ஸ்பெக்டேட்டர் பத்திரிகை சொல்லுகிறது. அந்த ஜமீன்தார் ஜாதியில் ப்ராமணர் அல்லரென்றும், பிராமணரல்லாதவருக்கு தமது குமாரத்தியைக் கலியாணஞ் செய்துகொடுக்க மிஸ்டர் ரெங்கராவ் தீர்மானித்திருப்பது அவருடைய மனோ தைரியத்தையும், ஆசாரத திருத்தக் கொள்கையின் முதிர்ச்சியையும் காட்டுகிறதென்றும் அப்பத்திரிகை கூறுகிறது. மிஸ்டர் ரெங்கராவ் ப்ரம ஸமாஜி யாதலால் அவருக்கு ஜாதி வித்தியாஸமில்லை. வங்காளத்தில் ப்ரம ஸமாஜிகளாயுள்ளவர்கள் ஜாதி வித்தியாஸம் பாராமல் ஜாதிவிட்டு ஜாதி கலியாணம் செய்திருக்கிறார்கள்.

Remission.

ரெமிஷன்.—ஜிராயடி அதாவது ரயத்வாரி நிலங்களுக்குள் நன்செய் நிலங்களில் எந்த வயலிலாவது $5\frac{1}{2}$ அணா விளைவுக்கு மேல் கிடைக்காம லிருக்கும் பட்சத்தில், அஸெஸ்மென்டை வஜாசெய்து விடுவதாக ரூல் செய்யவேண்டுமென்று நாளது மேமீ த்தில் உதகமண்டலத்தில் கூடிய சட்ட ஸபையில் கனம் ராகவராவ் ப்ரேரித்தார். இதை மற்ற மெம்பர்களும் ஆதரித்துப் பேசினார்கள். மிஸ்டர் ராகவராவ் தம் ப்ரேரணைக்குப் பலமாகப் பழைய கவர்ன்மெண்ட் ரிக்கார்டுகளிலிருந்து பல ஆதாரங்களை எடுத்துச் சொல்லி, வாயில்லாத ஏழைகளாகிய ரயத்துகளிடத்தில் தயவு கூர்ந்தாவது இப்படி ஒழுங்கு செய்யவேண்டுமென்று சொன்னார். இதற்கு ஆனரபில் மிஸ்டர் அட்கின்ஸன் ஒரு நீண்ட பேச்சுப்பேசி விரோதமாக பதில் சொன்னார். ஸர்க்கார் ரயத்வாரி நிலங்களில் அஸெஸ்மெண்ட் செய்யும் விதத்தைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லி, விவஸாயிகளுக்கு வேண்டிய ஸகல ஸாதகங்களையும் ஸெட்டில்மெண்ட் ஆபீஸர்கள் செய்கிறார்களென்றும், கவர்ன்மெண்ட் அஸெஸ்மெண்டினால், விவஸாயிகள் ஏழைகளாக வில்லையென்றும் வாதித்தார். விவஸாயிகள் என்பவர்கள் யார்? ரயத்துவாரி நிலங்களில் பாதிக்குமேல் மிராசுதார்களே அனுபவித்து குடிகளிடத்தில் வாரம் வாங்குகிறார்கள். இவர்கள் வேலை செய்யாமலே கவர்ன்மெண்ட் அஸெஸ்மெண்டையும் குடிவாரத்தையும் கொடுத்துவிட்டு மீதிலாபம் அனைத்தையும் அனுபவிக்கிறார்கள். கவர்ன்மெண்ட் வரியை வஜாசெய்தால் இவர்கள் நன்மை பெறுவார்களே யன்றி, நிலத்தைக் கஷ்டப்பட்டுப் பயிர்செய்யும் குடியானவர்கள் லாபம் பெறமாட்டார்கள். மிராசுதார்கள் கவர்ன்மெண்டுக்கு ஐந்து ரூபாய் அஸெஸ்மெண்ட் கொடுத்து விட்டு, இருபது, முப்பது, நாற்பது என்று தங்கள் பெட்டியில் போடுகிறார்கள். இவர்களுக்கு கவர்ன்மெண்ட் ஒத்தாசை வேண்டியதில்லை. குடியானவர்களுடைய நிலைமையைப்பற்றி கவர்ன்மெண்டுக்கு அதிகமாய்த் தெரிய நியாயமில்லை. அது தெரிய வேண்டுமானால் பெருத்த விசாரணை நடத்த வேண்டும். குடியானவர்களுக்கு ஒத்தாசை வேண்டுமானால் அது கவர்ன்மெண்டிடத்திலிருந்து வரவேண்டும். கவர்ன்மெண்டுக்கு நேராக வரி செலுத்தும் விவஸாயிகளோ வென்றால், அவர்கள் அநேகமாய் ஏழைகளானாலும் கவர்ன்மெண்ட் செய்யக்கூடிய எல்லா ஸகாயமும் செய்யப்பட்டு வருகிறது. மிஸ்டர் ராகவராவின் தீர்மானம் நிறைவேறினால் கவர்ன்மெண்ட் ரெவினியூ நஷ்டமாவதுமன்றி, நிலங்களைக் கவர்ன்மெண்டுரெவினியூ உத்தியோகஸ்தர் மாசூல் காலத்தில்போய்ப் பரிசோதிப்பது முதலிய கஷ்டங்கள் நேரிடும். இந்த நியாயங்களின்பேரில் மிஸ்டர் ராகவராவின் தீர்மானத்திற்கு மிஸ்டர் அட்கின்ஸன் விரோதமாய்ப் பேச, அது நிறைவேறாமற் போயிற்று.

The Death of the Tanjore Rani.

தஞ்சை ராணி காலஞ்சென்றார்.—தஞ்சை சிவாஜி மாஹாராஜா குடும்பத்தைச் சேர்ந்த மகாராஷ்டிர வம்சத்தி லுதித்த ராணியார் 3-ந்தேதி மாலை தஞ்சை

யில் திடீரென்று மரணமடைந்தார் என்று கேட்டு விசனப்படுகிறோம். சென்ற வருஷம் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் எழுதிவைத்த உயில்படிக்கு, காலஞ்சென்ற ராணியாரின் இரண்டு பௌத்திரர்களான ஸ்ரீசிவாஜி ராஜா சாஹேபுக்கும் ஸ்ரீப்ரதாபஸிங் ராஜா சாஹேபுக்கும், எஸ்டேட்டுகள் முழுமையும் சேரவேண்டும். அரண்மனை தேவஸ்தானம் மானேஜ்மெண்டைக் காலஞ்சென்ற ராணியார் தாமே நேரில் இவ்விருவருக்கும் ஒப்புவித்திருந்தார். அதை இவர்கள் இருவரும் மானேஜ் செய்துகொண்டு வருகிறார்கள். ஆனால் ராணிக்குச் சேர்ந்த ஸகல ஸொத்துக்களையும் ஆபீஸர்கள் பரிசோதித்து, அவைகளைப் பத்திரமாக வைத்து ஸீல் செய்திருக்கிறார்கள். காலஞ்சென்ற ராணியின் பந்துக்களுள் பலர், மேற்கண்ட ஸொத்திற்குப் பாத்தியதை தங்களுக்கு உண்டு என்பதை ருஜுப்படுத்த எண்ணி, வக்கீல்களுடன் ஆலோசித்து வருகிறார்கள். ஸிவில் கோர்ட்டு திறப்பதை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

The Girls' Protection Bill

பெண்பாலாரின் பாதுகாப்பு மசோதா.—ஆனரெபில் மிஸ்டர் தாதாபாய் இந்தியா சட்டஸபையில் பெண்பாலர் வேசைத்தொழில் முதலான துன்மார்க்கத்தொழில்களுக்குத் தயார் செய்யப்படாமல் அவர்களைப் பாதுகாக்கப் பெண்பலாரின் பாதுகாப்பு மசோதாவொன்றை பிரேரிக்க உத்தரவுகேட்டு விட்டிருந்தார். அவர் கேட்டுக்கொண்டிருந்தபடி உத்தரவு கொடுக்கப்பட்டுப்போயிற்று. ஸிம்லாவில் நடக்கும் இந்தியா சட்டஸபை மீட்டிங்கில் ஆனரெபில் மிஸ்டர் தாதாபாய் தமது மசோதாவைப் பிரேரிக்கக் கூடும்.

The Madras Forest Committee.

சென்னை பாரெஸ்ட் கமிட்டி.—ஸர் என். ஹாமிக் காட்டிலாகா விஷயங்களை விசாரணை செய்ய ஆனரெபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை வேண்டிக்கொண்டபடி ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார். அந்தக் கமிட்டி இந்தமாம் 20-ந்தேதி நெல்லூரில் கூடி சாட்சிகளை விசாரணை செய்யப்போகிறது. அந்த கமிட்டிக்கு ஆனரெபில் மிஸ்டர் டப்ள்யூ. ஒ. ஹோரன் ப்ரெஸிடெண்டென்றும், ஆனரெபில் மிஸ்டர் பி. கேசவப்பிள்ளையும், ஆனரெபில் மிஸ்டர் எம். ராமச்சந்திர ராவும், மிஸ்டர் பாடிஸனும், மிஸ்டர் ஜே. எஸ். ஸ்காட்டும், மெம்பர்கள்.

The Arya Vaisya Conference.

ஆ்ய வைச்யர்களின் கான்பரேன்ஸ்.—இந்த மாஸம் 23-ம் தேதிமுதல் மூன்றுதினங்களுக்கு இந்த ராஜதானியில் பல இடங்களிலுள்ளவைசியர்கள்கூடி கும்பகோணத்தில் ஒரு கான்பரென்ஸ் நடத்தினார்கள். அதற்கு காக்கினாடாவில் ப்ரபல வர்த்தகரான நாளம் பத்மநாபம் அக்ராஸனாதிபதியாயிருந்தார். இந்த கான்பரென்ஸில் செய்த முக்கிய தீர்மானங்களாவன:—

சக்கரவர்த்தி தம்பதிகள் மகுடாபிஷேக வைபவத்தை டில்லியில் நடத்தியதற்கும் இந்தியர்களுக்கு அளித்த நன்கொடைகளுக்கும் ராஜபக்தியுடனும் மனப்பூர்வமாயும் வந்தனத்துடனும் நன்றியறிதலைத் தெரிவித்தார்கள்.

வைசிய பிள்ளைகளுக்கு முக்கியமாய் வியாபாரத்தின் மேல்நாட்டு மர்மங்களையும் வர்த்தக விருத்திக்குரிய விஷயங்களையும் கல்வியுடன் சேர்த்துச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

வைசியப் பெண்களுக்கு வித்தியாபிவிருத்தியுடன் பாக சாஸ்திரம், ஸன்மார்க்கவழி, சித்திரம் வரைதல், ஸங்கீதப் பயிற்சி, இவைகளையும் போதிக்க வேண்டும்.

16 வயதுக்கு மேற்பட்ட புருஷனுக்கும் 10 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும்தான் விவாகம் செய்யவேண்டும். அதற்குக் குறைந்த வயதுள்ளவர்களுக்குக் கண்டிப்பாய் விவாகம் செய்யக்கூடாது.

விருத்த புருஷனுக்கு விவாகம் செய்யக்கூடாது.

கன்னியா சுல்கம், வரசுல்கம் முதலியவை வாங்கக்கூடாது.

விவாக காலங்களில் வீண்செலவு கூடாது.

வைசிய பாலர்களுக்கு 12-வயதுக்குள் கண்டிப்பாக உபநயனம் செய்துவிடவேண்டும்.

வைசியர்கள் வேதோக்தமாக ஷோடச கர்மங்களைச் செய்யவேண்டும்.

பிரதி முக்கிய பட்டணங்களிலும் வைசியர்களின் பஞ்சாயத்து ஸபை ஏற்படுத்தி அதிலேயே வைசியர்களுடைய விவகாரங்களைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

பிரதி முக்கிய பட்டணங்களிலும் வர்த்தக சங்கங்கள் ஏற்படுத்தி வர்த்தக விருத்திக்குரிய விஷயங்களை உடனுக்குடன் அறிவிக்கவேண்டும்.

சென்னையி லிருக்கிற தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்கிற வர்த்தக சங்கத்தில் பிரதி பட்டணத்திலிருந்தும் வைசியர்கள் மெம்பர்களாகச் சேரவேண்டும்.

வைசிய பத்திரிகைக்குப் பிரதி பட்டணங்களிலும் பிரதி கிராமங்களிலு மிருக்கிற வைசியர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரர்களாகச் சேரவேண்டும்.

சென்னை கன்னிகா பரமேசுவரி தேவஸ்தான மானேஜ்மெண்டு கமிட்டியார்களால் வைசிய பாலர்களுக்கு வித்தியாபிவிருத்திக்காகப் பலவிதமாய் ஸகாயம்செயது வருவதற்கும், சென்ற வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷத்தில் வித்தியாபி விருத்திக்குச் சுமார் ரூபாய் 5,000 கொடுத்து உதவிபுரிந்ததற்கும் இந்தக் கான்பரன்ஸ் மனப் பூர்வமான வந்தனம செலுத்துகிறது.

The Kumbakonam Provincial Conference.

கும்பகோணம் மாகாண ப்ரேவின்ஷியல் கான்பரென்ஸ்:— இந்த வருஷம் கும்பகோணத்தில் நாளது மேமாஸம் 8, 9, 10-ம் தேதிகளில் கூடிற்று. அப்பொழுது ராவ்பகதூர் வி. கே. ராமாநுஜாசாரி

யார் வந்த டெலிகேட்டுகளை நல்வரவேற்று ஒரு உபந்நியாஸம் செய்தார். அதில் கும்பகோணத்தின் மகிமையைப்பற்றி பின் வருமாறு சொன்னார்.

ஒருகாலத்தில் கும்பகோணம் இந்த ஜில்லாவுக்கே தலைநகராயிருந்தது. அந்தப் பெருமை இப்போதில்லாவிடினும் பிரஸித்தியில் குறைவில்லை. காவிரியின் தென்கரையிலுள்ள இந்தப்பட்டணத்தில் தேவாலயங்கள் அனேக மிருக்கின்றமையால், யாத்திரைக்காரர்கள் மிகுதியாக இங்கே வருகிறார்கள். ஊரிலுள்ள குளங்களில் மிகவும் பெரிதான மகாமகக் குளத்தில் ஸ்நானஞ்செய்வதற்குப் பன்னிரண்டு வருஷத்திற்கொருமுறை வெகு ஜனங்கள் கூடுகிறார்கள். இந்தப் பட்டணம் கொஞ்ச நாளைக்கு முன் ஸமஸ்கிருதப் படிப்பு விஷயத்தில் பெயர்போனதாக விருந்தது. இந்த நகரவாசிகளில் அனேகர் சதுசாஸ்திர பண்டிதர்களா யிருந்தார்கள். மற்ற விடங்களில் ஸமஸ்கிருதப்படிப்புக்கு க்ஷீணதசை உண்டாயிருப்பதுபோல இந்த ஊருக்கும் வந்திருக்கிறது. ஸர்க்கார் காலேஜும் ஒன்று இங்குண்டு. போர்டர், கோபாலராவ், என்ற மகான்கள் மேற்படி காலேஜுக்கு அதிபதிகளாக இருந்தகாலத்தில் "தென் இந்தியா கேம்பிரிட்ஜ்" என்று கும்பகோணத்திற்கு பட்டப்பெயர் வழங்கிவந்தது. அந்தப்பெருமை இப்பொழுது இருப்பதாகக் காதில் படாமல் போனபோதிலும் காலேஜ் மாணக்கர்கள் இந்த ராஜதானியிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் பற்பல விருத்திகளில் அமர்ந்திருக்கிறார்கள். கும்பகோணம் கைத்தொழிலுக்காகவும் பெயர்போனது, தென்பாதியிலுள்ள ஸௌராஷ்டரஜாதியார் பம்பாயிலிருந்து ஏராளமான பட்டுகளைத்தருவித்து சென்னப்பட்டணம் முதலான விடங்களில் கொரநாட்டுச் சேலைகளென்று சொல்லப்பட்ட பட்டு வஸ்திரங்கள் செய்கிறார்கள். தென்மேற்கிலுள்ளவர்கள் பித்தளைப் பாத்திரங்கள் செய்து பக்கத்திலுள்ள ஜில்லாக்களில் விலையாக்குகிறார்கள். ஆனால் தொழிலாளிகள் ஐகமத்தியத்தையும் யந்திர உபயோகத்தையும் தெரிந்துகொண்டார்களில்லை. வியாஜ்யமாடுவதிலும் இந்தப் பட்டணம் முதன்மைபெற்றிருக்கிறது. இந்தவூரில் இரண்டு ஸப் கோர்ட்டுகளும், இரண்டு முன்ஸீப் கோர்ட்டுகளும் இருக்கின்றன. கொசுக்களின் உபத்திரவம் மிகுதியாக இருப்பதினால் ராத்திரியில் கொசுவலை இல்லாவிட்டால் தூக்கம் பிடிப்பது துர்லபம்.

பிறகு, சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் இந்தியாவுக்கு விஜயம் செய்ததால் உண்டான நன்மைகளையும், தேச நன்மைக்காக எல்லாரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டியதின் அவசியத்தையும், பெரிய குடித்தனக்காரர்கள், தனவான்கள் பென்ஷன் பெற்ற உத்யோகஸ்தர்கள், இவர்கள் செய்யவேண்டியகடமைகளையும், ஸபைகள் கூடுவதால் உண்டாகும் நன்மைகளையும்,எடுத்துக்காட்டிவிட்டு தஞ்சாவூர் மிராசுதாரர்கள் பெரிதாய் எண்ணும் சில விஷயங்களைச்சொல்லி அவைகளை டெலிகேட்டுகள் கவனிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

OPENINGS FOR BUSINESS.

வியாபாரம் நடக்கக்கூடிய இடங்கள்.

[அடியில்கண்ட வியாபாரங்களில் அக்கரையுள்ளவர்கள் "பிழைக்கும் வழியையும்" அந்தந்த நம்பரையும் குறிப்பிட்டு வேண்டிய விவரங்களுக்கு கல்கத்தாவில் டைரெக்டர் ஜெனரல் ஆப் கம்பர்ஷியல் இன்டெலிஜென்ஸ் என்னும் அதிகாரிக்கு எழுதவும்.]

Aloe Fibre.

கற்றாழை நார்.—பம்பாயிலுள்ள ஒரு வியாபாரிக்கு இந்தியாவில் கற்றாழைநார் வாங்குபவர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (B 1)

Axle Bushes.

இருசு வட்டைகள்.—இங்கிலாந்திலுள்ள ஒரு வியாபாரிக்கு வண்டிகளுக்கு வேண்டிய இருசு வட்டைகள் வாங்குபவர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (B 5)

Canned Goods.

டப்பியில் அடைத்த ஸாமான்கள்.—லண்டனிலுள்ள ஒரு வியாபாரி டப்பிகளில் அடைத்த ஸாமான்களை விற்பதற்கு கல்கத்தா, பம்பாய், மதராஸ் இந்த இடங்களில் ஏஜெண்டுகள் வேண்டும் என்கிறார்.(B6)

Oils.

எண்ணெய்கள்.—ட்ரீஸ்ட் நகரிலுள்ள ஒரு ப்ரிட்டிஷ் வியாபாரி இந்தியாவிலிருந்து எள்ளு முதலிய எண்ணெய் வித்துக்கள் ஏற்றுமதி செய்பவர்களுக்கு ஏஜெண்டாக இருக்க விரும்புகிறார். (B 7)

Coir and Kapok.

தென்னைநாரும் இலவம்பஞ்சும்.—லண்டனிலுள்ள ஒரு வியாபாரிக்கு தென்னைநாரும் இலவம்பஞ்சும் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (B 8)

Jute Sacks.

கோணிச் சாக்குகள்.—லண்டனிலுள்ள ஒரு வியாபாரிக்கு கோணிச்சாக்கு ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (B 9)

Cocoanut Oil.

தேங்காய் எண்ணெய்.—ஸ்வீடன் தேசத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு கொச்சியிலிருந்து தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸங்கள் தேவையாம். (B 10)

Soap Stone.

மாக்கல்.—ஒருவருக்கு இந்தியாவில் மாக்கல் வாங்குபவர்களுடைய விலாஸம்தேவையாம். (B 12

MADRAS MARKET REPORTS.

மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் மேமாஸம் 8-ம் வ ரிப்போர்ட்டுப்படி

Produce Market.--விளைபொருள்கள்

		ரூ.
ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு	...	18 முதல் 23
கொன்னைப்பட்டை ஷை	...	13 முதல் 14½
கடப்பை கடுக்காய் ஷை	...	10 முதல் 12
சேலம் ஷை ஷை	...	17 முதல் 18
நல்லெண்ணெய் ஷை	...	100 முதல் 110
புங்கம் எண்ணெய் ஷை	...	80 முதல் [illegible]5
எட்டிக்கொட்டை ஷை	...	13 முதல் 18
விளக்கெண்ணெய் ஷை	...	74–75
கொட்டை முத்து 164 ராத்தல்		10-10¼
		ரூ. அ. பை.
பந்தர் பச்சை அரிசி 44 படி	...	8 முதல் 9½
நெல்லூர் அரிசி 31 படி	...	7½ 7 10
கோதுமை 4 படி	...	
கொள்ளு 195 ராத்தல்	...	
வெங்காயம் (தாட்பத்திரி) பாரம்	...	
ஷை (பல்லாரி) ஷை	...	
பங்களூர் உருளைக்கிழங்கு	...	

Metals.—உலோகங்கள்.

		ரூ.
பித்தளைத் தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ‍ும் பாரம்	...	232
செப்புத் தகடுகள் பாரம்	...	280
செப்புக்கட்டி ஷை	...	240
நாகம் ஷை	...	80
ஷை (உள்ளூர்) ஷை	...	90
ஈயம் ஷை	...	60
காரீயம் ஷை	...	70
வெள்ளீயம் ஷை	..	210 வராகன்

Iron.—இரும்பு.

மருக்கி சட்டம் 2 நெ. பாரம்	ரூ.	25 முதல் 26
ஷைமை		42 முதல் 45
மருக்கி தகடு	6--9, 12—13,	26—40
ப்பாய்க் கட்டு	...	30
பட்டை எஃகு	...	23 முதல் 30
எஃகு வில்சட்டு	...	35
ரணைக் கம்பி மருக்கி 2 நெ.	...	24—29
மை	...	42—49

SEASON.

காலஸ்திதி.

Rainfall.

மழை.—1912ஹு ஏப்ரல்மீ 1வ யிலிருந்து 1912ஹு மேமீ 31வ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம், ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	1·63	2·87
வால்டேர்	0·74	3·15
காக்கிநடா	.	1·35
மசூலிப்பட்டணம்	0·19	1·82
நெல்லூர்	...	0·83
மதராஸ்	...	1·37
கூடலூர்	0·27	1·14
நாகப்பட்டணம்	0·42	2·21
பாம்பன்	1·63	2·96
கொழும்பு	29·34	23·49
திருவநந்தபுரம்	8·84	14·31
கொச்சி	15·07	18·30
கள்ளிக்கோட்டை	9·91	12·62
மங்களூர்	2·76	8·97
மெர்க்காரா	7·29	8·87
ஐதராபாத்	1·85	1·74
ரெய்ச்சூர்	...	...
பல்லாரி	1·63	2·79
கர்நூல்	0·64	1·93
கடப்பை	0 35	2·44
ஹாஸ்ஸான்	3·74	8·41
பெங்களூர்	1·79	5·67
கொடைக்கானல்	16·00	9·90
உதகமண்டலம்	6·96	...
கோயம்புத்தூர்	0·88	4.01
வேலூர்	0·44	...
சேலம்	3·95	6·98
திருச்சினப்பள்ளி	7·13	5·06
புதுக்கோட்டை	1·67	...
மதுரை	3·87	4·99
திருநெல்வேலி	3·81	4·68